**22–7–2014**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi--xxxi |
| **1. வினாக்கள் விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-56 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 56-60 |
| செல்வி கே. பாலபாரதி | 56-57 |
| திரு. அர. சக்கரபாணி | 57 |
| திரு. சு. குணசேகரன் | 57-59 |
| முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா | 58 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 59 |
| திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 59,60 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| தமிழகத்தின் சில பகுதிகளில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு | 60-84 |
| திரு. ஏ. லாசர் | 60,66-67 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 60-66,74-78, 81-82 |

| **3. கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி | பக்கங்கள் |
|---|---|
| திரு. சு. குணசேகரன் | 68-69 |
| *திரு. எ.வ. வேலு | 69-70 |
| திரு. துரைமுருகன் | 71,76 |
| முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 72 |
| திரு. எஸ். செந்தில்குமார் | 72-73 |
| *திரு. என்.ஆர். ரெங்கராஜன் | 73-74 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 74 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 79-83 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 80 |
| செல்வி கே. பாலபாரதி | 82 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு | 84-85 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் *4*—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 85-220 |
| *மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன் | 85,92,94-98, 100-101, 104-105, 112,127-129, 132,136-137, 141-142, 144-146, 148-149, 151-152, 154-155, 166-168, 170-171, 175-176, 193-217, 219 |





| **5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | பக்கங்கள் |
|---|---|
| *திரு. கு. நல்லதம்பி | 88,93-101, 103,109-113 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 102-103, 129-130, 133-134, 172, 179-180 |
| *மாண்புமிகு திரு. ப. மோகன் | 103,105-106, 108, 114-115 |
| திரு. எல். வெங்கடேசன் | 105-108 |
| மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் | 110-111 |
| திரு. வி.சி. சந்திரகுமார் | 83,114 |
| *திரு. இரா. தமிழ்ச்செல்வன் | 109,116-124 |
| திரு. ப. டில்லி பாபு | 87,125-128, 131-143,218 |
| மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி | 129 |
| *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 130 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 131-132,173 |
| மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் | 139,190 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 140-141,176 |
| செல்வி கே. பாலபாரதி | 90,143-144, 185 |
| *திரு. கு. லிங்கமுத்து | 91,144-149, 151,153-155 |
| திரு. சு. குணசேகரன் | 150 |
| *திரு. க. பாலகிருஷ்ணன் | 150-151,218 |

பக்கங்கள்

5. **மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| *திரு. ம. குணசேகரன் | 156-164 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 165-167, 169-172,174 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 168-169, 173,174, 176-179, 181-192 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 91,175 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 177 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 180 |
| மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா | 193 |
| *திரு. பி.வி. கதிரவன் | 86,218 |

6. **அறிவிப்பு**—

| | |
|---|---|
| திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல் | 124-125 |

| | |
|---|---|
| 7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 220-221 |


****

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஜய, ஆடி 6, திருவள்ளுவர் ஆண்டு–2045

## 2014 ஜூலை 22, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு."

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

## 1. வினாக்கள்–விடை

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**210—**

### புறவழிச் சாலை

***6070—திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, தஞ்சாவூர்–கும்பகோணம் நெடுஞ்சாலையில் உள்ள பசுபதிகோவில்–பாபநாசம் இடையே புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

[2014 ஜூலை 22

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தேசிய நெடுஞ்சாலை எண் 45சி–ல் கும்பகோணம் முதல் தஞ்சாவூர் வரை அமையவுள்ள புறவழிச் சாலையில், பசுபதிகோவில் முதல் பாபநாசம் வரை புறவழிச் சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

**திரு. இரா. துரைக்கண்ணு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கழகத்தின் காவல் தெய்வம், தமிழக மக்களின் கண்கண்ட தெய்வம், எங்கள் குல தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி, அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

*இந்தியாவிற்கே வழிகாட்டியாக, மற்ற மாநிலங்கள் எல்லாம் தமிழகத்தைப் பின்பற்றுகின்ற வகையில், தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வரும் சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களின் சீர்மிகு ஆட்சியில், மற்ற மாநிலங்கள் எல்லாம் பிரமிக்கின்ற வகையில், தமிழகத்தில் உள்ள போக்குவரத்துச் சாலைகளும், கிராமத்துச் சாலைகளும் தன்னிகரில்லா உயர்வுபெற்று மேம்பாடு அடைந்துள்ளன. இந்நிலையில், மக்களின் வசதிக்காக பஸ் போக்குவரத்து மற்றும் வாகனங்கள் பெருகி வருகின்றன. எனது பாபநாசம் தொகுதியில், ஆரம்ப ஊராட்சியான பசுபதிகோவிலிலிருந்து பாபநாசம் செல்கின்ற பாதை மிகவும் ஜனநெரிசல் உள்ள பகுதியாகும், அந்தப் பகுதியில் அதிக போக்குவரத்து இருக்கின்ற காரணத்தினால், அங்கு புறவழிச் சாலை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில், பாபநாசம் தொகுதியில், அம்மாப்பேட்டை ஒன்றியம், களக்குடிக்கும், பெலுகுடிக்கும் இடையே வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்றும், பாபநாசம் ஒன்றியம்,*



2014 ஜூலை 22]

*சுந்தரபெருமாள்கோவில்-அண்டகுடிக்கும் இடையே காவேரி மற்றும் அரசலாற்றின் குறுக்கே போக்குவரத்துப் பாலம் அமைத்துத் தர வேண்டுமென்றும் ஏற்கெனவே நான் சட்டமன்றத்தில் வினா எழுப்பியிருந்தேன்.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னதற்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து, மேலும், நான் கேட்ட பாலங்களை அமைத்துத் தர வேண்டுமென்று தங்களை வேண்டி கேட்டுக்கொள்கின்றேன். இந்தக் கோரிக்கைகளை கருணையே வடிவமாகக் கொண்ட கற்பகாம்பிகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டு, இதனை நிறைவேற்றித்தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 45சி–ல் விக்கிரவாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் சாலைப் பகுதியில் கிலோ மீட்டர் 0/0 முதல் கிலோ மீட்டர் 93/5 வரைக்கும் விக்கிரவாண்டி முதல் மீன்சுருட்டி வரையில் நான்கு வழித் தடமாகவும், மீன்சுருட்டியிலிருந்து தஞ்சாவூர் வரை கிலோ மீட்டர் 93/5 முதல் கிலோ மீட்டர் 165/0 வரைக்கும் தளமியடப்பட்ட புறத்துடன்கூடிய இரண்டு வழித்தடமாகவும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேம்படுத்தப்படவுள்ளது. கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் வரை கிலோ மீட்டர் 134/0 முதல் 163/6 வரை 29.60 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்படவுள்ள புறவழிச் சாலையில் பசுபதிகோவில்–பாபநாசம் இடையே புறவழிச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடன், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் புறவழிச் சாலை அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2014 ஜூலை 22

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பகுதிகளில் ஆற்றின் குறுக்கே மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார். அதனை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாகச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி, அவருடைய மலர்ப் பாதங்களை வணங்கி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

**திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூரில் மேம்பாலம் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்து, அங்கிருந்த தடைகளை அகற்றியுள்ளார் என்றாலும், அந்தப் பணிகள் துவங்கப்படாமல் உள்ளன. எனவே, அந்தப் பணிகளை விரைவாகத் தொடங்கிட வேண்டும். அந்த மேம்பாலத்தைக் கட்டுவதன்மூலம், அந்தப் பகுதி மக்கள் மட்டுமல்ல; அந்த வழியாகச் செல்லும் பல இலட்சம் வாகனங்கள், குறைவான நேரத்தில் செல்ல முடியும். எனவே, அந்தப் பணிகள் எப்போது துவக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போரூர் பாலத்தைப் பற்றி இங்கே சுட்டிக்காட்டினார்கள். இது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்ட பாலம். பாலம் கட்டுவதற்கு முன் நிலத்தைக் கையகப்படுத்தி, பிறகு பாலப் பணிகளை ஆரம்பித்திருந்தால், காலதாமதம் ஏற்பட்டிருக்காது. மேலும்,



2014 ஜூலை 22]

முதற்கட்டப் பணியான நில எடுப்புப் பணிகளையும் அவர்கள் செய்யவில்லை; இதுதான் காலதாமதத்திற்குக் காரணம். இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்ற பின்னர், வேகமாக இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பாலப் பணி நடக்கக்கூடிய பகுதியிலே, ஏற்கெனவே மாநகராட்சிமூலம் குழாய் பதிக்கப்பட்டிருக்கின்றது. அதை அகற்றாமலேயே தொழில்நுட்ப உதவியுடன் அந்தப் பகுதியிலேயே தாங்கு தூண்கள் அமைத்து, மேம்பாலப் பணிகளை ஆரம்பிப்பதற்கு இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகள் நிறைவுற்றவுடன், விரைவாக, அந்தப் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**211—**

## சொந்தக் கட்டடம்

***41356—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்பகோணம் நகரம், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு கும்பகோணம் நகராட்சியின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினமான 15–9–1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. கடந்த 32 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் அது இயங்கி வருவதாகத் தெரிகிறது. இந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின்கீழ் 56 மையங்கள் செயல்படுகின்றன. இப்பகுதியிலுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மார்களும் இதன்மூலம் பயன்பெறுகிறார்கள். எனவே, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கும்பகோணம் நகரத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஆவன செய்வாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முழுக்க, முழுக்க மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென்று நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ கட்டிக்கொள்வதற்கு எந்தவிதமான கருத்துருக்களும் அனுப்பப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய விருப்புரிமை அடிப்படையிலேதான் தமிழகத்தில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலேயும் கட்டப்பட்டு வருகின்றன. அதிலே வாடகைக் கட்டடத்திற்கு மத்திய அரசாங்கம் 5,800 ரூபாய் மட்டும்தான் தருகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்களின் பணிச்சுமையைக் கருதி, தமிழ்நாடு முழுவதும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்கிற மாண்புமிகு



2014 ஜூலை 22]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தீவிர நடவடிக்கையால் பல்வேறு மாவட்டங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேதான், கும்பகோணம் நகரத்திலே எந்த ஆண்டு தொடங்கியது என்றுகூடப் பார்க்காமல், இது உடனடியாகக் கட்டப்பட வேண்டுமென்று, நகராட்சிமூலம் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகர ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்தின் செயல்பாட்டிலே இயங்கிவரும் 56 மையங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்கிடவும், அவற்றில் அங்கன்வாடிப் பணியாளர் பதவிக்கான காலிப் பணியிடங்களை நிரப்பவும், கும்பகோணம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் ஏற்கெனவே இயங்கி வந்து தற்போது பழுதடைந்து இயங்காமல் உள்ள ஜீப்பினைப் புதிதாக மாற்றிடவும், அதற்கு ஓட்டுநரைப் பணி நியமனம் செய்திடவும் மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எனது தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மீதான மானியக் கோரிக்கையில் நான் விவாதத்திற்கு பதிலளித்து பேசுகின்றபோது, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இங்கே இல்லை. காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து மிக விவரமான விளக்கங்கள் இந்தப் பேரவையில் அளிக்கப்பட்டிருக்கின்றன. வழக்கு நீதிமன்றத்திலே இருந்த

காரணத்தால், அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. இப்போதுதான் தடையாணை பெற்றிருக்கிறோம். தடையாணை பெற்றதற்குப் பிறகு, பணியிடங்களை நிரப்புவதற்கு தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்தெந்த இடங்களில் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொன்னால்; மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அவற்றை நிரப்புவதற்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**212—**

### பொறியியல் கல்லூரி

***36845—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒன்றியத்தில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.





**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை பகுதியில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். கோவையில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் பல பொறியியல் கல்லூரிகள், தனியார் கல்லூரிகளாக இருக்கின்றன. வால்பாறை பகுதியில், வால்பாறை, ஆனைமலை, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு போன்ற பகுதிகளிலிருக்கும் பள்ளிகளில் +2 படித்த மாணவர்கள் தனியார் கல்லூரிகளில் கூடுதலான கட்டணம் கொடுத்துத்தான் சேர வேண்டிய கட்டாயத்தில் இருந்து வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மலைவாழ் பகுதியிலிருக்கக்கூடிய மக்களின் குழந்தைகளெல்லாம் அந்தப் பகுதியில் இருக்கின்ற காரணத்தினாலே அவசியம் அங்கு ஒரு பொறியியல் கல்லூரி தேவைப்படுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, ஆனைமலை பகுதியில், மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, ஒரு பொறியியல் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அரசு பொறியியல் கல்லூரிகள் 10 இருக்கின்றன; அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் 3 இருக்கின்றன. அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகள் 18 இருக்கின்றன. சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 543 இருக்கின்றன. ஆக மொத்தம் 574 பொறியியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கோவை மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி ஒன்றும், அரசு உதவிபெறும் கல்லூரிகள் இரண்டும் இருக்கின்றன. சுயநிதி பொறியியல் கல்லூரிகள் 70 இருக்கின்றன. ஆக மொத்தம் 73 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில், சென்னைக்கு அடுத்து கோவை

[2014 ஜூலை 22

மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசு ஒதுக்கீடாக, மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்காக 40,070 இடங்கள் அங்கு இருக்கின்றன. ஆனால், சென்ற ஆண்டு, 26,736 மாணவர்கள்தான் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். அங்கு ஏற்கெனவே 13,334 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தவகையிலே, மேலும் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், எவ்வளவு நிதி தேவைப்படுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். அந்தவகையிலே, ஏற்கெனவே மாணவர்கள் படிக்கக்கூடிய இடங்கள் காலியாக இருப்பதன் காரணமாக, தற்போது அதுபோன்று ஒரு பொறியியல் கல்லூரி துவங்குவதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அதிகமான தனியார் பொறியியல் கல்லூரிகள் இருப்பது என்பது உண்மைதான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், தனியார் பொறியியல் கல்லூரிகளில் சாதாரண ஏழையெளிய மக்களுடைய குழந்தைகள் சேர வேண்டுமென்று சொன்னால், Capitation Fees அதிகமாகக் கொடுத்தால் மட்டுமே சேர முடியும் என்ற சூழல் இருந்து கொண்டிருக்கின்றது.

வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலையில் பிரசித்தி பெற்ற அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் உள்ளது. அங்கு தமிழகம் மற்றும் இதர மாநிலங்களிலிருந்து பக்தர்கள் வந்து செல்கிறார்கள்; வருமானமுள்ள கோயில். அருள்மிகு மாசாணியம்மன் தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பொறியியல் கல்லூரியைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமேயானால், அதற்கான இடத்தைக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். எனவே, தேவஸ்தானத்தின் மூலமாகவாவது ஒரு பொறியியல் கல்லூரி கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவஸ்தானம் மூலமாக பொறியியல் கல்லூரி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். தேவஸ்தானம் மூலமாக எந்த ஒரு கருத்துருவும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை. இருந்தாலும், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தமிழ்நாட்டில் 574 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்ற சூழ்நிலையில், மொத்தம் 2,88,486 மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்தவகையிலே பார்த்தால், அரசு ஒதுக்கீடாக, Single Window System கலந்தாய்வில் கலந்துகொண்டு 1,82,487 மாணவர்கள் சேருவதற்கான இடங்கள் நம்மிடம் இருக்கின்றன. மேலும், கூடுதலாக இந்த ஆண்டு, சில தனியார் சுய உதவிக் கல்லூரிகள் அவர்களது கல்லூரிகளில் உள்ள 28,868 இடங்களை அரசே எடுத்துக்கொள்ளலாமென்று நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அரசுக் கட்டணத்தில் நாங்களே படிக்க வைக்கிறோம் என்று சொல்லி அரசிடமே திரும்ப ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால், ஒற்றைச் சாளர முறையில் அரசு ஒதுக்கீடாக 2,11,355 இடங்கள் இருக்கின்றன. அந்தவகையில் பார்த்தால், இந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்கு 2,11,355 இடங்கள் இருந்தாலும், 1,65,750 பேர்தான் மனு செய்திருக்கிறார்கள். அந்தவகையில் பார்க்கிறபோது, 45,605 இடங்கள் இருக்கின்றன.

முற்பகல் 10–15

இதைச் சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அரசாங்க ஒதுக்கீட்டில் இடம் பெறுகிற மாணவர்களுக்கு வசூலிக்கப்படுகிற கட்டணமே இதற்கும் வசூலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இப்பொழுது 7–7–2014 அன்று ஒற்றைச் சாளர முறையில் counselling தொடங்கியது. அடுத்த மாதம் 4 ஆம் தேதி வரை counselling நடைபெற இருக்கிறது. அந்த வகையிலே பார்த்தால், ஒரு நாளைக்கு சராசரியாக 4 ஆயிரம் பேர்களுக்கு நேர்காணலில் கலந்துகொள்ள அழைப்பு

விடுக்கப்பட்டால், அதில் சுமார் ஆயிரம் மாணவர்கள் கலந்துகொள்வதில்லை என்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஒரு நாளைக்கு கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டியவர்கள் 100 சதவிகிதம் என்று சொன்னால், அதில் 30 சதவிகிதம் மாணவர்கள் கலந்தாய்விற்கே வருவதில்லை. தற்போது அவர்களுடைய எண்ணம் மாறி இருக்கிறது. அவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கோ, மற்ற தொழிற்பயிற்சிக் கல்லூரிக்கோ செல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்தவகையிலே இதையெல்லாம் பார்த்தால், இன்றைய நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதை எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

**டாக்டர் ச. துரையப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல், கொடை வள்ளல் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்; மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி பொன்னியின் செல்வி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தொகுதியான வாசுதேவநல்லூர் தொகுதி மற்றும் பக்கத்தில் உள்ள கடையநல்லூர் தொகுதி, தென்காசி தொகுதி, சங்கரன்கோவில் தொகுதி ஆகிய அனைத்துத் தொகுதிகளிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எனது தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கண்டிப்பாக அமைத்துத் தர முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அரசு பொறியியல் கல்லூரி சம்பந்தப்பட்டது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர் சார்ந்திருக்கிற வாசுதேவநல்லூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஆண்டுகூட தமிழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒரு கல்லூரியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, உயர் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை உயர வேண்டும் என்ற நோக்கத்தோடும், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் அதிகமாக உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும், இதுவரையில் 52 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திற்கு வழங்கி இருக்கிறார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு கல்லூரி ஒன்று வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் அனைவருக்கும் இருக்கும் பொதுவான நோக்கம், ஏழைக் குழந்தைகளுக்கு உயர் கல்வி கிட்ட வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களுக்கு, அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் பெரும்பாலும் தனியார் கல்வி நிறுவனங்களிலிருந்துதான் இன்றைக்கு வருகிறார்கள். ஆகவே, அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படித்து, அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு கலந்தாய்வில் முன்னுரிமை என்ற முறையை

நம்முடைய அரசு கொண்டு வந்தால், அரசுப் பள்ளியில் படிக்கக்கூடியவர்களுக்கும், ஏழைக் குழந்தைகளுக்கும் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் படிக்க முதல் வாய்ப்பு கிடைக்கும். இன்னொன்று, அரசுக் கல்வி நிலையங்களின்மீது பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஒரு நம்பிக்கை ஏற்படும். ஆகவே, வரக்கூடிய காலங்களில் அரசுக் கல்வி நிலையங்களில் படித்து, உயர் மதிப்பெண் பெற்றவர்களுக்கு கலந்தாய்வில் முன்னுரிமை வழங்குவது என்பது குறித்து பரிசீலித்தால் நல்லது என்று நான் கருதுகிறேன். அதுகுறித்து பரிசீலிப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை என்பது, நேரடித் தேர்வு அதாவது, written exam எழுதி, அதன் அடிப்படையிலே தேர்வு செய்யும் வகையில் இருந்தது. இப்பொழுது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, கிராமப்புறங்களில் படிக்கக்கூடிய மாணவர்கள், அரசுப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மதிப்பெண்கள் அடிப்படையில்தான் நாம் பொறியியல் கல்லூரிகளுக்குத் தேர்வு செய்கிறோம். அப்படி மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்க்கை நடக்கும்போது, தனியார் கல்லூரிகள் மற்றும் அரசுக் கல்லூரிகள் என்று பிரித்துப் பார்த்தால், மாணவர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படும். ஆகவே, அவர்கள் படிக்கக்கூடிய இடம் எது என்று பிரித்துப் பார்க்காமல், அவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்குத் தகுந்தாற்போல். நாம் பொறியியல் கல்லூரிகளில் இடங்களை ஒதுக்கீடு செய்து கொடுப்பதுதான் சாலச் சிறந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.





**213—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

***29087—திரு. பி.ஆர். மனோகர்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதி, அரக்கோணம் வட்டம், கீழ்வீதி காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, நெமிலி ஒன்றியத்தில் செயல்படும் நெமிலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ், கீழ்வீதி முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடை 604 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிட்டுள்ள கீழ்வீதி காலனியில், 112 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. கீழ்வீதி காலனியில் உள்ள 112 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 492 குடும்ப அட்டைகளே இருக்கும். எனவே, அரசு விதிகளில் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளின்படி, நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கீழ்வீதி காலனியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர் அவர்கள்.

**திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வீதி காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிவிட்டார்கள். இது அனைத்துத் தகுதியும் இருக்கின்ற ஊராட்சி. எனவே, அதனை அமைத்துத் தர வேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். மேலும், பருவத்தூர் ஊராட்சி, மேட்டுக்காலனி கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும், தச்சம்பட்டறை கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும், திருமால்பூர் ஊராட்சியில் நெல்வாய்கண்டிகை கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையும் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைத்துத் தர முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லிவிட்டார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அமைத்துத் தர முடியாது என்று சொல்லவில்லை. சட்ட விதிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில் இருப்பதால்தான் இயலாது என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது 2, 3 ஊர்களைக் குறிப்பிட்டார்கள். அந்த ஊர்களில் விதிகள் பூர்த்தியாகின்றன. அதனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பகுதிநேரக் கடைகளை அமைத்துத் தருமா என்கின்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள். ஆய்வின் அடிப்படையில் அந்தப் பகுதிகளுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு பெற்று, விதிகளுக்குட்பட்டிருக்கும்பட்சத்தில், உடனடியாக அந்தக் கடைகள் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர் அவர்கள்.

**திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் பேரூராட்சியில், சிலேட் நகர் பகுதியில், ஒரு பகுதிநேர நியாய



விலைக் கடைக்கான கட்டடம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தால், அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு முறை சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் பேரூராட்சியில் சிலேட் நகர் என்ற பகுதியில் ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையைப் பிரித்துக் கொடுத்த பிறகுதான் கட்டடம் கட்ட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடத்தினைக் கட்டிவிட்டு கடை கேட்கிறார்கள். எனவே, இதனை ஆய்வு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்தில் எஸ். கோட்டப்பட்டியில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை உள்ளது. தொட்டனம்பட்டியில் 360 கார்டுகள் உள்ளன. தொட்டனம்பட்டியில் உள்ளவர்கள் 2 கி.மீ. தூரம் நடந்து சென்று, எஸ். கோட்டப்பட்டியில் பொருட்களை வாங்குகிறார்கள்.

தொட்டனம்பட்டி மக்கள் ஏற்கெனவே இதற்காக போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். எனவே, அதனைப் பிரித்து தொட்டனம்பட்டியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டு, விதிகள் பூர்த்தியாகிற நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**214—**

## புதிய பேருந்து

***36878**—**திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, மொரப்பூரிலிருந்து திருப்பூர் வரை புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்,





சேலம் மூலமாக திருப்பத்தூர், திருப்பூர் வழி அரூர்–சேலம் தடத்தில் 2 பேருந்துகள்மூலம் தினசரி 4 நடைகளும், திருவண்ணாமலை, திருப்பூர் வழி அரூர்–சேலம் தடத்தில் 3 பேருந்துகள்மூலம் தினசரி 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மொரப்பூரிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அரூருக்கு 10 நிமிட இடைவெளியில் பேருந்து வசதியுள்ளதால், மொரப்பூரிலிருந்து திருப்பூர் செல்லும் பயணிகள் மேற்படி பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது தருமபுரி மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற 3 இலட்சம் பேர்கள் 2004 ஆம் ஆண்டு பிற மாவட்டங்களுக்கு, பிற மாநிலங்களுக்கு குடிபெயர்ந்த வரலாறை இந்த நாடு அறியும். எங்கள் மாவட்டத்து மக்கள் வேலைவாய்ப்புக்காக திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல, பக்கத்திலிருக்கக்கூடிய மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக, எனது அரூர் தொகுதியில் படித்து முடித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாமல் இன்றைக்கும் இருக்கிறார்கள். நான் குறிப்பிட்டிருக்கக்கூடிய மொரப்பூர் பகுதி, தமிழகத்திலே வறட்சிக்கு இலக்கான பகுதி. சமீபத்திலே பூனாவில் நடைபெற்ற ஓர் ஆய்வில்கூட, வறட்சிக்கு இலக்கான பகுதி, பிளாக் ஏரியா என்று சொல்லப்பட்ட பகுதி மொரப்பூர் பகுதியாகும். அந்தப் பகுதியிலிருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் திருப்பூருக்கு வேலைக்காகச் சென்று வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, 12, 13 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அரூருக்குச் சென்று, பேருந்தினைப் பிடிக்க வேண்டுமென்றால், திருவண்ணாமலையிலிருந்து வரக்கூடிய பேருந்துகளில்தான் பயணிக்க வேண்டியிருக்கிறது. அந்த நேரங்களில் பேருந்தில் இடம் கிடைக்காமல், இரவு நேரங்களில் நின்றுகொண்டே செல்லக்கூடிய அவலநிலை தொடர்கிறது. ஆகவேதான், மொரப்பூரிலிருந்து திருப்பூருக்குச் செல்வதற்கு தமிழ்நாடு அரசுப்

[2014 ஜூலை 22

போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் புதிய பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும், அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்படுமா என்றும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் வழங்கி மக்களுடைய பயன்பாட்டில் அவை தற்போது இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வழித்தடத்தில், பயணிகளுடைய எண்ணிக்கையை ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியிலே இதுவரை பேருந்து இல்லாத பகுதி கௌாப்பாறை பகுதி. அங்கு இருக்கக்கூடிய மக்கள் பேருந்தையே பார்த்ததில்லை. அரூர், கௌாப்பாறை, ஈட்டியம்பட்டி, ஈட்டியம்பட்டிபுதூர், தீர்த்தமலை வழியாக நீப்பத்துறை வரை உள்ள அப்பகுதி மக்களுக்குப் போக்குவரத்து வசதி வேண்டுமென்று ஐந்தாறு ஆண்டுகளாக நான் கோரிக்கை வைத்து வருகிறேன். அந்தப் பகுதிக்கு ஒரு புதிய பேருந்தை இயக்கிட வேண்டும். அதேபோல், கடந்த 36 வருடங்களாக 36 ஆம் நம்பர் நகரப் பேருந்து, ஒரே பேருந்து, தருமபுரி, ஓடசல்பட்டி, கம்பைநல்லூர் வழியாக இயக்கப்படுகிறது. அந்தப் பேருந்தோடு இன்னொரு கூடுதல் பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி மக்களும், அதிலும் குறிப்பாக கிராமத்திலிருக்கின்ற அடித்தட்டு மக்கள், சிறப்பான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்பதற்காகத்தான், மூன்றாண்டுகளில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,436 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கெங்கு மக்களுக்குப் பேருந்துகளின் தேவை இருக்கிறதோ, அதைத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுத்து பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பகுதிகளிலெல்லாம் பேருந்துகள் இப்பொழுது இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடத்தில் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே பேருந்துகள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், விபத்துக்குள்ளானவர்களுக்கு இழப்பீடு வழங்காத காரணத்தால், கடந்த வாரம் வரை 168 பேருந்துகள் நீதிமன்றத்தால் சிறைபடுத்தப்பட்டுள்ளன. எனவே, உரிய இழப்பீடுகளை வழங்கி, பேருந்துகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பாக விபத்துகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் சிறப்பு நிதி வழங்கப்பட்டும் பேருந்துகளை முறையாக மக்களுடைய பயன்பாட்டுக்கு இயக்கக்கூடிய வகையில், நீதிமன்றத்தில் வழக்குகளுக்கான பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

[2014 ஜூலை 22

சொல்கின்ற சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலும் தொடர்ச்சியாக பணம் செலுத்தப்பட்டு, நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு, பேருந்துகள் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

**திருமதி செல்வி ராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று அல்லும், பகலும் அயராது, தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை தன்னுடைய வாழ்நாளின் உயரிய இலட்சியமாகக் கொண்டு ஓயாது உழைத்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற தலைவியாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*சிதம்பரம் முதல் காட்டுமன்னார்குடிக்கு விளாகம், பண்ணப்பட்டு, நெடுஞ்சேரி வழியாக ஒரு புதிய வழித்தடமும், சிதம்பரம் முதல் வடலூருக்கு புவனகிரி, உடையூர், தலைக்குளம், அம்பாள்புரம், பின்னலூர் வழியாக ஒரு புதிய வழித்தடமும் இயக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளில் கடலூர் மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 48 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குள்ளும் 48 வழித்தடங்களில் பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு*



2014 ஜூலை 22]

*முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**215—**

**நல வாரியம்**

***34410—திருமதி எஸ். விஜயதரணி:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்கள் நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்கள் நல வாரியம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விவசாயிகள் பயன்பெறும்வண்ணம் பால் உற்பத்தியாளர்கள் நல வாரியம் மற்றும் பால் முகவர்கள் நல*

வாரியம் அமைக்க வேண்டும். தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் 17 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் உள்ளன. தமிழக அரசு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச அரிசி வழங்குவதுபோன்று, பால் உற்பத்தியாளர்களின் பசு மாடுகளுக்கு இலவச மாட்டுத் தீவனம் வழங்கவும், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் முகவர்களுக்கு நல வாரியம் அமைத்து, இலவச மருத்துவக் காப்பீடு மற்றும் குழந்தைகள் கல்வி உதவி, திருமண உதவி, போர்க்கால உதவிகள் போன்றவற்றை வழங்கவும் முன்வர வேண்டும்.

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மலையோர கிராமங்களான தேவிகோடு, மாங்கோடு, புலியூர் சாலை ஆகிய ஊர்களில் Bulk Milk Collection Centre தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டும். இந்தக் கிராமங்களிலிருந்து நாகர்கோவில் ஆவின் அலுவலகத்திற்குப் பாலைக் கொண்டுவர 65 கிலோ மீட்டர் வரவேண்டியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** Strengthening of Gross Root Milk Structure (SGRMS) குமரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு, கிராமந்தோறும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திட வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கின்றேன். பால் உற்பத்தியாளர்களுக்கும், முகவர்களுக்கும் நல வாரியம் அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களுக்கு கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மாவட்ட அளவில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், மாநில அளவில் மாநில கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் என்று மூன்றடுக்கு நிருவாக முறை செயல்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு அரசு நிர்ணயிக்கும் பால் கொள்முதல் விலையானது ஆண்டு





முழுவதும் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஒன்றியங்களில் இலாப பங்கிலிருந்து பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக லிட்டர் ஒன்றுக்கு 60 பைசா முதல் ஒரு ரூபாய் 60 பைசா வரை வழங்கப்படுவதுடன், சங்கத்தின் இலாபத் தொகையிலிருந்து 50 சதவீதம் போனசாகவும் வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது, மாவட்ட ஒன்றியங்களில் கால்நடை மருத்துவர்கள் மூலமாக இலவச கால்நடை மருத்துவ வசதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது; மற்றும் திருத்தியமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நல நிதியிலிருந்து பால் உற்பத்தியாளர் விபத்தில் இறந்தாலோ, உறுப்புகள் இழந்தாலோ அவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அதாவது, உற்பத்தியாளர்களிடம் அவர்களுடைய பால் பண பட்டுவாடாவிலிருந்து ஒரு ரூபாய் பிடித்தம்செய்து, சங்கத்தின் மூலமாக 50 காசும், ஒன்றியத்தின் மூலமாக 50 காசும் வழங்கப்பட்டு, அவர்களுக்கு இறப்பு நேர்ந்தால் ரூ.1,75,000/– வழங்குவதற்கும், ஓர் உறுப்பிற்கு மேல் பாதிக்கப்பட்டால் ரூ.1,75,000/–ம் வழங்கப்படுவதோடு, திருமண உதவித் தொகை மற்றும் கல்வி உதவித் தொகையாக ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– வரையும் வழங்கப்படுகிறது.

முற்பகல் 10–35

அதுமட்டுமல்லாமல், கறவை மாடுகள் வாங்கக் கடன் வசதியும் வங்கிகள் மூலமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கால்நடைகளுக்குத் தீவனங்கள் சந்தை விலையைவிடக் குறைவான விலைக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், பால் உற்பத்தியாளர்கள் பால் கூட்டுறவுச் சங்கத்தில் பங்குதாரர்கள் என்ற முறையில், அவர்களே அதன் சொந்தக்காரர்கள் ஆவார்கள். இந்த உரிமைகளை மேலும் நிலைநாட்டும் வகையில், அவர்களால் உருவாக்கப்பட்ட சங்கத்தினை நிருவகிக்கும் உரிமையையும் அவர்களிடம் ஒப்படைக்கும் வகையில், பால் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, தேர்தல் நடைபெற்று, தற்போது, ஒரு இலட்சத்திற்கும் மேலாக நிருவாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன் அறிந்து, நிவர்த்தி செய்து வருகின்றார்கள்.

அதேபோன்று, பால் முகவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு,

*அவர்கள் விற்பனை முகவர்களாக நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு லிட்டர் அடிப்படையில் கமிஷன் வழங்கப்படுகிறது. அதேபோன்று, அவர்களுக்குப் பால் விற்பனை செய்வதற்கான வழித் தடங்களும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. இப்படி அவர்கள் விற்பனை செய்வதற்கு வேண்டிய பல வசதிகள் அரசின் மூலமாக செய்து தரப்படுகின்றன.*

*மேலும், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்ட விதிகளின்படி, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு, சட்டப்பூர்வ அமைப்பாக கிராம அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் மூன்று அடுக்கு நிருவாக முறையில் செயல்பட்டு வருவதால், தனியாக நல வாரியம் அமைக்க அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் ஓர் அங்கமாக இருக்கிறார்கள் என்று கூறியிருந்தீர்கள். ஆனால், பால் முகவர்களை ஒருங்கிணைக்கக்கூடிய எந்தவித ஏற்பாடும் இல்லாததுபோல் உள்ளது. மிகவும் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் பால் முகவர்களாகப் பணிபுரிகிறார்கள். ஆகையால், முகவர்களுக்கெனவாவது ஒரு நல வாரியம் அமைத்து, அவர்களுக்கு அடையாள அட்டை கொடுப்பதன் மூலமாக இந்த நல வாரியத்தின் பயன்கள் நிச்சயமாக அவர்களுக்குக் கொண்டு சேர்க்கப்படுவது மட்டுமல்ல, மக்கள் மத்தியிலும் அவர்கள் அங்கீகாரம் பெற்றவர்களாக விளங்குவார்கள். எனவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*ஆவின் பால் பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு இணையான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அதேநேரத்தில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள். நீங்கள் தொடர்ந்து கேள்வியைக் கேட்டுக்கொண்டே போனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்வார்கள்? ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள்.*





**திருமதி எஸ். விஜயதரணி:** *ஆவின் பணியாளர்களுக்கு, இலவசமாக அரை லிட்டர் பால் வழங்கப்படுவது ஓய்வு பெற்ற பிறகும், அவர்களின் இறுதி நாட்கள் வரை தொடர்ந்து வழங்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சொன்னதுபோல, அவர்களுடைய விற்பனைக்குத் தகுந்தாற்போன்று கமிஷன் தரப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், விற்பனை முகவர்கள், நிருவாகத்தைச் சேர்ந்த கூட்டுறவு அமைப்பில் இருக்கக்கூடிய முகவர்கள், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் இலாபத்திலே பங்கெடுத்துக்கொள்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூறிக்கொள்கிறேன்.*

*தொழிலாளர் பிரச்சினை மற்றும் ஓய்வூதியப் பிரச்சினை குறித்து மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவரமாக எடுத்துச்சொல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**216—**

### வழிகாட்டி மதிப்பு

***9087—திரு. ரா. சரத்குமார்:**

*மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 22

*பத்திரப் பதிவுத் துறையினால் பராமரிக்கப்பட்டுவரும் வழிகாட்டி மதிப்புகளை ஆண்டுதோறும் திருத்தியமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 75, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 1–6–2010 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு முத்திரை (சொத்துகளின் சந்தை மதிப்பு வழிகாட்டிகளை மதிப்பிட, புதுப்பிக்க மற்றும் மாற்றியமைக்க மதிப்பீட்டுக் குழு அமைத்தல்) விதிகளில், விதி எண் 4(1)–ன்படி ஒவ்வோர் ஆண்டும் பதிவுத் துறையினால் பராமரிக்கப்பட்டுவரும் வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தியமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கென நியமிக்கப்பட்டுள்ள மாநில மதிப்பீட்டுக் குழுவின் முடிவின் அடிப்படையில்தான், ஆண்டுதோறும் திருத்தி அமைக்கப்படும். தேவைப்படும்பட்சத்தில்தான், ஆண்டுதோறும் வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தியமைப்பது குறித்து மாநில மதிப்பீட்டுக் குழு முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், சென்னை போன்ற பெரு நகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மற்றும் கிராமங்களிலும், அரசு வழிகாட்டி மதிப்பு, அதாவது guideline value, சந்தை மதிப்பினைவிட அதாவது, market value–ஐக்காட்டிலும் அதிகமாக உள்ளது என்று அறிகிறேன். இவ்வாறு சொத்துகளின் சந்தை மதிப்பிற்கும்–market value–க்கும், பத்திரப் பதிவுத் துறையின் வழிகாட்டி மதிப்பிற்கும்–guideline value–க்கும் அதிக வித்தியாசம் ஏற்படும் வேளைகளில், மக்களிடமிருந்து



2014 ஜூலை 22]

வழிகாட்டி மதிப்பினை, guideline value–ஐக் குறைக்கச் சொல்லி கோரிக்கைகள் வரும் சூழ்நிலையில், இடத்திற்கேற்றவாறு அதிகமாக உள்ள மதிப்புகளைத் திருத்தி, உடனுக்குடன் பதிவு செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இதை எதற்காகக் கேட்கிறேன் என்றால், சில இடங்களில் guideline value–க்கும், market value–க்கும் அதிக வித்தியாசம் வந்துவிடுகிறது. பத்திரப் பதிவு செய்யப்படும்பொழுது guideline value அதிகமாக இருக்கிறது, market value குறைவாக இருக்கிறது. இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, இதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிகாட்டி மதிப்புகள் சந்தை மதிப்பின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு மிக அதிகக் கவனம் செலுத்துகின்றது. வழிகாட்டி மதிப்பினைத் தயாரிப்பதற்கு மாநிலக் குழுவும், மாவட்ட அளவில் வழிகாட்டி மதிப்பினைத் தயாரிப்பதற்கு மாவட்ட மதிப்பீட்டு துணைக் குழுக்களும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. சொத்துகள் இருக்கின்ற இடத்திற்கேற்ப, அந்தத் தன்மைக்கு ஏற்ப, வகைப்பாடு செய்யப்பட்டு, சொத்தின் வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகின்றது. நகராட்சிகளாக இருந்தால், நகர்ப்புறங்களில் குடியிருப்புப் பகுதிகள், வணிகப் பகுதிகள், வணிகப் பகுதிகள், குடியிருப்புப் பகுதிகள் இரண்டும் கலந்த பகுதிகள் மற்றும் தொழிற்பேட்டைப் பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டு, அவற்றுக்குண்டான மதிப்பீடுகள் நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களாக இருந்தால் நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றின் தரத்திற்கேற்ப வகைப்படுத்தப்பட்டு, உரிய மதிப்பீடுகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. சொத்தின் தன்மைக்கேற்ப உள்ளூர் விசாரணை, பதிவுப் புள்ளிவிவரம் ஆகியவற்றின் அடிப்படையில், சந்தை நில மதிப்பினை அனுசரித்துத்தான் வழிகாட்டி மதிப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளைப் புரிந்து செயல்படுகின்ற ஒரு முதலமைச்சர் ஆவார். ஆகவே, இதை நினைவில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல இடங்களில் சீர்செய்யப்படாமல் இருப்பதால்தான், இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பல இடங்களில் guideline value–க்கும், market value–க்கும் அதிக வித்தியாசம் வருகிறது. சிலர், guideline value–ஐ அதிகரித்து, பதிவு செய்வதற்குக் காரணம், வங்கிகளில் கடன் வாங்குவதற்காகத்தான். Market value–ஐவிட guideline value அதிகரிக்கும்போது, வங்கிகளில் கடன் வாங்குவதற்காக மட்டும், அதை உயர்த்திக்காட்டி பதிவு செய்துகொள்கின்றனர். இதைத் தவிர்க்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதை கவனத்தில் கொண்டு, நடுத்தர மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும், அவர்கள் இடங்கள் வாங்கி பதிவு செய்யும்போது, ஒரு சீரான பதிவு இருப்பதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு சீரமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் தயார் செய்யப்பட்டு, 1–4–2012 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலுமுள்ள 3.97 கோடி சர்வே எண்களுக்கும், 1.85 இலட்சம் தெருக்களுக்கும் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், முரண்பாடுகள் ஏதேனும் பொது மக்களால் துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் உரிய பரிசீலனை செய்து இந்த முரண்பாடுகளைக் களைய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான துணை மதிப்பீட்டுக் குழுக்கள், உரிய கருத்துருக்களைப் பதிவுத் துறையின் தலைவர் தலைமையிலான மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பி வைக்கும். மாவட்ட துணை மதிப்பீட்டுக் குழுக்களால் அனுப்பப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுக்கள் அதை சரிசெய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜூலை 22]

மேலும், இதுவரை 26 ஆயிரத்து 704 சர்வே எண்கள் மற்றும் 258 கிராமங்கள் தொடர்பான முரண்பாடுகள் களையப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 2012—இல் திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பிலேயே, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டும் தொடரலாம் என மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**217—**

### குடிநீர் வசதி

***5746—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சிக்கு பாபநாசம் அணைக்கட்டிலிருந்து குழாய்மூலம் குடிநீர் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை முதலில் வணங்குகிறேன்.

[2014 ஜூலை 22

திருநெல்வேலி மாநகராட்சிக்கு பாபநாசம் அணைக்கட்டிலிருந்து பிரத்யேக குழாய்கள்மூலம் குடிநீர் கொண்டுவர உத்தேசிக்கப்பட்ட திட்டத்தில், அதற்காகத் தெரிவு செய்யப்பட்ட தலைமை நீரேற்று நிலையப் பகுதியிலிருந்து, குடிநீர் கொண்டு வரும் பகுதியானது வனத் துறையைச் சேர்ந்த முண்டந்துறை புலிகள் காப்பகம் பகுதியில் அமைந்துள்ளது. இதற்கு வனத் துறையின் அனுமதி கிடைக்காத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு அடுத்து வரும் 30 ஆண்டுகளில் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், அரியநாயகிபுரம் அணைக்கட்டு நீர்த்தேக்கப் பகுதியிலிருந்து கூடுதலாக நாள்தோறும் 50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறுவதற்கு 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இக்குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தினை ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றுவதற்கு அரசாணை எண் 9, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27–1–2014 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். நாடோடி மன்னன் திரைப்படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'நாளை போடப் போகிற சட்டம், அது மக்களுக்கு நன்மை பிறந்திடும் திட்டம்' என்று ஒரு வசனம் பேசுவார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் தினம், தினம் அறிவிப்புகள் பல வெளியிட்டு, தமிழக மக்களுக்கு நன்மை பயக்கின்ற வகையில் திட்டங்களைத் தீட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு ஒரு ரூபாய் அல்ல, இரண்டு ரூபாய் அல்ல, ஒரு கோடி ரூபாய் அல்ல, இரண்டு கோடி ரூபாய் அல்ல, 230 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டம் தீட்டி மாபெரும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத்



2014 ஜூலை 22]

தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 56 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தமைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகப் பெரிய திட்டம்; ஓர் அற்புதமான திட்டம். அடுத்த 50 ஆண்டு காலத்திற்கு திருநெல்வேலி தொகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதான திட்டம். வருகின்ற மாதங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு, இந்தத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக, எத்தனை மாத காலத்திற்குள்ளாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடித்துத் தருவார்கள் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திருநெல்வேலி மாநகராட்சி 1–6–1994 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்த மாநகராட்சிக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஓர் அற்புதமான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துள்ளார்கள். இந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 9–4–2014 அன்று நான்கு சிப்பமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை என்பதால், மறு ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டது. தொடர்ந்து, தமிழ்நாடு நகர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்துடன் கலந்து, ஒப்பந்தப்புள்ளி திருத்திய நிபந்தனையுடன் தயார் செய்யப்பட்டு, அது ஜெர்மன் வங்கியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படும். இது 31–3–2016–க்குள் நிச்சயம் முடிவடைந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 22

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டுக்குள் முடித்துத் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் தந்த உறுதிக்கு, மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**218—**

## கால்நடை மருந்தகம்

***47720**—**திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற, கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை, அரசு விதிகளுக்குட்பட்டு 5 ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளதால், நரசிம்மநாயக்கன்பாளையத்தில் தற்போது இயங்கிவரும் கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த



2014 ஜூலை 22]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “யார் பக்கம் யார் போனால் என்ன? மக்கள் நம் பக்கம்”, (மேசையைத் தட்டும் ஒலி) “ஊராரை நாம் ஏய்த்ததில்லை நமது ஆட்சி பரிசுத்தம்” என்ற அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) “அமைதி, வளம், வளர்ச்சி” என மக்கள் கூட்டணி ஏற்படுத்தி, 37 தொகுதிகளில் வென்று, அம்மாவை எதிர்த்தவர்களுக்கு DL ரிஜிஸ்ட்ரேஷனே இல்லாமல் செய்த வரலாற்று தேவதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கவுண்டம்பாளையம் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியத்திற்குட்பட்ட வெள்ளானைப்பட்டி ஊராட்சிக்கு கால்நடை மருந்தகம் அமைக்க ரூபாய் 22 இலட்சமும், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட நாயக்கன்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க ரூபாய் 22 இலட்சமும் ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே இரண்டு சென்ட் இடத்தில்தான் அந்தக் கிளை நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு அருகிலே எம்.ஆர்.ஜி. நகரிலே 10 சென்ட் இடம் இருக்கின்றது. அதைப் பேரூராட்சி மன்றத்திலே வழங்க இருக்கின்றார்கள். எனவே, அந்தப் பகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தந்தால், மக்களுக்குச் சிறப்பாக இருக்கும் என்கிற அடிப்படையிலே இந்தக் கேள்வியைக் கேட்டேன். இதற்கு ஆவன செய்யப்படுமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியிலே அரசு

விதிகளுக்குட்பட்டு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று கால்நடை மருந்தகம் அமைத்துத் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.

**திரு. வி.சி. ஆறுக்குட்டி:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**219—**

### கூட்டுறவு நூற்பாலை

***34488—திரு. கடம்பூர் ராஜூ:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

கோவில்பட்டி தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி ஊராட்சியில் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் கோரியுள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டிக்கு அருகே, சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள எட்டயபுரத்தில் தமிழக அரசுக்குச் சொந்தமான பாரதி கூட்டுறவு நூற்பாலை 1984 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் காலத்தில் நிறுவப்பட்டு, தற்போது நல்லமுறையில் இயங்கி வருவதால், தற்போது கோவில்பட்டி ஊராட்சியில் மேலும் ஓர் அரசு கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கு அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

*முற்பகல் 10–55*

**திரு. கடம்பூர் ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் சாதனைகளை நிகழ்த்தி, துறைதோறும் வெற்றிமேல் வெற்றி குவித்து வருகின்ற தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்ததோ 97 சதவிகித வெற்றி. 2016–ல் வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலே மக்கள் அளிக்க இருப்பதோ 100 சதவிகித வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் பொற்கால முதல்வர், இந்தியாவின் இமயம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

பருத்தி விளைச்சலிலே தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோயம்புத்தூர் என்றால், தென் தமிழகத்தின் மான்செஸ்டராக கோவில்பட்டி பகுதி விளங்குகிறது. தொழில் நகரமாக விளங்குகின்ற கோவில்பட்டி மக்களின் நீண்ட காலக் கனவை நனவாக்கிடும்வண்ணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவில்பட்டி நகராட்சிப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்துத் தருவாரா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டாலும்கூட, கோவில்பட்டியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. எட்டயபுரத்தில் அமைந்துள்ள பாரதி கூட்டுறவு நூற்பாலை 1984 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 12 ஆயிரத்து 480 spindle கதிர்களுடன் ஆண்டுக்கு

*9 இலட்சத்து 70 ஆயிரம் கிலோ நூல் உற்பத்தித் திறனுடன் சுமார் 200 தொழிலாளர்களுடன் நல்லமுறையில் இயங்கி வருகின்றது. இந்த ஆலையினை நவீனப்படுத்துவதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2013 அக்டோபர் மாதம் ரூபாய் 18 கோடியே 73 இலட்சம் சிறப்பு இனமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது அந்த நூற்பாலை அதிநவீனப்படுத்தப்பட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, ஆலையின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 20 இலட்சத்து 25 ஆயிரம் கிலோ நூல், அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் கூடுதலாக நூறு நபர்கள் சேர்ந்து, மொத்தம் 300 நபர்கள் வரை வேலைவாய்ப்பு பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதையும், ஆலையை நவீனமாக்கும் பணிகள் 6 மாத காலத்திற்குள்ளாக முடிவுபெறும் என்பதையும், இது கோவில்பட்டிக்கு அருகிலே உள்ள காரணத்தினால், கோவில்பட்டியில் உள்ள தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே இருக்கின்றது என்பதையும், தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமைக் கவிஞர் பாரதியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, 1984–ல் நூற்றாண்டு விழா பரிசாக மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாரதி கூட்டுறவு நூற்பாலையை அங்கே அமைத்திருப்பதைப் பெருமையோடு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், கோவில்பட்டி நகரத்தில் இரண்டு பெரிய நிறுவனங்களான லாயல் மில் மற்றும் லட்சுமி மில் ஆகிய தனியார் கூட்டுறவு நூற்பாலைகள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து வந்தன. காலப்போக்கில் இந்த இரண்டு நிறுவனங்களும் தங்கள் நிறுவனங்களின் உற்பத்தியின் பெரும் பகுதியை மதுரைக்கும், கோயம்புத்தூருக்கும் மாற்றியதன் விளைவாக, ஆயிரக்கணக்கான ஆலைத் தொழிலாளர்கள் தற்போது வேலைவாய்ப்பின்றி, வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் இருக்கின்றார்கள். மூலப்பொருட்களும் அங்கே தாராளமாகக் கிடைக்கின்றன; தொழிலாளர்களும் ஏராளமாக இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும். எட்டயபுரம் பகுதி ஒரு பேரூராட்சியாக இருக்கின்றது; கோவில்பட்டி நகராட்சி அந்த மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமாக நாளும், பொழுதும் வளர்ந்து வருகின்றது. அந்த அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலே இரண்டு தனியார் ஆலைகள் உள்ளன, அதிகமான தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, அரசு நூற்பாலை வரவேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வலியுறுத்திக் கூறிய காரணத்தினால், இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய ஆய்வுகள் செய்து, நிச்சயமாக நல்ல ஒரு தீர்வு காணப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலாக ஒரு செய்தியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி, கிருஷ்ணகிரி கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை, கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், 104 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 104 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**220—**

**மீனவர்களுக்கு வீடுகள்**

***7273—திருமதி க. அழகுவேலு:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி தொகுதியிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*2011 ஆம் ஆண்டில் மா. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட அசகளத்தூர், கள்ளக்குறிச்சி, கச்சராப்பாளையம், சின்னசேலம், ஈரியூர், ராயப்பனூர் போன்ற இடங்களில் உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்க மீனவர்களுக்கு 203 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 139 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 64 வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். கருணை உள்ளத்துடன் செய்திடும் காருண்ய செயல்களால் கண்ணீர்விடும் மாந்தருக்கெல்லாம் கலங்கரைவிளக்கமாகத் திகழும் ஒப்பற்ற முதல்வர், மீனவ சமுதாய மக்களுக்காக எண்ணற்ற திட்டங்கள் பல வகுத்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். எங்கள் கள்ளக்குறிச்சி பகுதியில் மட்டும் சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு மீனவர்கள் வசித்து வருகின்றார்கள். அவர்கள், ஏரி, குளங்களில் மீன் பிடிக்கும் காலங்கள் தவிர, மற்ற நேரங்களில் கடல் மீனை வாங்கி வந்து வியாபாரம் செய்து வாழ்கின்றனர். அந்த மீனவ சமுதாய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அடித்தட்டு மக்களுக்காக அனுதினமும் பாடுபடும் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அவர்களுக்குக் கூடுதலாக வீடுகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கள்ளக்குறிச்சி தொகுதியிலே ஏற்கெனவே 203 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 139 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில், கள்ளக்குறிச்சி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடமிருந்து 11 மனுக்கள்தான் பெறப்பட்டிருக்கின்றன. மா. சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், 207 சதுர அடியில் ரூ.75,000/– மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், தற்போது மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். ஆகையால், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டி வழங்க, 3 சென்ட் நிலம் மற்றும் உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களிடமிருந்து*

[2014 ஜூலை 22

வீடுகள் வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அனுமதி பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடித் தொழிலையும், மீன் வியாபாரத் தொழிலையும் நம்பி வாழ்வதால், உள்நாட்டு மீனவர்களுக்கும், மீனவச் சமுதாய மக்களுக்கு வழங்கும் சலுகைகளைப் போன்று வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், “எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்று தமிழக மக்களின் வாழ்வுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு, நாடு போற்றும் நல்லாட்சி தந்திடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிக்கு வந்த உடனேயே, முதல் நாள் அன்றே 7 கோப்புகளில் கையெழுத்திட்டார். அவற்றில் ஒன்று, மீன்பிடித் தடைக் காலத்தில் ரூ.2,000/– நிவாரணம் வழங்குவது தொடர்பான கோப்பு. கடலுக்குள் செல்கின்ற மீனவர்கள் மீன்பிடித் தடைக் காலங்களில், கடலுக்குச் செல்லக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்த காரணத்தினாலே, அந்தத் தடைக் காலத்திலே 2 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்குவதற்கு உத்தரவைப் பிறப்பித்து, இன்றைக்கு வழங்கிக்கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உள்நாட்டு மீனவர்கள் கடல் மீன் பொருட்களை வாங்கி, வியாபாரம் செய்வதாக இருந்தால் மீனவர் நல வாரியத்திலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள், அதைச் சார்ந்து தொழில் செய்கின்றவர்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பு நிதியாக ரூ.4,000/– வழங்குகிற திட்டத்தையும் மீனவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே உள் நாட்டு மீனவர்களும் மீனவர் நல வாரியத்தின் மூலமாக பலனைப் பெற முடியும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜூலை 22]

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**221—**

### பாதுகாப்பு இல்லம்

*6561—**திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியில் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் மக்கள் தங்குவதற்குப் பாதுகாப்பு இல்லம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகக் கடலோரத்தில் இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படும்போது, மக்கள் தங்குவதற்கான இடங்கள் கண்டறியப்பட்டு, உலக வங்கி நிதியுதவியுடன்

[2014 ஜூலை 22

செயல்படுத்தப்பட்டுவரும் கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டத்தின்கீழ், 121 இடங்களில் பாதுகாப்பு மையங்கள் பொதுப் பணித் துறைமூலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதில் 14 மையங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளன. திருவையாறு பகுதி, கடலோரப் பகுதியில் இடம் பெறாததால், இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மேலும், திருவையாறு பகுதி வழியாக காவேரி, கொள்ளிடம் மற்றும் குடமுருட்டி நதிகள் செல்கின்றன. நீர் பெருக்குக் காலங்களில் கரையோர மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு தேவையான அரசுக் கட்டடங்கள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் அதிகம் உள்ளதால், புதிதாக பாதுகாப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையுள்ளதா என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். காவேரியை மீட்டுத் தந்த அன்னை, தமிழகத்தின் ஏழையெளிய, நடுத்தர மக்களுடைய இல்லங்களில் ஒருவராக, குல தெய்வமாக, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தந்து, அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கும் விலையில்லாத கல்வி கொடுத்து, நிரந்தரமான பொருளாதார உயர்வை எதிர்காலத்திலே ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தினை நோக்கி ஆட்சி செய்து வரும் அன்னையின் ஸ்ரீரங்கம் தொகுதியினுடைய காலடியிலேதான் திருவையாறு தொகுதி தொடங்குகிறது. தொடங்குகிற இடமான மாமன்னன் கரிகாலச் சோழனால் கட்டப்பட்ட கல்லணையில்தான் காவேரியும், கொள்ளிடமும் ஒன்றாக இணைகிறது. காவேரி, வெண்ணாறு, புது ஆறு என்று பிரிந்து, திருவையாற்றில், 5 ஆறுகளாகச் சென்று கொண்டிருக்கின்றன. கல்லணையிலேதான் கரிகாலனுக்கு மணிமண்டபமும், மக்களுடைய 200 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையிலே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலமும், ஸ்ரீரங்கத்திலிருந்து காவேரி பூம்பட்டினம் செல்லும்



2014 ஜூலை 22]

சாலையிலே கல்லணை வரை 81 கோடி ரூபாய்க்கு புதிய இரண்டு வழிச் சாலைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடலோரப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் பாதுகாப்பு இல்லங்கள் தேவையா என்று ஆய்வு செய்வதாகச் சொன்னார்கள். கல்லணையிலே, 1924 ஆம் ஆண்டிலே 8–7–1961–லே மிகப் பெரிய வெள்ளமும், அதைவிட மிகப் பெரிய வெள்ளம், 13–11–1971–லேயும் ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெத்தினசாமி, சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** வெள்ளப் பெருக்குக் காலங்களில் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கல்லணைக்கு வந்து, மக்களைப் பாதுகாக்கின்ற வகையில், வெள்ளக் காலங்களில் அவர்கள் தங்குவதற்காக இங்கு இல்லங்களை அமைக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்திலே அன்று ஆணையிட்டுச் சென்றார்கள். அதற்குப் பின்னாலே 22–11–2005 அன்று மிகப் பெரிய வெள்ளம், 17 அடி உயரத்திற்கு தண்ணீர் வந்தபோது, அந்தப் பகுதி மக்களையெல்லாம் பாதுகாப்பான மேட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று, தற்காலிகக் குடில் அமைத்து மக்களைத் தங்க வைத்து, 20 நாட்கள் அங்கே உணவு, உடை, மருத்துவ வசதிகளெல்லாம் செய்யப்பட்டன. ஆகவே, அந்தப் பகுதிக்கு அவசியம் பாதுகாப்பான கட்டடம் வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் பெருக்குக் காலங்களில் கரையோர மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்குத் தேவையான அரசுக் கட்டடங்கள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் அதிகம் உள்ளதால், புதிதாக பாதுகாப்புக் கட்டடங்கள் தேவை உள்ளதா என்பதை அரசு ஆய்வு செய்யும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருந்தேன். கடலோர

[2014 ஜூலை 22

மாவட்டங்களுக்கு மாத்திரம் என்று சொன்னார். தமிழகக் கடலோர மாவட்ட மக்களுக்கு கடல் சீற்றம், சுனாமி, புயல் போன்ற பேரிடர்களால் ஏற்படும் பாதிப்பினைத் தணிக்கும்வகையில் ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம், அதாவது Coastal Disaster Risk Reduction Project உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்படும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 121 கடலோரப் பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், பாதுகாப்பு மையங்களுக்கான 50 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித்தடங்கள் அமைத்தல், 439 முன்னெச்சரிக்கை அறிவிப்புக் கருவிகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், Tamil Nadu Disaster Management Authority மூலமாக இத்திட்டத்தின் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

முற்பகல் 11–10

மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் அமைந்த இந்த ஆணையத்தின்மூலம் பேரிடர்களால் ஏற்படும் இன்னல்களைக் கண்காணித்து, அவற்றைத் தணிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு பரவைத் தலைவர் அவர்களே, தேவைப்படுகிறபட்சத்திலே கடலோர மாவட்டங்கள் இல்லாத பகுதிகளுக்கு ஆங்காங்கே இருக்கிற அரசுக் கட்டடங்கள் போதுமானதாக இருக்கின்ற காரணத்தினாலே தற்போது அந்த நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

**திரு. மு. ரெத்தினசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**222—**

## கூடுதல் கட்டடம்

***36797—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரிலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் நபார்டு வங்கியின்மூலம் நிதியுதவி பெற்று நிறைவேற்றப்படுகின்றன. திட்டம் 11–ன்கீழ் அரசாணை எண் 290, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12–11–2011–ன்படி 131 பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட ரூ.152.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.120.06 இலட்சம் மதிப்பீட்டில், 12 கூடுதல் வகுப்பறைகளும், ஓர் அறிவியல் ஆய்வுக் கூடமும், 4 கழிவறைகளும், குடிநீர் வசதியும் செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினால் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கூடுதல் கட்டடம் மாணவிகளின் பயன்பாட்டுக்கு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்றல் தனக்காக வீசுவதில்லை, மேகம் தனக்காகப் பொழிவதில்லை, நதிகள் தமக்காக ஓடுவதில்லை, மலர்கள் தமக்காக மணம் வீசுவதில்லை. அதைப்போல தனக்காக வாழாமல், தமிழக மக்களுக்காக வாழ்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூரிலுள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தற்போது 1,847 மாணவிகள் பயின்று வருகின்றார்கள். இப்பள்ளியானது கடந்த ஆண்டு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்ற பள்ளியாகும். ஆனால், இந்தப் பள்ளி அமைந்துள்ள மொத்தப் பரப்பு வெறும் 40 சென்ட் நிலம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பள்ளிக்குச் சென்று பார்க்கின்றபோது, மாணவிகள் மிகவும் நெருக்கமாக, ஒரு தேன் கூட்டில், தேனீக்கள் இருப்பதுபோல் அமர்ந்திருப்பார்கள். ஒரு முறை இந்தப் பள்ளிக்குச் சென்று நான் மாணவிகளிடம் கேட்கின்றபோது, எங்கள் பள்ளியில் Attention உண்டு, Stand at ease இல்லை என்கின்ற வகையிலே கூறினார்கள்.

இதுகுறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதன் விளைவாக, இந்தப் பள்ளிக்கு மிக அருகிலே இருக்கக்கூடிய வரத்து வாய்க்கால், பாசனப் பரப்பு ஏதும் இல்லாத வீரண்ணன் குளம் என்கிற ஒரு குளத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்தை பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கி, அந்த இடத்தில் நபார்டு திட்டத்தின் மூலமாக 12 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிவறைகள் உள்ளிட்ட புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஏற்கெனவே 40 சென்ட் நிலத்தில் அமைந்துள்ள அந்தப் பள்ளியானது ஊரின் மையப் பகுதியிலே இருக்கிறது. ஆனால், புதிதாகக் கட்டப்பட்டுள்ள அந்தப் பள்ளிக் கட்டடமானது சுமார் 800 மீட்டர் தூரம் தள்ளி அமைந்துள்ளது. இவ்வாறு இருக்கின்றபோது, நிருவாக ரீதியாக சிரமம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஏற்கெனவே இருக்கக்கூடிய பள்ளிக் கட்டடத்தைப் பள்ளிக் கல்வித் துறையினுடைய வேறு உபயோகங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு, ஏற்கெனவே 12 வகுப்பறைகள் கட்டியிருக்கக்கூடிய அந்த இடத்திலே புதிதாக 40 வகுப்பறைகள் கொண்ட ஒரு புதிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்கின்றபட்சத்தில், மாணவிகளும், ஆசிரியர்களும் ஓரிடத்திலே அமர்ந்து, கல்வி பயில்வதற்கு ஏதுவாக இருக்கும் என்ற நிலையைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.



2014 ஜூலை 22]

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, 40 சென்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ள வேடசந்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை புதிய இடத்திற்கு மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். துறையின்மூலம் ஆய்வு செய்து, புதிதாக அமைக்கப்பட்டுள்ள 5.76 ஹெக்டேர் பரப்புள்ள ஒரே இடத்தில் இந்தப் பள்ளியை அமைப்பதற்கு ஆய்வினை மேற்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

**திரு. ச. பழனிச்சாமி:** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எங்களுடைய தொகுதியில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 10 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, வடமதுரை பெண்கள் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிகளுக்கும் கூடுதல் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியினுடைய உதவியோடு, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ள பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுமானால், ஆய்வு செய்து, அதன் தேவைக்கேற்ப அந்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**223—**

## சூரிய மின் வேலி

*__5647__—**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள விளைநிலங்களுக்கு சூரிய மின் வேலிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் வழியாகச் செல்லும் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள விளைநிலங்களுக்கு மின் வேலி அமைக்கும் திட்டம் ஏதும் வனத் துறையில் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணும், மண்ணும் வியக்கும் வீரமாய், ஊருக்கும், உலகுக்கும் உறைக்கும் நியாயமாய், உலக தமிழர்களுக்கே வழிகாட்டும் தீபமாய், *(மேசையைத் தட்டும் ஒலி)* எதிரிகளை நேருக்கு நேர் நின்று சமர்புரியும் வீரமாய், *(மேசையைத் தட்டும் ஒலி)* கதி என்று கை தொழுதால் கன நொடியில் கலி தீர்க்கும் கருணையாய், எதிரிகளின் வில் ஆயுதத்தை அறிவார்ந்த சொல் ஆயுதத்தால் வீழ்த்தும் காவியமாய், பகலவனைப் பந்தாடி, முரசுகளை முடக்கி மூலையில் வீசி, *(மேசையைத் தட்டும் ஒலி)* நச்சுக் கொல்லிகளை நசுக்கி குப்பையில் எறிந்து, சக்தி பெற்று மீண்டும் அரியணை அமர்ந்த அரிமா பார்வையே, அறிவுக் கோர்வையே, *37*–ல் வாகை சூடி, மூன்றாம்பெரும் இயக்கமாக சிங்கநிகர் கழகத்தை சிம்மாசனம் ஏற்றிய செந்தமிழே, *(மேசையைத் தட்டும் ஒலி)* தித்திப்பாய் திட்டங்கள், தெளிவான அரசாட்சி, தேர்ந்ததோர் மனப்பாங்கு, குறுகிய வட்டம் இல்லை, குறுக்குவழித் தொடர்பில்லை, சாதி, மத பேதமில்லை, சார்ந்தோர் சமயமில்லை, தனிப்படை தளபதியாக, தனிமை புகழ் தலைவியாக, தனிக்காட்டு அரசியாக, அஞ்சுவதும், கெஞ்சுவதும் அறிந்திடாத சிங்கநிகர் தலைவியாக *(மேசையைத் தட்டும் ஒலி)* பொற்கால ஆட்சியால் புகழ் விரித்து, அண்டை மாநிலங்கள் மட்டுமின்றி, அயல் நாடுகளும் வந்திறங்கி வாழ்த்திப் போகும் வரலாறே, மக்கள் நலன் கருதா சில மன நோயாளிகளைத் தவிர, உலகமே போற்றுகிறது இலையின் ஆட்சியை, ஈகைத் தாயின் மாட்சியை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள பனகுடி பேரூராட்சியானது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திலுள்ளது. இது மழைமறைவுப் பிரதேசம் மற்றும் வறட்சியான பகுதியாகும். இங்கு ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாகத்தான் விவசாயம் நடைபெறுகிறது. மலைப் பகுதிகளிலிருந்து வன விலங்குகள் வந்து விளைநிலங்களை அழித்துவிடுவதால், விவசாயிகள் பெரும் கவலைக்குள்ளாகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாய் உள்ளம் கொண்ட அம்மா அவர்களின் கனிவான

[2014 ஜூலை 22

பார்வைக்கு எடுத்துச் சென்று, மின் வேலியை அமைத்துத் தருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளைநிலங்களுக்கு வன விலங்குகளால் பாதிப்பு ஏற்படாமலிருக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு திட்டங்களை அறிவித்து, நடைமுறைப்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். வன எல்லையில் சூரிய மின் வேலி அமைத்துப் பராமரித்தல், யானைகள் புகா அகழிகள் அமைத்தல், வனப் பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஆழ்குழாய்க் கிணறு அமைத்து சூரிய மின்சக்தி மோட்டாருடன் நீர்நிலைத் தொட்டி அமைத்தல், தீவனப் பயிர்கள் வளர்த்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர் நலம் பேணி, அவர்கள் சிறப்பாகப் பணிபுரிய ஏதுவாக நலத் திட்டங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு தொலைநோக்குத் திட்டங்கள்மூலம் விவசாயிகள் நலன் மற்றும் விளைநிலங்கள் பாதுகாப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதி செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருங்காலத்தில் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**224—**

## நடமாடும் மருத்துவமனை திட்டம்

***20267—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடமாடும் மருத்துவமனை திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகின்றேன். 2011–2012 நிதியாண்டு முதல் எளிதில் சென்றடைய முடியாத தொலைதூரப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சுகாதார வசதிகளை வழங்கும்பொருட்டு, நடமாடும் மருத்துவமனை என்ற புதிய திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் நடமாடும் மருத்துவக் குழுவினை மேம்படுத்தி, தற்போது 385 வட்டாரங்களிலும் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்டமிட்ட முன்பயண அட்டவணைப்படி நெடுந்தொலைவிலுள்ள அணுக முடியாத கிராமங்கள் மற்றும் சிற்றூர்களுக்கு இந்த நடமாடும் மருத்துவ வாகனங்கள் சென்று வருகின்றன. குறிப்பாக, கிராமப்புற விவசாய மக்கள் பயன்பெறும் வகையில் இந்த மருத்துவச் சேவை வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜுலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நோய்களின் அறிகுறிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படாத சூழ்நிலையில், ஏழை, எளிய விவசாய மக்கள் அந்த நோய்கள் தீவிரமடையும்போது, மேல் சிகிச்சைக்கு சிரமப்படுகின்ற சூழ்நிலை உள்ளது. மேலும், சிலர் நோய்களால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்கும் சூழ்நிலையும் உள்ளது. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் சளி, காய்ச்சல், தலைவலி, தலைசுற்றல், வாந்தி, மயக்கம், உடல்சோர்வு போன்றவை பல தீவிர நோய்களின் ஆரம்ப அறிகுறிகள் என்பதை அறியாமல், மருத்துவமனைக்குச் செல்வதற்கு மெத்தனம் காட்டுகின்ற போக்கும் உள்ளது. மேலும், சர்க்கரை நோய் குறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ள காரணத்தினால், அதை அவர்கள் கண்டுகொள்ளாத சூழ்நிலையும் உள்ளது. எனவே, கிராமப்புற ஏழை, எளிய விவசாய மக்களின் நல்வாழ்வினை மேம்படுத்தும் வகையில், அந்தத் திட்டத்தை 10 ஊராட்சிகளுக்கு ஒரு வாகனம் என்ற வகையில் விரிவுபடுத்தி, கிராமப்புற விவசாய மக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், 2002 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக இந்தத் தொலைநோக்குத் திட்டம் தொடங்கப்பட்டது. குறிப்பாக, நம்முடைய மாமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, கிராமப்புறத்திலே இருப்பவர்கள் மருத்துவமனையை நாடிச் செல்வதற்கு மெத்தனம் காட்டுகின்ற சூழ்நிலையை 2002–லேயே உணர்ந்து, 2002–லேயே Hospital on wheels என்று சொல்லக்கூடிய நடமாடும் மருத்துவமனையை அறிவித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய எல்லாருக்குமே basic screening என்று சொல்லக்கூடிய முறையின்மூலம் சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் போன்ற தொற்றா



2014 ஜுலை 22]

நோய்களுக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பிரத்யேகமாக NCD Corner ஏற்படுத்தப்பட்டு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இதன்மூலம் மருத்துவ சேவையை கிராமப்புற மக்களுக்கு உறுதிபடுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, இன்றைக்கு 385 வட்டாரங்களிலே, ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவிலே, இந்த நடமாடும் மருத்துவக் குழுக்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மருத்துவப் பரிசோதனைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு அந்த மருத்துவக் குழுவிலே 387 Lab Technicians மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களாலே நியமிக்கப்படவிருக்கிறார்கள். தற்போது, இரத்தம் மற்றும் சளி போன்றவற்றை பரிசோதனை செய்ய ஆய்வக வசதிகளோடுகூடிய ஒரு மருத்துவமனை எப்படிச் செயல்படுமோ அதேபோன்ற வசதி இந்த நடமாடும் வாகனங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இவை ஏறத்தாழ 385 வட்டாரங்களிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், குறிப்பாக மலைப் பகுதிகளில் கூடுதலாக இரண்டு வாகனங்களை அளித்துள்ளார்கள். இதுவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையின்படி, கடந்த 2013–2014 ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 1,83,095 முகாம்கள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு, ஏறத்தாழ 1,04,57,225 மக்கள் பயன் அடைந்துள்ளனர் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று கிராமப் புறங்களில், நடமாடும் பல் மருத்துவமனைகளை உருவாக்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 ஜூலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் சிகிச்சையைப் பொறுத்தவரை, பிரத்யேகமாக அமைக்கப்பட்ட* Dental Chair*–ல்தான் நோயாளியைப் படுக்க வைத்து சிசிக்சை அளிக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் இன்றைக்கு பல் மருத்துவ சேவையை உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்ற தகவலை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 11 ஆரம்ப சுகாதார வட்டங்களில் 7 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சேவை சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, என்னுடைய அனுமதியில்லாமல் திடீரென்று எழுந்து நின்று பேசக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கையை மட்டும் உயர்த்துங்கள். நான் உங்களை* allow *செய்தால், பேசுங்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். திடீரென்று நீங்களாக எழுந்து நின்று பேசினால் எப்படி?*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் லாரியை. . .*



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் மூத்த உறுப்பினர், உங்கள் இருக்கையில் அமர்ந்துகொண்டு கையைத் தூக்குங்கள். உங்கள் இருக்கையில் அமர்ந்துகொண்டு கையைத் தூக்கினால் நான் என்னவென்று கேட்பேன்.*

**செல்வி கே. பாலபாரதி:** Zero hour*–ல் எழுந்து நின்று கேட்டால்தான் உங்களுக்குத் தெரியும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அப்படியெல்லாம் எழுந்து நிற்கவேண்டும் என்று இல்லை. நீங்கள் கையை உயர்த்துங்கள். அதன்பிறகு, நான் உங்களைப் பேச அழைக்கிறேன். இப்போது, நீங்கள் பேசுங்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் கடத்தலைத் தடுப்பதற்காக. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதி இல்லை. நீங்கள் கொடுத்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பியிருக்கிறேன். அதற்கான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அதைவிட முக்கியமான விஷயத்தை அவையில் எடுக்க வேண்டியிருக்கிறது. திரு. அர. சக்கரபாணி, சொல்லுங்கள்.*

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொத்தயம் என்ற இடத்தில் உள்ள நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்ட உத்தேசிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்காததால், அந்தப் பணி இன்னும் முடிவு பெறாமல் உள்ளது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து, அந்த அணையைக் கட்டி முடிப்பதற்கு முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் கேள்வி மாதிரியெல்லாம் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு மத்திய அரசு விலை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதி இல்லை. நீங்கள் அதுகுறித்து தற்போதுதான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள், (குறுக்கீடு)*

உட்காருங்கள். திரு. சு. குணசேகரன். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. முனைவர் ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதுகுறித்து நீங்கள் சொல்லிவிட்டீர்கள், எனக்குப் புரிகிறது. (குறுக்கீடு) அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, நெல்லுக்குக் கூடுதல் விலை கேட்டு கொடுத்த அறிவிப்புதானே? அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) அதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள், துறையிலிருந்து அதற்கு பதில் வரட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. சு. குணசேகரன். தகவல் கோரல்தகவல் கோரல் முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் புதிய ஆட்சி அமைந்த பிறகு, சுமார் 300 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்போது அந்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டு, தமிழகத்திற்கு திரும்ப வந்திருக்கிறார்கள். ஆனால், இதுவரை இலங்கையினால் கைப்பற்றப்பட்ட 54 படகுகள். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் உங்களைப் பேச அனுமதித்தேன். மறுபடியும் நீங்கள் ஏன் கையைத் தூக்குகிறீர்கள்?

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 54 படகுகள் இதுவரை மீட்கப்படவில்லை. இது மீனவர்களுடைய வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நெல், கோதுமை போன்ற விளைபொருட்களுக்கு மத்திய அரசு கொள்முதல் விலையை அறிவிக்கும். அதோடு மாநில அரசுகள் அங்கே இருக்கின்ற விவசாயிகளுடைய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பதில் கேட்டு துறைக்கு அனுப்பியிருக்கிறேன், பதில் வரட்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.





**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகளும் விலையை அறிவிப்பார்கள். அந்த அடிப்படையிலே, தமிழகத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நெல்லுக்குக் கூடுதல் விலையை அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில், மத்திய அரசு, மாநில அரசு கொடுக்கக்கூடிய ஆதார விலையைக் கொடுக்கக்கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இதனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி, அதனால் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து பல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவை அந்த துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. துறையிடமிருந்து பதில் கிடைக்கப்பெற்றவுடன் எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன விஷயம்? (குறுக்கீடு) இங்கு ஒன்று சொல்கிறீர்கள். வெளியில்போய் ஒன்று பேசுகிறீர்கள். (குறுக்கீடு) என்ன விஷயம் என்று சொல்லுங்கள்?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினிதா என்ற ஒரு தலித் பெண்மணி, கரூர் மாவட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் உள்ளது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள். (குறுக்கீடு) திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்க முடியாது. எத்தனை கேள்விதான் கேட்பீர்கள்? ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். ஒரு கட்சியின் சார்பாக ஓர் உறுப்பினர் ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். Zero hour–ல் கை தூக்கி வாய்ப்பு கேட்கும் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், பேசுங்கள்.

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நெல்லுக்குக் கொடுக்கக்கூடிய ஆதார விலையை மாநில அரசுகள் கொடுக்க வேண்டாம் என்று கூறியிருப்பது விவசாயிகளிடையே பதற்றத்தை உருவாக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கேள்வி கேட்டார். அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், சொல்லுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மேலும், மத்திய அரசு தமிழகத்தில் சமஸ்கிருத விழா கொண்டாட வேண்டும் என்று கூறியிருப்பது தமிழகத்தில் மிகுந்த பதற்றத்தை உருவாக்கி இருக்கிறது. இவை குறித்து பேச வேண்டுமென்று கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றேன்.

## 3. கவன ஈர்ப்பு

### தமிழகத்தின் சில பகுதிகளில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. கு. லிங்கமுத்து, திரு. பி.எல். சுந்தரம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. இ. பெரியசாமி, திரு. அர. சக்கரபாணி, திரு. டி.ஆர்.பி. ராஜா, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, திரு. ஆர். அருள்செல்வன், திரு. எஸ். செந்தில்குமார், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. என்.ஆர். ரெங்கராஜன், திருமதி எஸ். விஜயதரணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*



### அறிக்கை

**1. மழை பெய்த விவரம்**

*2012 ஆம் ஆண்டில் இயல்பாகத் தமிழகத்திற்குக் கிடைக்கும் மழையளவான 920.9 மி.மீட்டரில் 711.9 மி. மீட்டர் மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது.*

*2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பெற்ற மழை அளவு 739.8 மி. மீட்டர் ஆகும். இது எதிர்பார்க்கப்பட்ட சராசரி ஆண்டு மழைப் பொழிவைவிட 20 விழுக்காடு பற்றாக்குறையாகும்.*

*2014 ஆம் ஆண்டில் 14–7–2014 வரை இயல்பாகத் தமிழகத்திற்குக் கிடைக்கும் மழையளவான 233.7 மி. மீட்டரில் இதுவரை பெய்த மழை அளவு சராசரியாக 250.3 மி.மீட்டர்.*

**2. நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்த விவரம்**

*நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறைவாகவே உள்ளது. உதாரணமாக மேட்டூர் அணையின் மொத்தக் கொள்ளளவான 93,470 கன அடியில் கடந்த ஆண்டு 10–7–2013 அன்றைய நிலவரப்படி 26,470 கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரை 16,413 கன அடி உள்ளது. அதேபோல் பவானிசாகர் அணையின் கொள்ளளவான 32,800 கன அடியில் கடந்த ஆண்டு 8,229 கன அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 10–7–2014 வரை 3,406 கன அடியாக உள்ளது. பெரியாறு அணையின் மொத்தக் கொள்ளளவான 10,570 கன அடியில் கடந்த ஆண்டு 3,380 கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரை 1,360 கன அடி உள்ளது. அதேபோல், வைகை அணையின் கொள்ளளவான 6,091 கன அடியில் கடந்த ஆண்டு 1,579 கன அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 10–7–2014 வரை 230 கன அடியாக உள்ளது.*

**3. கடந்த ஆண்டில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

*தமிழகத்தில் கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களுக்கு அரசாணை (நிலை) எண் 48, வருவாய், நாள் 13–2–2013 இல் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க மற்றும் பயிரிழப்பிற்காக ரூ.608.75 கோடியும் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு அரசாணை (நிலை) எண் 123, வருவாய், நாள் 25–4–2013 இல் ரூ.1,004.86 கோடியும், ஆக மொத்தம் ரூ.1,613.61 கோடி மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்களால் குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்கவும் மற்றும் பயிரிழப்பிற்காக விவசாயிகளுக்கு நிவாரணமாகவும் வழங்கப்பட்டது.

### 4. 2014 ஆம் ஆண்டில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

(i) கடந்த ஆண்டில் மொத்த மழை அளவில் 20 சதவீதம் குறைபாடு ஏற்பட்டுள்ளதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டுவரும் இந்த அரசு தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளித்திட முழுமையாக முனைந்துள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை, கால்நடைத் தீவனத் தட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றியும், அதைச் சமாளிக்கத் தேவையான நிதி ஆதாரங்கள் பற்றியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காகவும், 681.53 கோடி ரூபாய் அளவிலான நிவாரணத் தொகுப்பை அரசு வழங்கியது. இதில் 189.16 கோடி ரூபாய் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், 492.37 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளிடம் உள்ள நிதியிலிருந்தும், செயல்முறையில் உள்ள திட்டங்களிலிருந்தும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்த அரசாணை (நிலை) எண் 89, வருவாய், நாள் 24–2–2014–ல் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்பட்டது:

| வ. எண் | துறை | மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| | 12 மாவட்டங்கள் (சென்னை உட்பட) | |
| 1. | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை | 42.45 |
| 2. | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | 13.65 |
| 3. | சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (சென்னை மட்டும்) | 50.00 |
| 4. | நகராட்சி நிருவாகம் | 50.87 |
| 5. | பேரூராட்சிகள் | 16.19 |
| | ஏனைய 20 மாவட்டங்கள் | |
| | ஏனைய 20 மாவட்டங்களுக்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50.00 இலட்சங்கள் வீதம் (மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில்) | 10.00 |
| | கால்நடை பராமரிப்பு | |
| | கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்க கால்நடை பராமரிப்புத் துறைக்கு (மாநிலம் முழுமைக்கும்) | 6.00 |
| | **மொத்தம்** | **189.16** |



| வ. எண் | துறை | | திட்ட நிதி/ பொது நிதி (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| | கடுமையாக குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் 12 மாவட்டங்கள் (சென்னை உட்பட) | | |
| 1. | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சிகள் | 16.07 |
| | | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் | |
| | | சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் | |
| 2. | ஊரக வளர்ச்சித் துறை | | 184.13 |

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத் தொகை | | *200.20* |
| | ஏனைய *20* மாவட்டங்களுக்கு | | |
| *3.* | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை | நகராட்சி நிருவாகம் | *68.61* |
| | | பேரூராட்சிகள் | *14.34* |
| | | தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (மாநிலம் முழுமைக்கும்) | *54.25* |
| | | ஊரக வளர்ச்சித் துறை | *154.97* |
| | கூட்டுத் தொகை | | *292.17* |
| *4.* | குடிநீர் வழங்கலுக்குத் தேவைப்படும் மொத்தத் தொகை | | *492.37* |
| | | **மொத்தம்** | **492.37** |

(ii) நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண் தொழிலை ஊக்குவிப்பதிலும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழகத்தில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வது குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 6–6–2014 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு 19 விழுக்காடு அளவுக்கு மழை குறைவாகப் பெய்த போதிலும், மண் வளத்தை மேம்படுத்தியதன்மூலமும், நவீன உத்திகளைக் கையாண்டதன்மூலமும், தேவையான விதை, நுண்ணூட்டச் சத்து, உரங்கள் ஆகியவற்றை இருப்பில் வைத்து உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளித்ததன்மூலமும், இதுவரை இல்லாத சாதனை அளவாக 103.38 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2014 ஜூலை 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

தற்போதுள்ள சூழ்நிலையில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்:

1. கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கியதுபோல், இந்த ஆண்டும் விவசாயத்திற்கு 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும்.

2. நீர் ஆதாரங்களில் வயலுக்கு நீர் வீணாகாமல் கொண்டு செல்ல உதவும் வகையில், ஒவ்வொருவருக்கும் 600 அடி எச்.டி.பி.இ. குழாய்கள் 700 விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

3. டெல்டா பகுதிகளில் காவேரி நீர் பெறப்படும்போது, வாய்க்கால் பாசனம்மூலம் அதிக அளவு நெல் சாகுபடி மேற்கொள்ளும்பொருட்டு, 100 விழுக்காடு மானியத்தில் சமுதாய நாற்றங்கால் முன்னரே அமைத்து, வாய்க்கால்களில் நீர் பெறப்படும் சமயத்தில் நடவுப் பணி மேற்கொள்ள ஏதுவாக நெல் நாற்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. டெல்டா பகுதிகளில் 100 விழுக்காடு மானியத்தில் நெல் நடவு இயந்திரங்களை 200 விவசாயிகள் குழுக்களுக்கு வழங்கி நடவுப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

5. வேலையாட்கள் பற்றாக்குறை அதிகம் உள்ளதால், குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள பகுதிகளில் சரியான தருணத்தில் களையெடுத்து, உயர் மகசூல் பெற வழிவகை செய்யும் வகையில், 100 விழுக்காடு மானியத்தில் இயந்திரக் களையெடுக்கும் கருவிகள் 200 விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

6. குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள பகுதிகளில் உயரிய தொழில்நுட்பங்கள் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், உயர் மகசூல் தரும் இடுபொருட்களான நெல் நுண்ணூட்டக் கலவை, துத்தநாக சல்பேட் ஆகியவை தலா 1 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

*7. உயிர் உரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள் தலா 50,000 ஏக்கர் பரப்பளவிற்கு 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும். இதேபோன்று 60,000 ஏக்கர் பரப்பளவிற்கு ஜிப்சம் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.*

*8. மேற்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம் அரசுக்கு 32 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.*

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த நடவடிக்கைகளினால், டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர் மூலம் விவசாயிகள் கூடுதல் பரப்பில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளவும், உயர் மகசூல் பெறவும் வழிவகை ஏற்படும்.*

*மேலும், மழை நிலவரம் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்து அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. வரக்கூடிய மாதங்களில் மழை அளவைக் கண்காணித்தும், நீர்நிலைத் தேக்கங்களில் நீர் இருப்பு அளவைக் கண்காணித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் அரசால் தொடர்ந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டில், கன்னியாகுமரி, திருநெல்வேலியின் ஒரு பகுதியைத் தவிர்த்து, பெரும்பான்மையான பகுதிகளில் மழை இல்லாததனால், கடந்த இரண்டு வருட காலமாக வறட்சி தொடருகிறது. அதனால் கடும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. அனைத்து அணைகளிலும், கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்த நீரின் அளவைவிட, மூன்றில் ஒரு பகுதியாக நீரின் அளவு குறைந்துள்ளது. நவதானிய உற்பத்தி முற்றாக இல்லாமல் போய்விட்டது. பால், கரும்பு போன்றவற்றின் உற்பத்தி மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது. காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள பெரும்பாலான நிலங்களில் குறுவை சாகுபடியைத் துவங்க முடியாத நிலை காணப்படுகிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*





**திரு. ஏ. லாசர்:** *தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோவை, பொள்ளாச்சி, புதுக்கோட்டை, ஈரோடு உட்பட பல மாவட்டங்களில் தென்னை மரங்கள் இலட்சக்கணக்கில் காய்ந்துபோய் உள்ளன. தேனி மாவட்டத்தில் மாமரம் உட்பட காய்ந்துள்ளன; சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பனை மரங்கள் உட்பட பாதிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிவாரணத்திற்கென சில அறிவிப்புகளை அறிவித்துள்ளார்கள். ஆனால், இந்த அறிவிப்புகள் கடந்த ஆண்டுபோல் முழுமையானதாக இல்லாததனால், விவசாயிகளிடம் 'கூடுதல் நிவாரணம்' என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. இதேகாலத்தில், தமிழ்நாட்டில் 90 இலட்சம் விவசாயத் தொழிலாளிகள், வறட்சியின் காரணமாக விவசாயம் இல்லாததனால், வேலைகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு 100 நாள் வேலை திட்டம் என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய வேலைவாய்ப்பிற்கான ஒரே நிவாரணமாக இருக்கின்றது. தற்போது பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு மட்டும் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. பிற வேலைகளுக்கு கவனம் செலுத்தப்படாததனால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு சட்டக் கூலி 167 ரூபாய் கிடைக்காமல் இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *பாதிக்கப்பட்ட மாவட்டங்களை அரசு வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றும், அப்படி வறட்சி மாவட்டங்களாக அறிவித்தால்தான், 100 நாள் வேலைத் திட்டம் என்பதை 150 நாள் வேலைத் திட்டமாக சட்டப்படி அமல்படுத்த முடியும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் வரும் 25 ஆம் தேதி தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்த இருக்கிறார்கள் என்கிற தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழகத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகள், அதாவது, சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி தவிர்த்து ஏனைய மாவட்டங்களை தமிழக அரசு வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரணப் பணிகளைத் துவங்க வேண்டும் என்று அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். வணக்கம்.*

[2014 ஜூலை 22

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி சம்பந்தமான மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் படித்தேன். 2012–2013 ஆம் ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து 2013–2014 ஆம் ஆண்டுகளிலும் கடுமையான வறட்சி ஏற்பட்டு, இன்றைக்கும் அந்த நிலை நீடிக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 2012–2013 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சிக்காக, இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் செய்யாத ஒரு சாதனையாக, வறட்சி நிவாரணத்திற்கு மானியத்தை அறிவித்து நிதி உதவிகளை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், 2013–2014 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்ட நிலையிலும், தேர்தல் போன்ற பல்வேறு நிலைகளால் தமிழகத்தை 'வறட்சி மாநிலம்' என்று அறிவிக்க முடியாத நிலை நீடித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், 2013 ஆம் ஆண்டும் தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், வறட்சி மாநிலம் என்று அறிவித்து, வறட்சி நிவாரணத்தைத் தொடர்ந்து கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வறட்சி நிவாரணம் என்று கணக்கிடுகிறபொழுது, 50 விழுக்காட்டிற்கு மேல் விளைச்சல் பாதிக்கப்பட்டவர்களுக்கு வறட்சி நிவாரணம் என்று கொடுத்ததால், மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி நிவாரணம் கொடுக்கப்படவில்லை. காரணம், அந்தப் பகுதிகளில் எல்லாம் மழையே இல்லாத காரணத்தால் பயிர் செய்ய முடியாத நிலை இருந்தது. ஆனால், விவசாயிகள் தொடர்ந்து பயிர் உற்பத்தி செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளாகி இருக்கிற காரணத்தால், அந்த அளவுகோலை எடுத்துவிட்டு, அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தென் மாவட்டங்களில் உள்ள மானாவாரி விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய பிரத்யேகமான பிரச்சினை என்னவென்றால், அங்கு எந்தவித நீராதாரமும் இல்லாமல், ஆண்டுதோறும் உழுவதும், பயிரிடுவதும், அது காய்ந்து விடுவதும், நவதானியங்கள் உள்ளிட்ட பல்வேறு பயிர் வகைகள் பாதிப்புக்குள்ளாவதும் என்ற நிலை இருக்கின்றது. மானாவாரி விவசாயிகளுக்கென்று தனியாக வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டும். அதேபோல கோவை போன்ற மாவட்டங்களில் தென்னை விவசாயிகள் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.



2014 ஜூலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உங்களுக்கு பேரவை விதியை படித்துக் காட்டுகிறேன். "அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது எவ்வித விவாதமும் அப்போது கூடாது. ஆயினும், தெளிவு அல்லது விளக்கம் பெறும்வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்த உறுப்பினர், இரண்டுக்கும் மேற்படாத வினாக்களைக் கேட்பதற்கு பேரவைத் தலைவர் தம் உசிதப்படி அனுமதிக்கலாம்." இதுதான் விதி. நீங்கள், உங்கள் இஷ்டத்திற்கு விவாதம் செய்து கொண்டிருந்தால், எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மற்றும் மிளகாய் போன்ற பணப் பயிர்களுக்கும் நிவாரணம் கொடுக்க வேண்டும். கூட்டுறவுக் கடன் என்பது மத்திய காலக் கடனாகத் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து வறட்சி ஏற்பட்ட காரணத்தால் கூட்டுறவுக் கடன்களைக் கட்ட முடியாத நிலை நீடிக்கிறது. தெலுங்கானாவில் எப்படி இந்த ஆண்டு கூட்டுறவு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், வறட்சி பற்றி மட்டும் பேசி முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதேபோல, கூட்டுறவுக் கடனையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, விவசாயத் தொழிலாளர்களுக்கான நிவாரணத் தொகையையும் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நானும் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டிலே பெரும் பகுதிகளில் வறட்சி நிலவுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, நெல், வாழை, தென்னை மற்றும் கரும்பு போன்றவற்றை பயிரிடுகிற விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். தொடர்ந்து மூன்றாண்டு காலமாக மழை இல்லாத காரணதிதினால், நிலத்தடி நீரின் அளவு 1,000 அடிக்கும் கீழே போய்விட்டது. இட்ட பயிர் சாவியாகிவிட்ட காரணத்தினால் வீட்டுக்கு வரவு இல்லை. வங்கியிலும், கூட்டுறவு

வங்கியிலும் பெற்ற கடனை விவசாயிகளால் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை இன்னைக்கு இருந்துகொண்டிருக்கிறது.

குறிப்பாக, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள நூறு சதவிகித விவசாயிகளும் விவசாயத்தை மட்டுமே நம்பியிருப்பவர்கள். அத்துடன் குடிநீர்ப் பஞ்சமும் வந்துவிட்டது. இந்த நிலையிலே சென்னையைத் தவிர, பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக இந்த அரசு அறிவிப்பதோடு நிவாரணமும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வங்கிக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நில வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். 50 ஆண்டு காலமாக இருந்த தென்னை மரங்கள் இன்றைக்கு பாழ்பட்டிருக்கின்றன. எனவே, ஒரு தென்னை மரத்திற்கு ரூ. 25,000/- என்கிற அளவிலே நிவாரணம் அளிக்க வேண்டும். இன்றைக்கு ஆடு, மாடுகளுக்குக்கூட தீவனம் இல்லாத நிலையிருக்கிறது. அரசே கொள்முதல் செய்து ஆடு, மாடுகளுக்கு தீவனம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் செய்வது போலப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) இப்போதுதான் சட்டமன்றப் பேரவை விதியைப் படித்துக் காண்பித்தேன். முன்னாள் அமைச்சர் நீங்கள், விதியைப்படித்துக் காண்பித்த பிறகும் நீங்கள் விவாதம் செய்து கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) அவரவர்களுக்கு வாய்ப்பு வரும்போது, நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். இது என்ன முறை? (குறுக்கீடு) இது என்ன முறையென்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) கேள்வி கேட்டுவிட்டு உட்கார வேண்டும்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விதான், வேறொன்றும் இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்.

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சருடைய விவர அறிக்கையின்மீது இரண்டு கேள்விகள் கேட்கலாம். நீங்கள் அதிலே விவாதம் செய்து கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) இது முறையல்ல. (குறுக்கீடு) நான் நிறைய முறை சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) உங்களுக்கு நான் விதியைப் படித்துக் காண்பித்துவிட்டேன். அதற்கும் மேலே நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் முறையல்ல; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)





**திரு. எ.வ. வேலு:** அரசாங்கத்தை ஒன்றும் நான் குறை சொல்லவில்லை. வேண்டுகோள்தான் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டுகோளையெல்லாம் நீங்கள் அந்த அறிக்கையிலிருந்து கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் விரிவாக, உங்களுடைய சௌகரியத்திற்குப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) "உரையை முடித்து விடுகிறேன்", "முடித்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவர அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற ஒரு விவரத்தில் சிறிய தவறு இருக்கிறதா என்று எனக்குப் புரியவில்லை. மேட்டூர் அணையிலே 16,413 கன அடியும், பவானிசாகர் அணையில் 3,406 கன அடியும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் இப்படிப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல; உட்காருங்கள். (குறுக்கீடு) இது சரியல்ல; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்; போதும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இதிலே ஒரு விளக்கமும் எனக்கு வேண்டாம். (குறுக்கீடு) இதிலே ஒரு விளக்கமும் எனக்குத் தேவையில்லை. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பில் என்ன விளக்கம்? (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, நான் அவரை உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவ்வளவுதான்; இதிலே விவாதம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அதையெல்லாம் பார்த்துதான், விவர அறிக்கையை அளித்திருக்கிறார்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, கேள்வியோடு உரையை முடியுங்கள். நீங்கள் இரண்டே இரண்டு கேள்விகள்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) அதற்குமேல் பேசுவதற்கு நான் உங்களை அனுமதிக்கமாட்டேன்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலை குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழகத்தில் பரவலாக, பெரும்பாலான மாவட்டங்கள் கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக விவசாயிகள் கடும் துயரத்திலே இருக்கின்றார்கள். எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில், 1.31 இலட்சம் ஹெக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டது. இதில் 5,000 ஹெக்டேர் நிலங்களில் 50 விழுக்காடு பாதிப்பும், மீதமுள்ள 1.26 இலட்சம் ஹெக்டேர் நிலங்களில் முழுவதுமாக பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. தென்னை மரங்கள் மட்டுமின்றி, வறட்சியைச் சமாளிக்கும் சக்தி படைத்த பனை மரங்களும்கூட பட்டுப் போயுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, கேள்வி கேளுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** உரையை முடித்துவிடுகிறேன். விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ள இந்த நிலையில், வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்க அரசு முன்வருமா? ஆடிப்பட்டம் தொடங்கிவிட்ட சூழ்நிலையில், இதுவரை வழங்கப்படாத பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்குவதற்கு இந்த அரசு முன்வருமா? நில வரி வசூல் செய்யப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா? விவசாயிகளின் பயிர்க் கடன், நகைக் கடன் போன்றவற்றை உடனடியாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். இரண்டு கேள்விகள்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** விவசாயிகளின் பயிர்க் கடன், நகைக் கடன் போன்றவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு முன்வருமா எனக் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

**திரு. எஸ். செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில ஆண்டுகளாகவே அதிக மழை



இல்லாத காரணத்தால், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. அதனால் மிகவும் பாதிப்புக்குள்ளானது, விவசாயிகள்தான். குறிப்பாக, டெல்டா மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். டெல்டா மாவட்டங்களில், காவேரி நீர் இல்லாததாலும், மழை பெய்யாததாலும், குறுவைப் பயிர் சாகுபடி மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. ஆழ்குழாய்க் கிணறுகள்மூலம் பாசனம் செய்யலாம் என்றால், நிலத்தடி நீர் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவையில் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ள மானியங்கள், திட்டங்கள் அனைத்தும், யானைப் பசிக்குச் சோளப் பொரியாகவே உள்ளது. எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும், எந்தவிதப் பாரபட்சமுமின்றி, உடனடியாக வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமெனக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழகத்திலே மழை குறைவின் காரணமாக கடும் வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக, தென்னை விவசாயிகள், வாழை விவசாயிகள், நெற்பயிர் விவசாயிகள் இலட்சக்கணக்கான பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கான தென்னை மரங்கள் பட்டுப் போயிருக்கின்றன. திருச்சியிலே வாழை மரங்கள் பட்டுப்போய்விட்டன என்று விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) அந்த அறிக்கையிலிருந்து இரண்டு கேள்விகள் மட்டும் கேளுங்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** தென்னை மரம் பட்டுப்போனதால், மத்திய அரசை வலியுறுத்தி தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலமாக விவசாயிகளுக்கு உதவித் தொகை பெற்றுக் கொடுக்க அரசு முன்வர வேண்டும். மேலும், மீனவர்களுக்கு மீன் பிடி தடைக் காலங்களில் 45 நாட்களுக்கு உதவித் தொகை வழங்குவதைப்போல, விவசாயம் இல்லாத காலங்களில்

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்][2014 ஜூலை 22

விவசாயிகளுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மேலும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சோழ மண்டலப் பகுதி உட்பட கன்னியாகுமரி வரை இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளையும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நீங்கள் இரண்டு கேள்விகள் மட்டும்தான் கேட்க வேண்டும். இதன்மீது விவாதம் இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் இருக்கின்ற வறட்சியினுடைய தொடர்ச்சியைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் இன்று இந்த அவையில் வைத்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கை இல்லை. இது ஒரு மேம்போக்கான அறிக்கை என்பதை முதலில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இரண்டு முக்கியமான கேள்விகள். ஒன்று வறட்சியால் நேரடியாக பாதிக்கப்படக்கூடியவர்கள் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும்தான். விவசாயிகள், குறிப்பாக கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் இருக்கக்கூடிய தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இலட்சக்கணக்கான தென்னை மரங்கள் காய்ந்து, சருகாகிப் போய்விட்டன. எனவே, அவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அதேபோல, விவசாயத் தொழிலாளர்களுக்கு, வறட்சி நீள்கின்றவரையிலும் குடும்ப அட்டைமூலம் ஒரு குடும்பத்திற்கு மாதத்திற்கு ரூ.2,000/– கொடுக்க அரசு முன்வருமா என்பதை இந்தக் கவன ஈர்ப்பின் மூலமாக அரசுக்கு வேண்டுகோளாகக் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்ட பேரிடர்களான வறட்சி, வெள்ளம், சுனாமி, நிலச் சரிவு மற்றும் புயல் போன்ற பேரிடர்களைத் திறம்படக் கையாள்வதிலும், நிவாரண நடவடிக்கைகளை



2014 ஜூலை 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

மேற்கொள்வதிலும், உலகத்திற்கே வழிகாட்டியாக விளங்குகின்ற ஒரே தலைவர், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், தமிழக மக்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் கிள்ளிக் கொடுத்தால் போதாது என்று அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற ஒரே தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) தாய் உருவ தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதற்கு பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் இந்த அவையில் இருந்தாலும், தமிழகத்திலே கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, முன் எப்போதும் இல்லாதவகையில், இதுவரை யாரும் தராத வகையில் ரூ.1,613.61 கோடியை யாரும் எதிர்பார்த்திராத வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணத் தொகுப்பை தாயுள்ளத்தோடு வாரி வழங்கி, வறட்சியிலே புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று, இந்த விவர அறிக்கையிலே மிகத் தெளிவாக மழை அளவின் நிலையைக் குறிப்பிட்டிருக்கின்றோம். 2012 ஆம் ஆண்டில் இயல்பாக தமிழகத்திற்குக் கிடைக்கும் மழையின் அளவான 920.9 மில்லி மீட்டரில், 711.9 மில்லி மீட்டர் மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. 2013 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பெற்ற மழையின் அளவு 739.8 மில்லி மீட்டர் ஆகும். இது எதிர்பார்க்கப்பட்ட சராசரி ஆண்டு மழைப்பொழிவைவிட 20 விழுக்காடு பற்றாக்குறையாகும். 2014 ஆம் ஆண்டில் 14–7–2014 வரை இயல்பாக தமிழகத்திற்குக் கிடைக்கும் மழை அளவான 233.7 மில்லி மீட்டரில், இதுவரை பெய்த மழையின் அளவு சராசரியாக 250.3 மில்லி மீட்டர். அதேபோல, நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு, உதாரணமாக மேட்டூர் அணையின் மொத்தக் கொள்ளளவான 93,470 மில்லியன் கன அடியில், கடந்த ஆண்டு 10–7–2013 அன்றைய நிலவரப்படி 26,470 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரையில் 16,413 மில்லியன் கன அடியாக உள்ளது. அதேபோல் பவானிசாகர் அணையின் கொள்ளளவான 32,800 மில்லியன் கன அடியில் கடந்த ஆண்டு 8,229 மில்லியன் கன அடியாகவும், இந்த ஆண்டு 10–7–2014 வரையில் 3,406 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. பெரியாறு அணையின் மொத்தக் கொள்ளளவான 10,570 மில்லியன் கன அடியில், கடந்த ஆண்டு 3,380 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்த ஆண்டு 10–7–2014 வரை 1,360 மில்லியன் கன அடியாக உள்ளது. (குறுக்கீடு)

[2014 ஜூலை 22

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையில் நீங்கள் குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்தித்தான் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக பதில் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரம் சொல்கிறேன். பொறுமையாக இருந்து கேளுங்கள். வைகை அணையின் கொள்ளளவான 6,091 மில்லியன் கன அடியில் கடந்த ஆண்டு 1,579 மில்லியன் கன அடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு 10–7–2014 வரையில் 230 மில்லியன் கன அடியாகவே உள்ளது. இருந்தபோதிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளித்திட, கால்நடை தீவனத் தட்டுப்பாட்டை சமாளித்திட முழுமையாக முனைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குடிதண்ணீர் பற்றாக்குறை, கால்நடைத் தீவனத் தட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றியும், அதனை சமாளிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பற்றியும் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் விரிவான, முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் ஒன்றல்ல, இரண்டல்ல 681.53 கோடி ரூபாய் அளவில் நிவாரணத் தொகுப்பை தாய் உள்ளத்தோடு வாரி வழங்கியிருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 ஜூலை 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

அதேபோல், நாட்டின் முதன்மையான தொழிலான வேளாண் தொழிலை ஊக்குவிப்பதிலும், வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதிலும் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழகத்தில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடியை மேற்கொள்வது குறித்து, கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் 6–6–2014 அன்று விரிவான, முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில், தற்பொழுதுள்ள சூழ்நிலையில் குறுவை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும்வகையில், விவசாயிகளின் பாதுகாவலர் மாண்புமிகு அம்மா அவர்கள் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், மழை நிலவரம் மற்றும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. வரக்கூடிய மாதங்களில் மழை குறைவாக இருந்தால், கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004 ஆம் ஆண்டு சுனாமி ஆழிப்பேரலை வந்தபோது, அண்டை நாடுகள் எல்லாம் அச்சத்தில், அதிர்ச்சியில் உறைந்திருந்தபோது, சுனாமி வந்த வேகத்தைவிட விரைவாக சுனாமி பாதித்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரணப் பணிகளை மேற்கொண்டு உலகளவில் பாராட்டைப் பெற்றவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் அன்றைக்கிருந்த அதிகாரிகள் எல்லாம், "மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சுனாமி மீண்டும் வரும், ஆகவே அந்த இடத்திற்குச் செல்வது உயிருக்கு ஆபத்து" என்று கூறியபோதும், தன் உயிரை துச்சமெனத் தூக்கி எறிந்துவிட்டு, என் உயிரைவிட தமிழக மக்களின் உயிர்தான் எனக்கு முக்கியம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) ஓடோடிச் சென்று நேரடியாகக் களத்தில் இறங்கி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, சுனாமி வந்த கடலை வென்றெடுத்த கருணைக் கடல்தான் எங்கள் அம்மா என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேவேளையில் சுனாமி வந்தபோது, சுனாமி வந்த வேகத்தைவிட,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

இருந்த இடத்தைவிட்டு ஓடி ஒளிந்த கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 2009 ஆம் ஆண்டு *(குறுக்கீடுகள்)* பதில் கேளுங்கள். 2009 ஆம் ஆண்டு வறட்சி வந்தபோது *(குறுக்கீடுகள்)* 2009 ஆம் ஆண்டு வறட்சி வந்தபோது வெறும் 24.25 கோடி ரூபாய்தான் இவர்கள் வறட்சிக்காகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஆகவே, 24.25 கோடி ரூபாய் மாத்திரம்தான் இவர்கள் வறட்சி வந்தபோது கொடுத்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூ.1,613.61 கோடியை வாரி வழங்கி, தமிழக மக்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்தவர். ஆகவே, தமிழக மக்களுக்கு. . . *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–55*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கையருகே வந்து கோஷமிட்டனர். தி.மு.க. உறுப்பினர்கள் திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. மு. திராவிடமணி மற்றும் திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கையருகே தரையில் அமர்ந்து கோஷமிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். நான் உங்களை எச்சரிக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் இந்தமாதிரி செய்வது முறையல்ல. *(குறுக்கீடுகள்)* முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். இதெல்லாம் முறையல்ல. முதலில் நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை நான் பலமுறை எச்சரித்தும், அந்த எச்சரிக்கைக்கு செவிமடுக்காமல் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினாலே, அவைத் தலைவருடைய இருக்கையருகே வந்து முற்றுகையிட்டு, தரையில் வந்து உட்கார்ந்து அவை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் செய்கின்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை இந்த அவையிலே இருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* வெளியேற்றுங்கள். வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)*



2014 ஜூலை 22] [பேரவைத் தலைவர்]

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

கோஷமெல்லாம் போடக்கூடாது. வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* இதெல்லாம் முறையல்ல. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். அவைக் காவலர்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பேரவைத் தலைவரின் இருக்கையை முற்றுகையிட்டது சரியா? அதைச் சரியென்று நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா? இப்படிச் செய்தால் நான் அவையை நடத்த முடியுமா? அவையை நடத்துவதற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தரவில்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

*நண்பகல் 12–00*

*(மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் மற்றும் புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்பின்மீது தனது பதிலுரையைக் கூறிக்கொண்டிருந்தபோது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறுக்கிட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் முன்பாக ஒட்டுமொத்தமாக வந்து, விரும்பத்தகாத வார்த்தைகளாலும், விரும்பத்தகாத செயல்களாலும், இங்கே ஓர் அசாதாரணமான சூழ்நிலையை உருவாக்குகிற நோக்கத்தோடு குழப்பத்தை விளைவித்தார்கள். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், “நீங்கள் இருக்கைகளில் சென்று உட்காருங்கள், உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்” என்று திரும்பத் திரும்பச் சொல்லியும், நான் சொல்லியும், கேட்காமல் தொடர்ந்து சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களை முற்றுகையிட்டு. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷம் போடாமல், அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். அவைக் காவலர்கள், லாபியிலிருந்தும் அவர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவரை முற்றுகை இடுவதையே அவர்கள் குறிக்கோளாகக் கொண்டு, தகாத செயலைச் செய்துகொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டது. . . (குறுக்கீடு)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு வந்து முற்றுகையிடும்போது, பேரவைத் தலைவர் அவர்கள் இங்கு ஏதாவது* rulings *கொடுக்க முடியுமா? நான் எழுந்து, "நீங்கள் அனைவரும் அவரவர் இடங்களில் உட்காருங்கள், வாய்ப்புத் தருவோம், பேசுங்கள். பேசியதற்குப் பின்னால் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பினை வழங்குவார்கள்" என்று பலமுறை எடுத்துச் சொல்லியும், அவர்கள் அதைக் கேட்கவில்லை. (குறுக்கீடு) திட்டமிட்டு, இங்கு வந்து குழப்பம் விளைவிப்பதற்கென்றே தங்கள் நடவடிக்கையை தொடர்ந்து அவர்கள் மேற்கொள்கிறார்கள் என்பதனை நான் இந்தச் சபையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருகக்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர்கள் சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதற்கென்றே தினமும் வருகிறார்கள். வந்து சபையில் பிற உறுப்பினர்களையும் பேச விடாமல், இடையூறு செய்வதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இது சரியா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இதை சரி என்கிறீர்களா? (குறுக்கீடு) இது முறை என்கிறீர்களா? (குறுக்கீடு) இப்படி ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் நான் சபையை எப்படி நடத்துவது? இதை நியாயப்படுத்துகிறீர்களா? (குறுக்கீடு) பேரவைத் தலைவர் இருக்கையை முற்றுகையிட்டு, பேரவைத் தலைவரிடம் தகாத வார்த்தைகளைப் பேசியது முறையா? பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதற்குப் பரிந்துப் பேசுகிறீர்களா?*

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றுகை இட்டது தவறு. ஆனால், கவன ஈர்ப்பின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றபோது, தற்போது எழுப்பப்பட்ட பிரச்சினையின்மீது பதில் சொல்லியிருந்தால் பரவாயில்லை. தேவையற்ற பிரச்சினைகளை கிளப்புவதென்பது. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை எழுந்து பதில் சொல்ல விட்டார்களா? (குறுக்கீடு)*





**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உட்காருங்கள்; நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது உரையில் ஏதாவது உங்களுக்கு சந்தேகங்கள், விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றால் யாராவது ஒருவர் எழுந்து கேட்கலாம். முன்வரிசையில் அவர்களது தலைவர்களெல்லாம் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் எழுந்து கேட்கலாம் அல்லவா? கடைசி வரிசையில் இருந்தவர்கள் விறு விறு என்று எழுந்து வந்து, பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையை முற்றுகையிட்டு, தேவையில்லாத குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் பேசுவதற்கு அனுமதி கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் யாராவது ஒருவர் மட்டும்தானே கேட்க முடியும்? சபைத் தலைவர் இருக்கையை ஒட்டுமொத்தமாக வந்து முற்றுகையிட்டால், அது எவ்வாறு நியாயமாகும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பதிலுரையை முடியுங்கள். சீக்கிரம்.*

**மாண்புமிகு திரு. ஆர்பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட* subject *தானா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். பேரிடர்களான வறட்சி, வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு மற்றும் புயல் இவற்றில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த காலங்களிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையில் பதிவு செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இங்கே எடுத்து வைத்தேன். குறிப்பாக, இப்போது கோஷமிட்டு வெளியே சென்றிருக்கும் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, 2009 ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, 24.25 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லி, தற்போது அவர்கள் அது வேண்டும், இது வேண்டும் என்றெல்லாம் கேட்கிறார்கள். தமிழக மக்களுக்கு ஒரு கஷ்டமென்றால், வாரி வாரி வழங்கக் கூடிய ஒரே தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜுலை 22

தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் இங்கே இருக்கின்றன.

ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கின்ற அறிவார்ந்த கருத்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையாக வறட்சி பாதித்துக்கொண்டிருக்கிறது. அநேகமாக குடிநீரிலிருந்து, கால்நடைகளுக்குத் தீவனங்களிலிருந்து, கிராமப்புற விவசாயம் வரை முழுவதும் இன்றைக்கு மிக மோசமாக மாறிவிட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லாசர், இதுசம்பந்தமாகப் பேசி முடித்துவிட்டார். திரும்பவும் நீங்கள் அதையே பேசுகிறீர்களே? (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** பரிசீலிக்கிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறார். என்ன நடவடிக்கை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் பேசி முடித்துவிட்டார். திரும்பவும் நீங்கள் பேசுவது நல்ல முன்மாதிரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)



2014 ஜுலை 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விதிகளை நான் முன்னரே படித்துக் காட்டிவிட்டேன். உங்கள் கட்சி உறுப்பினர் திரு. லாசர் விளக்கமாக எல்லாவற்றையும் பேசிவிட்டார். மாண்புமிகு அமைச்சரும் பதில் அளித்துவிட்டார். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விலே மாண்புமிகு அமைச்சர் பதிலளித்ததற்குப் பின்னாலே, அதன்மீது விளக்கங்களைக் கேட்கக்கூடாது; இதுதான் விதி. மீண்டும் நீங்கள் எழுந்து பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன, திரு. சந்திரகுமார்?

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Discussison ஒன்றும் இல்லை. திரு. சந்திரகுமார், நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. இது discussion இல்லை. (குறுக்கீடுகள்) இது தீர்மானமும் இல்லை. (குறுக்கீடுகள்) இது முறையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், உட்காருங்கள். இது விவாதம் இல்லை, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். நான் பேசிவிடுகிறேன். கவன ஈர்ப்பு எடுக்கப்பட்டு, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசி முடித்துவிட்ட பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலுரையைச் சொன்னதற்குப் பின்னால், இதில் விவாதத்திற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர்கள் செய்ததை நியாயப்படுத்துகிறீர்களா? (குறுக்கீடுகள்) அந்த நடைமுறை சரியா? (குறுக்கீடுகள்) என் இடத்தில் நீங்கள் இருந்து பார்த்தால்தான் தெரியும். இப்படிச் செய்தால் நான் சபையை நடத்த முடியுமா? (குறுக்கீடுகள்) சபையை நடத்த முடியுமா? நான் என்ன செய்ய முடியும்? அவர்களின்* leaders *சொன்ன பிறகாவது அவர்கள் இடத்திற்குப் போக வேண்டும் இல்லையா? இடத்திற்குப் போகவில்லை என்றால், நான் எப்படி அவையைத் தொடர்ந்து நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) பிறகு நான் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடுகள்) இது முறையா? (குறுக்கீடுகள்) இது முறையில்லை என்று சொல்கிறீர்கள், ஆனால் பரிந்துரை பண்ணுகிறீர்களே? (குறுக்கீடுகள்) இல்லை, முறையில்லை என்று சொல்கிறீர்கள், பிறகு பரிந்துரை செய்கிறீர்களே? (குறுக்கீடுகள்) இது முறை இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. அதை எப்படி மறுபரிசீலனை செய்வது? (குறுக்கீடுகள்) எப்படி மறுபரிசீலனை செய்யச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) தினமும் அவர்கள் வந்து இப்படித்தான் செய்துவிட்டுப் போகிறார்கள். (குறுக்கீடுகள்) எப்படி நான் மறுபரிசீலனை செய்ய முடியும்? உட்காருங்கள், எப்படி மறுபரிசீலனை செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் எப்படி சபையை நடத்துவது? அவர்கள் இப்படி முறையில்லாமல் செய்வது எப்படிச் சரியாக இருக்கும்? (குறுக்கீடுகள்) அவர்கள் என்னுடைய வேண்டுகோளை செவிமடுக்கவில்லை. மாண்புமிகு பேரவை முன்னவரையும் பேச விடவில்லை. யாரையும் பேச விடவில்லை. இப்படி முறையில்லாமல் செய்வது எப்படிச் சரியாக இருக்கும்? திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.*

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெற்று வளமாக வாழ வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தோடும், அனைத்துத் துறைகளும் சிறந்த கட்டமைப்புகளைப் பெற்று எல்லா வகைகளிலும் முதன்மையான மாநிலமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐக் கொண்டு வந்து, தீவிரமாகச் செயல்படுத்திவரும் மக்களின் நலன் காக்கும் மகராசி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.



2014 ஜூலை 22] [திரு. பி.ஜி. நாராயணன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது முதல் நூற்று முப்பதாவது வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*பிற்பகல் 12–10*

## 5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிரிலே கலந்து, ஏழுரைக் கோடி தமிழர்களின் உள்ளத்தில் நிறைந்த எங்களின் சாதனைத் தாய், தமிழக மக்களுக்கு நிறைவான வாழ்வை விரைவாகத் தந்த வீரத்தாய், அரைத்தாலும் மணம் கொடுப்பது சந்தனம், உருகினாலும் ஒளி கொடுப்பது மெழுகுவர்த்தி. தமிழக மக்களுக்கு மணம் கொடுக்கும் சந்தனமாக, ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியாக வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1556, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3241, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2296, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3382, திரு. அ. கணேஷ்குமார்.



**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3585, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 279, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மேல்நிலைப் பள்ளி மாணவியருக்கு அரசு விடுதி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 453, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாணவர் உறைவிட விடுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1155, திரு. சி.எச். சேகர்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி வட்டம், வழுதிலம்பேடு காலனியிலுள்ள ஆதி திராவிடர் நல துவக்கப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1874, திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2397, திரு. ர.ம. பாபு முருகவேல். என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். நீங்கள் கொடுத்ததைத்தான் படிக்க வேண்டும்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி பகுதியில் வசிக்கும் புதிரை வண்ணார் இன மக்களுக்கு S.T. சாதிச் சான்று வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2679, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்ந்து வரும் செட்டில்மென்ட் பகுதிகளில் வீடு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், மின்சார வசதி, சாலை வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2745, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் படிக்கும் ஆதி திராவிட பெண்கள் தங்குவதற்கு விடுதி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3142, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்குப் பள்ளிகளில் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையுடன் உடைகளும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3175, டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3403, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி ஒன்றியம், மறவப்பட்டியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3469, திரு. ஏ. லாசர்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மக்களுக்கு காலனி வீடுகள் கட்டுவதற்கு இடம் வாங்க சிறப்புத் திட்ட நிதியை ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3530, திரு. கு. லிங்கமுத்து.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகளை கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3658, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதி, சத்தியமூர்த்தி நகரில் ஆதி திராவிட இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3788, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவப் பெருங்குடி மக்களை (முக்குவர், மீனவர், இந்து மற்றும் கிறிஸ்துவர்கள்) ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பில் இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன்பு விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

---

@ 223 முதல் 292 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

***திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது மூன்றாவது முறையாக எனக்குப் பேச வாய்ப்பளித்த, எனக்கு முகவரி தந்த அன்புத் தலைவர், புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்கு பயனாளிகளின் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000/–க்கு மிகாமலும் நகர்ப்புறங்களில் ரூ.60,000/-க்கு மிகாமலும் இருக்க வேண்டும். பயனாளிகளின் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.72,000/–க்கு மிகாமலும் நகர்ப்புறங்களில் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமலும் இருக்கவேண்டும் எனவும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் ஈமச்சடங்குகளுக்கான செலவினை மேற்கொள்ள ரூ.2,500/– நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆனால், இன்றைக்குள்ள பொருளாதாரச் சூழ்நிலையில், விலைவாசியேற்றத்தால் இத்தொகை மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதை ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

தமிழக அரசின் ஆதி திராவிட துணைத் திட்டத்திற்கு மத்திய அரசு 100 விழுக்காடு மானியம் வழங்குகிறது. இதில் பல்வேறு திட்டங்கள்மூலம் ஆதி திராவிட மக்களுக்கு நல உதவிகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்மூலம் 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.10,613.30 இலட்சம் செலவிடப்பட்டு, அதன்மூலம் 66,094 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.9,697.62 இலட்சம் செலவிடப்பட்டு, 43,295 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இதிலே சுமார் 23,000

பயனாளிகள் கடந்த ஆண்டைவிட குறைந்துள்ளனர். மேலும், 2013–2014–ல் ரூ.9,057.45 இலட்சம் செலவிடப்பட்டு, 19,789 பயனாளிகள் மட்டுமே பயனடைந்துள்ளனர். இதிலும் கடந்த ஆண்டைவிட சுமார் 23,000 பயனாளிகள் குறைந்துள்ளனர். ஆக மொத்தத்தில், கடந்த மூன்று நிதியாண்டுகளில் சுமார் 46,000 பயனாளிகள் குறைந்துள்ளனர். இவ்வளவு எண்ணிக்கை குறைந்ததற்கு என்ன காரணம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், தாட்கோமூலம் கடன் பெறுபவர்களுக்கு ரூ.25,000/– ஆக முன்பு இருந்ததை, தற்போது தனி நபருக்கு ரூபாய் இரண்டேகால் இலட்சம் வரை, திட்டத் தொகையில் 30 சதவீதமாக உயர்த்தி வழங்கினார்கள். இதனால் 2011–2012, 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய மூன்றாண்டுகளில் 1,29,175 பயனாளிகளுக்கு ரூ.262.53 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய மைனாரிட்டி ஆட்சிக் காலத்தில் ரூ.25,000/– மட்டுமே மானியமாக வழங்கப்பட்டு வந்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார். அதனால் பயனாளிகளின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. இப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், 30 சதவீதம் அல்லது ரூபாய் இரண்டேகால் இலட்சம் வரையிலும் ஒரு தனி நபருக்குக் கொடுப்பதனால், மானியத் தொகை மட்டும் ரூ.222.53 கோடியாக உள்ளது. அதே நேரத்தில் 1,29,175 பேர் பயனடைந்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திற்கு 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால், அத்தொகை முழுவதுமாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற குறைபாடும் உள்ளது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி 13–12–2005–க்கு முன்பிருந்து வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினருக்கும், மேற்படி தேதிக்கு முன்னதாகவே மூன்று தலைமுறைகளாக சுமார் 75 ஆண்டுகளாகக் குடியிருந்தவர்களுக்கும், பிற மரபு வழியினருக்கும் வன அனுபோக உரிமை வழங்குவதற்கு இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் வன அனுபோக உரிமை கோரி 29,420 விண்ணப்பங்கள் வரப்பெற்றும், இதில் சுமார் 3,823 விண்ணப்பங்கள் மட்டுமே வன உரிமைப் பட்டா வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உரிமைச் சட்டம் குறித்து நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. எனவேதான், உச்ச நீதிமன்றத்தினுடைய தடையாணை நீக்கப்பட்டவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, 3,823 கோரிக்கைகளைத் தவிர மீதமிருக்கிற அனைவருக்கும் வன உரிமைப் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டில் வன அனுபோக உரிமைப் பட்டா வழங்குவதற்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இதுவரையில் ஒருவருக்குக்கூட பட்டா வழங்கவில்லை. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 3 ஆண்டுகள் ஆகியும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, தடையுத்தரவை நீக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால், கடந்த 4 ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் இந்தத் தடையுத்தரவை நீக்க. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலே தடையிருக்கின்றது. அந்தத் தடையாணை சம்பந்தமாக பல்வேறு முறை வாய்தா கேட்கப்பட்டுள்ளது. இன்றுகூட அந்த வழக்கு விசாரணைக்கு வருவதாக இருக்கிறது. தற்போதைய நிலை என்னவென்று தெரியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளாக தடையை நீக்க விரைவான நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்துவது பழங்குடியின மக்களின் வாழ்வாதார உரிமையைப் பறிப்பதாகவே தோன்றுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம், 'தாட்கோ', ஆதி திராவிட மக்களின் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காகவும் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால், சென்னை மாவட்டத்தில், ஆதி திராவிட மக்களுக்கு 'தாட்கோ' மூலம் குடியிருப்புகள் கட்டித் தரப்படவில்லை. அதற்குப் பதிலாக, சென்னையில் வசித்துவந்த ஆதி திராவிட மக்களை கண்ணகி நகர், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம் போன்ற புறநகர்ப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் குடியமர்த்தியதால், அம்மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற வாழ்வாதார உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன.

தமிழக அரசு 'தாட்கோ' மூலமாக சிறு தொழில் கடன் உதவி போன்ற சிறிய கடன் உதவிகளைக் கொடுப்பதைவிட, 'தாட்கோ' மூலமாக சென்னை மாநகரில், அனைத்து சமுதாயத்தினரும் வசிக்கும்



இடங்களில், ஆதி திராவிட மக்கள் வீடுகள் கட்டிட கடன் உதவி அளிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் என்ற பெயர் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் ஓட்டேரி மயானத்தை ஒட்டியுள்ள சிவசண்முகபுரம் ஏ–பிளாக், பி–பிளாக் பகுதிகளுக்கு மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு, அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்குவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால், அவரது மறைவுக்குப் பிறகு, எந்த அரசும் இதுநாள்வரை, அந்தப் பகுதி ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவில்லை. குறிப்பாக புளியந்தோப்பு, கார்ப்பரேஷன் லைன், குமணன் தெரு, சேத்துப்பட்டு, ஜெகநாதபுரம், எம்.எஸ். நகர், சாஸ்திரி நகர், பொல்லாபுரம் போன்ற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற மாநகரப் பகுதியில் நிலத்தின் மதிப்பு கூடுதலாக இருக்கின்றது. மேலும், வீட்டுமனைப் பட்டா வேண்டி கோரிக்கைகள் இதுவரையிலும் எங்களிடம் வரவில்லை. மாமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதியிலிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு விதிகளுக்குட்பட்டு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிட மக்களுக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக 13,95,679 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் வருவாய்த் துறையின்மூலமாக 24,00,979 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக இதுவரையிலும் 37,96,658 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஆதி திராவிட மக்கள் எங்கெல்லாம் வீட்டுமனை வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றார்களோ, அங்கெல்லாம் விதிகளுக்குட்பட்டிருந்தால், உடனுக்குடன் பட்டா கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மானியக் கோரிக்கை விவாத்தின் போதுகூட, என்னுடைய எழும்பூர் தொகுதியில், ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிக்கு பட்டா கேட்டேன். ஆனால், 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் தரவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லதம்பி, ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். ஆதாரமில்லாமல் பேசாதீர்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பட்டா சம்பந்தமாக கோரிக்கை வைத்தேன் என்று சட்டமன்றத்தில் சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுவதுபோன்று இதுவரையிலும் எந்தவிதமான விண்ணப்பமும் வரவில்லை. அதுபோன்று விண்ணப்பம் வந்திருந்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, விதிகளுக்குட்பட்டிருந்தால் ஆய்வு செய்து வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 12–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் அந்தப் பகுதியையே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். புளியந்தோப்பு, ஆதி திராவிடர் பகுதி மற்றும் சம்பந்தப்பட்ட இடங்களைச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான சாலை மாநகர் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கீட்டு ஆணையும், விற்பனைப் பத்திரமும், வீட்டுமனைப் பட்டாவும் வழங்க வேண்டும். மேலும், இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயில் நிலங்களில் பல ஆண்டுகளாகக் குடியிருந்துவரும் ஆதி திராவிட மக்களுக்கு அந்த நிலத்தை உரிமையாக்கிக்கொள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாணவ, மாணவியர் வங்கிகளில் கல்விக் கடன் பெற்றுத்தான் படிப்பைத் தொடரவேண்டிய நிலை உள்ளது. இதில் ஆதி திராவிட மாணவ, மாணவியர்தான் அதிகமாகக் கடன் பெற்றுள்ளனர். மேலும், பள்ளிப் படிப்பை முடித்தவர்கள், குறிப்பாக 100 பேரில் 10 பேர்களுக்கு மட்டுமே அரசு வேலைவாய்ப்பை வழங்குகிறது. ஆக, கல்விக் கடன் பெற்றவர்களில் வேலை கிடைத்த 10 சதவீதம் பேர்களால் மட்டுமே கடனைத் திருப்பிச் செலுத்த முடிகிறது. மீதம் உள்ள 90 சதவீதம் மாணவ, மாணவியர் மாதத் தவணையைச் செலுத்த முடியாமல் அவதிப்படுகிறார்கள். இதில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் ஆதி திராவிட மாணவ, மாணவியர்தான். ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வழங்கப்பட்ட கல்விக் கடனை இரத்து செய்யவும், இனிவரும் காலங்களில் வட்டியில்லாக் கடனை வழங்கிடவும், மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மயிலாப்பூர் கெனால் பகுதியில் அரசு ஆதி திராவிடர் நலக் கல்லூரி மாணவர்கள் விடுதி உள்ளது. இங்கு நந்தனம் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில் படிக்கும் 200–க்கும் மேற்பட்ட தலித் மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். இங்கு வழங்கப்படும் தரமற்ற உணவு, சுகாதாரமற்ற கழிவறை மற்றும் அசுத்தமான குடிநீர் போன்றவற்றை முன்னிறுத்தி, கடந்த வாரம் அந்த மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அரசு இதனை ஆய்வுசெய்து, ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகளில் காவலர்கள், சமையலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களைக் கூடுதலாக நியமனம் செய்து, தரமான உணவு, சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த நிலைமையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். கடந்த வாரத்தில் ஏதாவது ஒரு நேரத்தில், சமையல்காரர்களோ அல்லது துப்புரவாளர்களோ வராமல் இருந்திருக்கலாம். உடனே, அதை ஒரு குறையாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில்தான் எல்லா விடுதிகளிலும் தரமான உணவு வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்பு பள்ளி மாணவர்களுக்கு உணவு மானியமாக ரூ.450/– கொடுத்துக்கொண்டிருந்தார்கள், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.550/–கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதுமுதல் இப்போது கல்லூரி மாணவர்களுக்கு ரூ.875/– உணவு மானியமாக வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் தரமான, அறுசுவையான உணவு வழங்கப்படுகிறது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் பாதுகாவலராகத் திகழ்ந்துகொண்டிருக்கிறார் மாண்புமிகு அம்மா அவர்கள். மேலும், 100 மாணவர்களுக்கு மேல் தங்கிப் படிக்கின்ற விடுதிகளுக்கு தொகுப்பு ஊதியத்தில் ஒருவரும், காலமுறை ஊதியத்தில் ஒருவரும் என துப்புரவாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஏதோ ஒரு நேரத்தில்



அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்குச் சென்றிருக்கலாம். அந்தமாதிரியான நேரத்தில் வேண்டுமானால் இப்படி நடந்திருக்குமேயொழிய, மற்றபடி எல்லா விடுதிகளுமே சுகாதாரமற்ற நிலையில் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மைக்குப் புறம்பானது. எனவே, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு வேண்டுகோள். கடந்த வாரம் அந்தப் போராட்டம் நடக்கும்போது அரசு அதிகாரிகளும் அந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அதனால்தான் நாங்கள் சொல்கிறோம். எங்களிடம் மாணவர்கள் முறையிட்டதனால்தான், நாங்கள் இதை அவையில் பேசினால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்பதால் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநபர் யாரோ வந்து அன்றைக்கு தூண்டிவிட்டு இந்தமாதிரி செய்திருக்கிறார்கள். மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரை அங்கே உடனடியாக அனுப்பி, இளநிலைப் பொறியாளர் மூலமாகப் பிரச்சினை சரிசெய்யப்பட்டு விட்டது. தண்ணீர் அடைப்பு இருந்ததால்தான் பிரச்சினை ஏற்பட்டது. பிறகு அந்தத் தண்ணீரின் அடைப்பு நீக்கப்பட்டுவிட்டது. அந்த ஒரு காரணமே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. எங்களுக்கு 10 மணிக்குச் சொன்னார்கள். 12 மணிக்கெல்லாம் DAWO சென்று உடனடியாக தண்ணீர் செல்வதற்கு வழி ஏற்படுத்தப்பட்டு, சீர்செய்யப்பட்டுவிட்டது. தண்ணீர் செல்வதைத் தடுத்து வைத்திருந்தார்கள். இதையொரு பெரிய குறையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சிறிய விஷயம்தானே? (குறுக்கீடுகள்) அன்றைக்கு தண்ணீரைத் தடுத்து வைத்திருந்தார், உடனே தண்ணீர் செல்வதற்குப் பாதை வெட்டிவிடப்பட்டு, 12 மணிக்குள் சீர்படுத்தப்பட்டது என்பதை மாமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஒரு தவறான குற்றச்சாட்டை இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள். அதாவது கல்லூரியில் படிக்கக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு கல்விக் கடன் வழங்கப்படுகிறது.; அதை மத்திய அரசாங்கத்திடம் சொல்லி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது முற்றிலும் தவறான கருத்து. இந்தியாவிலேயே Post Matric Scholarship என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) பொறியில் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கும், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கும், பாலிடெக்னிக் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கும் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் இரண்டு இலட்சம் ரூபாய்க்குள் இருக்கக்கூடியவர்களுக்கு எல்லா கட்டணங்களையும் இலவசமாக வழங்கிய ஒரேயொரு முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றபோது, சில மாணவர்கள் முதலாம் ஆண்டிலேயே கல்லூரிப் படிப்பைத் தொடராமல் போய்விடுகிறார்கள். மாணவர்கள் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக, இரண்டாம் ஆண்டிலே கல்லூரிப் படிப்பைத் தொடராமல் போய்விடுகின்றனர். இந்த நிலை அந்த மாணவ, மாணவிகளுக்கு வரக்கூடாது என்பதற்காகவும், அவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பெற வேண்டும், முழு பாதுகாப்பை அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், தாயுள்ளத்தோடு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், இந்த அற்புதமான திட்டத்தை தமிழகத்திலே வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, உயர் கல்வி பெறக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எந்த வகையிலும் படிப்பில்



பொருளாதாரரீதியாக பாதிக்கப்படாத அளவிற்கு அவர்களைக் காத்து வருகிற தலைவி நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதி அருகிலுள்ள கோமுகி அணைப் பகுதியில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி, உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 537 மாணவர்கள் பயில்கின்றனர். அடிப்படை உட்கட்டமைப்பு வசதியின்றி இருக்கும் இப்பள்ளியில் அனைத்து அடிப்படை வசதிகளையும் மேம்படுத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது தவறான கருத்து. மாண்புமிகு அம்மா அவர்களினுடைய நல்லரசின் மூலமாக அந்த மேல்நிலைப் பள்ளிக்குச் சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டு, இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அங்கே கழிப்பறை வசதி தற்போது செய்யப்பட்டிருக்கின்றது. பக்கத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்களுடைய பேச்சைக் கேட்டு நீங்கள் பேச வேண்டாம். அவர் தவறாகச் சொல்கிறார். தப்புத் தப்பாகச் சொல்கிறார். நீங்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தீர்களென்றால், எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொள்வீர்கள். குடிநீர் வசதி செய்யவில்லை என்று சொன்னார்கள். அதைக்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறப்பாகச் செய்து தந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோன்று, அங்கே விளக்கு வசதி இல்லை என்று சொன்னார்கள். அதற்கும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், இந்தப் பழக்கம் வேண்டாம். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் இடையில்வந்து பேசாதீர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் இடையில் வந்து பேசமுடியாது. திரு. எல். வெங்கடேசன், உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க.வின் கடந்த ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி ஆட்சியில் 133 விடுதிகள் கட்டிட (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 3–வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், சென்னையிலுள்ள 21 விடுதிகளைப் பராமரிப்பதற்கு 7.07 கோடி ரூபாயும், இதர மாவட்டங்களில் உள்ள 1,053 ஆதி திராவிடர் நல விடுதிகளின் பழுதுபார்ப்பு மற்றும் சிறப்புப் பராமரிப்புப் பணிகளுக்காகவும், அடிப்படை வசதிகளுக்காகவும் ரூ.76.33 கோடி நிதியும் ஒப்பளித்து, அந்தப் பணிகளெல்லாம் செய்து முடிக்கப்பட்டு, இப்பொழுது விடுதிகளெல்லாம் புதுப்பொலிவுடன் நல்ல நிலையில் உள்ளன.

மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கோமுகி அணைப் பகுதியிலுள்ள விடுதியை நான் இரண்டு முறை ஆய்வு செய்தேன். அந்த விடுதி நல்ல நிலையில் உள்ளது. இருப்பினும், அந்த விடுதி அமைந்திருக்கும் இடம் கோமுகி அணைக்கு அருகில் இருப்பதால், அது சற்றுத் தாழ்வான பகுதியாக இருக்கிறது. மண் எடுத்து அந்த



இடத்தை எல்லாம் நிரப்புவதற்குக்கூட வழியில்லை. இதுகுறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களிடமும் கூறினேன். இந்த வருடத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவ்விடத்தில் விரைந்து மண் நிரப்பி, அதன் பிறகு சுற்றுச் சுவர் அமைப்பதற்குப் போதுமான நிதி ஒதுக்கி, மராமத்து செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் என்ன? சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் இந்த அவையிலே இல்லை. அவர் உரையைத் தயார் செய்ததும் எனக்குத் தெரியாது. நான் ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக போராடிக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொல்லவில்லை. இந்தச் சூழ்நிலையிலே ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்கிறேன். அந்தக் கருத்துக்கும், எனக்கும் சம்பந்தம் கிடையாது. ** விழுப்புரம் மாவட்டம் என்றாலே வெங்கடேசன் என்ற ஒரு எண்ணத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவார்களேயானால், அதற்கு நான் பொறுப்பல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் வருகிற ஊர். இன்னும் சொல்லப்போனால் என் ஊர். முதன்முதலாக மலைவாழ் மக்களுக்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே இப்பள்ளி தோற்றுவிக்கப்பட்டது. அங்கே எல்லா வசதிகளும் இப்போது செய்யப்பட்டு, அது மிகச் சிறப்பாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு வந்து பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், ஏதோ விழுப்புரம் மாவட்டம் என்றாலே திரு. வெங்கடேசன் என்ற எண்ணம் வருவதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அதுமாதிரியெல்லாம் மிகவும் அதிகமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவேண்டியது இல்லை. அப்படியெல்லாம் அவர் நினைத்துக்கொண்டிருக்கக்கூடிய அவசியமும் கிடையாது. என்னைக் கண்டு அவருக்கு பயமாக இருக்கலாம். அவரைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலேயும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிருவாகிகள் யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்துத் தொகுதிகளிலும் எல்லாப் பணிகளையும் சிறப்போடு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்த கல்வராயன் மலைப் பகுதிக்கு மட்டும்——மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இது இந்தத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை கிடையாது, இருந்தாலும் சொல்கிறேன். இப்போது 13 கோடி ரூபாயில் சாலை வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, அங்கே இருக்கக்கூடிய உண்டு உறைவிடப் பள்ளிகள் அனைத்திற்கும் இப்போது குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தந்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் பேசும்போது**என்று சொன்ன அந்தப் பழமொழி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள். ஓர் உறுப்பினர் பேசும்போது. . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பில் இடம்பெறக் கூடாததை மாண்புமிகு அமைச்சர் பேசவில்லை. (குறுக்கீடு) ஒன்றுமில்லை உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களைப் பற்றி அவர் ஒன்றும் தவறாகப் பேசவில்லையே. (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** நான் நேற்றைக்கு இந்த அவையில் இல்லை. நானே கல்வராயன் மலையில் அப்படி நடந்ததா என்று இப்போதுதான் அவரைக் கேட்கிறேன். அப்படி இருக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் சொல்லிக் கொடுத்துதான் அவர் அப்படிப் பேசுகிறார் என்று சொன்னால், என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உங்களைப் பற்றி அவர் ஒன்றும் தவறாகப் பேசவில்லையே. (குறுக்கீடு) இல்லை. உங்கள் கட்சி உறுப்பினர் பேசட்டும். நேரம் போய்க் கொண்டிருக்கிறது. உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தீர்கள் அல்லவா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். (குறுக்கீடு) அவைக் குறிப்பைப் பார்த்து நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னவுடனே எடுக்க முடியாது. (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன்.

**திரு. எல். வெங்கடேசன்:** எனக்கும் உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை இருக்கிறது. அதனால்தான் நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) உட்காருங்கள். இது முறையல்ல. நான் சொல்வதைக் கேளுங்கள். பேரவைத் தலைவர் ஓர் உத்தரவு சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு அமைச்சர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன். ஆனால் எனக்கும் உரிமை

இருக்கிறது. எங்கள் தொகுதி எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. எல்லா தொகுதியினுடைய பணமும் அங்கே போய் சேருகிறது. (குறுக்கீடு) நான் இல்லை என்று சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–40

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதர்க்கமாகப் பேசுவது என்பதே திரு. வெங்கடேசனுக்கு ஒரு பொழுதுபோக்காக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். மாவட்டத்தினுடைய பணம் முழுவதும் அங்கே செல்கிறது என்று ஒரு வார்த்தையை அவர் சொன்னார். இது தவறான கூற்று. என்ன எங்களுக்கு இருக்கிறதோ, அந்தந்தத் தொகுதிக்கு என்ன வருகிறதோ அதுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துத் தொகுதிகளுக்கும் வந்துகொண்டிருக்கிறது. உங்களுடைய தொகுதிக்குத்தான் ஆர்க்கவாடி பாலத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொடுத்தார்கள். நேற்றுகூட ஆர்ப்பாட்டம் என்கிற பெயரில் ஒரு நாடகத்தை அங்கே நடத்தினார். அங்கே ஒரு தரைப்பாலம், பயனுள்ள பாலமாக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் திருக்கோவிலூர் பைபாஸ் சாலையில் மிகப் பெரிய பாலம் ஒன்று இருக்கிறது. அதேபோன்று திருக்கோவிலூரிலிருந்து அரகண்டநல்லூர் செல்வதற்கு மிகப் பெரிய பாலத்தை நெடுஞ்சாலைத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதிக்குத் தந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. நல்லதம்பி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சந்திரகுமார், உங்கள் கட்சி உறுப்பினர் செய்வது சரியில்லை. (குறுக்கீடு) நீங்கள் செய்வது சரியில்லை. (குறுக்கீடு) என்னை அவையை நடத்தவிடாமல் செய்கிறீர்கள். (குறுக்கீடு) திரு. வெங்கடேசன், நீங்கள் என்னை அவையை நடத்தவிடாமல் செய்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு)



***திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் அச்சாரமாய், ஆதாரமாய், ஆதார சுருதியாய், ஆராதனைக்குரிய தெய்வமாய், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லதம்பி பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. சந்திரகுமார், முதலில் உங்கள் உறுப்பினர் திரு. வெங்கடேசனை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61–வது வட்டம், சர்வே எண் 1283 இல் உள்ள நிலமான நரியங்காடு வரதராஜபுரம் பகுதி ஆதி திராவிட மக்களுக்குச் சொந்தமானது. 1917 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் நாள், அரசாங்கம் அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, 1924 ஆம் ஆண்டு ஆகஸ்டு 21 ஆம் நாள் சென்னை மாநகராட்சி ஆணையர் Mr. Boag அவர்கள் பதவி வகித்தபோது ஆதி திராவிட மக்களின் குடியிருப்புக்காக வரதராஜபுரம் நரியங்காடு Co-operative Credit Society என்ற பெயரில் பதிவு எண் 1417 இல் பதிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து ஆதி திராவிடர்கள் அந்நிலத்தை வழிவழியாக அனுபவிக்கவும், அதை விற்க நேரிட்டால் மற்றொரு ஆதி திராவிடர்களுக்கு மட்டுமே விற்க வேண்டுமென்றும் மனை சுவாதீன சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அப்பகுதியில் வறுமையில் தவிக்கும் குடும்பத்திலுள்ளவர்களை பல்வேறு பிரச்சினைகளால் பிரிந்திருக்கும் ஆதி திராவிட சகோதரர்களை ஆதி திராவிடர் அல்லாதோர் பலர் அணுகி, அங்கு சட்டத்திற்குப் புறம்பாக, நிலம் வாங்கப்பட்டுள்ளது. இதில் எந்த ஆவணத்தையும் ஆய்வு செய்யாமல் பெரியமேடு பதிவு அலுவலகம் பதிவு செய்துள்ளது. எனவே, நரியங்காடு வரதராஜபுரம் ஆதி திராவிடர்கள் நிலத்தை ஆதி திராவிடர் அல்லாதோர் சட்டத்திற்குப் புறம்பாக வாங்குவதைத் தடுக்கவும், அந்நிலத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கவும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி, பட்டா வழங்கும் வருவாய்த் துறை, குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், மின்சார வாரியம் போன்ற துறைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கி, உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. நல்லதம்பி, உரையை சீக்கிரம் முடியுங்கள். 12 மணி 14 நிமிடத்திற்கு ஆரம்பித்தீர்கள், தற்போது நேரம் 12.44 ஆகிவிட்டது. கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் மூவர் குறுக்கிட்டுவிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரியங்காடு, வரதராஜபுரம் சின்னக்குழந்தை தெருவில் வசித்து வந்த ஆதி திராவிட மக்கள், மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது 13–4–1947 அன்று அவர்களுக்கு அப்பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டது. யாருடைய துயரைத் துடைப்பதற்காகக் குடியிருப்புக் கட்டப்பட்டதோ, அச்சமுதாயத்தைச் சார்ந்த ஒருவருக்குக்கூட அங்கு வீடு இல்லை. மாறாக, தீயணைப்புத் துறை ஊழியர்கள், சென்னை மாநகராட்சி ஊழியர்களின் குடியிருப்பாக அது மாறிவிட்டது. தற்சமயம் அக்குடியிருப்பில் தீயணைப்புத் துறை ஊழியர்களோ, சென்னை மாநகராட்சி ஊழியர்களோகூட குடியிருப்பதாகத் தெரியவில்லை. அத்துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், அத்துறைக்குச் சம்பந்தமில்லாதவர்களும்தான் தற்போது குடியிருந்து வருகின்றனர். மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்காகக் கட்டப்பட்ட அந்தக் குடியிருப்பு அவர்களின் பயன்பாட்டில் இல்லாததால், சின்னக்குழந்தை தெருவிலே குடிசைகள் அமைத்து, தொன்றுதொட்டு வாழ்ந்துவரும் அவர்களுக்கு இன்றுவரை நியாயம் கிடைக்கவில்லை. எனவே, அம்மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்காகக் கட்டப்பட்ட நரியங்காடு குடியிருப்பில் தற்போது வசிப்பவர்களைக் காலி செய்துவிட்டு சின்னக்குழந்தை தெருவில் வசிப்பவர்களைக் குடியமர்த்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய வார்த்தை சரியாகக் காதில் விழவில்லை. எங்கே ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளை



மற்றவர்கள் ஆக்கிரமித்திருக்கின்றார்கள், யார் யார் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய கமிஷனர் அலுவலகம் பின்புறம் உள்ள நரியங்காடு என்ற இடம், ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான இடம்; அதனை பஞ்சமி நிலம் என்று கூறுகின்றார்கள். அது உண்மைதான். ஆதி திராவிடர் அல்லாத வெளி நபர்கள்தான் அந்த நிலத்தை வாங்குகின்றார்கள். இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. இதற்காக வழக்குகளும் போட்டிருக்கின்றார்கள். அதைத்தான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். அதே நேரத்தில் ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, கோர்ட்டில் இருக்கும்போது அதைப்பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? அவைக் குறிப்பிலிருந்து அது நீக்கப்படுகிறது. வழக்குமன்றத்தில் இருப்பதைப் பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? அதை விடுங்கள். வேறு சப்ஜெக்ட்டைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிற்கு அடுத்த வல்லம் கிராம ஊராட்சியில் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தலித் மக்கள் வசித்து வருகின்றனர். இம்மக்களுக்கான மயான பூமி அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மயான பூமிக்குச் செல்லும் பாதை முழுவதிலும் முட்செடிகள் சூழ்ந்திருப்பதாலும், சுடுகாட்டுப் பகுதி புதர் மண்டிக் கிடப்பதாலும், அங்கே செல்வதற்கும், அங்கு சடங்குகள் நடத்துவதற்கும் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி, சீக்கிரம் உரையை முடியுங்கள். நீங்கள் எழுதிவைத்திருப்பதையெல்லாம் படிக்க முடியாது. இப்போது நேரம் என்ன? நீங்கள் 35 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுடுகாட்டுப் பாதையைச் சீரமைத்து புதர் மண்டிக் கிடக்கும் மயான பூமியை நவீனப்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூரில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ சென்றாயப்பெருமாள் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த புகழ்பெற்ற கோயிலாகும். இக்கிராமத்தில், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. சிவராமன் மற்றும் திரு. பெருமாள் ஆகிய இருவரும் சாமி தரிசனம் செய்ய கடந்த 14—7—2014 அன்று கோயிலுக்குச் சென்றபோது கோயில் பூசாரி திருவேங்கடம் என்பவர், தாழ்த்தப்பட்டவர்கள் இந்தக் கோயிலுக்கு வரக் கூடாது என்று சொல்லி தடுத்துள்ளார். இதுகுறித்து இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைப் பார்க்கும்போது தமிழகத்தில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் அமலில் உள்ளதா என்ற சந்தேகம் நிலவுகிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரம் எதுவும் இல்லாமல், ஏதோ இரண்டு நபர்கள் கோயிலுக்குப் போனார்கள், அங்கே அவர்களை கோயிலுக்குள் அனுமதிக்கவில்லை என்று கூறுகின்றார். அந்த மாதிரி ஏதாவது நடந்திருந்தால் எங்களிடம் மனு கொடுங்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இதுவரை இவ்வாறு நடந்ததில்லை. ஏனென்றால், தருமபுரி பிரச்சினையிலிருந்து, கடலூர் பிரச்சினை வரை மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை இராஜதந்திர முறையில் அணுகினார்கள். இதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இதுவரையிலும் வன்கொடுமை எங்கும் நடந்ததாக இல்லை. ஏதாவது இருந்தால் ஆதாரம் கொடுங்கள். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக கவனத்தில்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. நன்றி சொல்லி உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள். புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்வதோடு என்னுடைய தொகுதி பிரச்சினைகளை எழுதிக்கொடுத்துவிடுகிறேன். அதனைப் பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## தொகுதிக் கோரிக்கைகள்

எழும்பூர் தொகுதி, புளியந்தோப்பு, கே.பி. பார்க், சுந்தரபுரம், சிவராஜபுரம் போன்ற இடங்களில் துர்நாற்றம் வீசுவதால் அந்தப் பகுதியில் உள்ள குப்பை சேமிக்கும் குடோனை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட ஓட்டேரி மயானம், வரலாற்றுச் சிறப்பு மிக்க தலைவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடம். ஓட்டேரி மைதானத்தை தூய்மைப்படுத்தி செடிக்கொடிகளை அகற்றி, சாலை வசதிகளை மேம்படுத்தி நவீனப்படுத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர் தொகுதி முழுவதும் சுகாதாரமான குடிநீர் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம்—8, 104-வது வட்டம், திடீர் நகர் திட்டப் பகுதியில் ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த சுமார் 750 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகல் கட்டித் தர வேண்டுமென கடந்த 2011-2012 மற்றும் 2012-2013 ஆகிய நிதியாண்டுகளில் சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்தேன். அதன் அடிப்படையில் அப்பகுதியில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டு, அதற்கான முயற்சிகள் நடப்பதாக அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அங்கே வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்திட வழிவகை செய்திட வேண்டுமாய் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு அறிக்கை படிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், என்ன? சொல்லுங்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியாக இருக்கின்ற எல்லோருமே உண்ணாவிரதம், போராட்டம் என்று அறவழியிலே போராடுவது சகஜம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் நேற்று நடத்திய அந்தப் போராட்டத்தை ஒரு நாடகம் என்று சொல்லியிருக்கின்றார். நேற்று ஒரு நாடகம் நடத்தியிருப்பதாக கூறிய அந்த வார்த்தையை மட்டும் தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நாடகம் என்று ஏன் சொல்கிறோம் என்பதையும் அவையில் இருப்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற வாரம் பேசுகின்றபோது இந்தக் கோரிக்கையை வைத்தார். நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இது பற்றிய விவரங்களைக் கேட்டார். அது ரிஷிவந்தியம் தொகுதியைச் சார்ந்த இடம். அவர் திருக்கோவிலூருக்குச் செல்வதற்கு வழியில்லை என்று சொன்னார். ஆனால், திருக்கோவிலூருக்கு பைபாஸ் சாலையில் ஒரு மேம்பாலம் அதே தென்பெண்ணையாற்றில் இருக்கின்றது. அதேமாதிரி, தென்பெண்ணையாற்றிலே, திருக்கோவிலூரிலிருந்து அரகண்டநல்லூருக்குச் செல்கின்ற வழியில் இரண்டு கிலோ மீட்டரிலே இன்னொரு பாலமும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலேயும் தரைப் பாலம் இருக்கின்றது. அந்தப் பாலம் தற்பொழுது நல்ல நிலையிலே இருக்கின்றது. இதுகுறித்து அவர் அவையில் சொல்லும்போது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின்மூலம் எதிர்காலத்தில் ஏதாவது செய்யுங்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சரிடத்திலேயும் சொல்லியிருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார். இதையெல்லாம்



தெரிந்துகொண்டு, ஏதாவது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு, அதை தான் செய்வதைப்போல் காட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து போராட்டம் செய்வதுதான், நாடகம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேமாதிரி, அவருடைய தலைவருடைய தொகுதியிலேகூட ஆர்க்கவாடி என்கிற இடத்தில் ஒரு பாலம்; அதிலேயும் இப்படித்தான். உள்ளாட்சித் துறை மூலமாக அந்தப் பணியைச் செய்வதற்கு ஆயத்தம் செய்யும்போது, இவர்கள் அந்த இடத்தில் ஒரு கொடியைக் கட்டி அங்கு ஓர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால், அந்த ஊர் மக்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி, பெரிய நிகழ்ச்சியே நடத்தினார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, பிரம்மகுண்டம் என்ற இடத்திலேயும் பாலத்தைக் கட்டுவதற்கு தயாராகிவிட்டோம். செய்கிறோம் என்று அறிவித்த பின்னர், அந்த இடத்திலே போய் நின்று ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்வது, நாங்கள் சொல்லித்தான் இந்தப் பாலம் வருகிறது என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பாலம் எப்படி வந்தது? யாரால் வந்தது என்று அந்த ஊர் மக்களுக்கெல்லாம் தெரியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாலே அந்தப் பாலம் வந்தது என்பதையெல்லாம் அந்தப் பகுதிவாழ் மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த இடத்திலே போய் நிற்க வேண்டியது, ஒரு புகைப்படம் எடுக்க வேண்டியது, கோரிக்கை வைப்பது மாதிரி சொல்வது. அதற்குப் பெயர்தான் நாடகம் என்று குறிப்பிட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுதான் நடந்தது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, அந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இத்துடன் விட்டுவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* வேறு விஷயங்களெல்லாம் பேச வேண்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் விளக்கம்தான் சொல்லிவிட்டாரே. *(குறுக்கீடுகள்)* இல்லை, மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். *(குறுக்கீடுகள்)* அனுமதி, இல்லை, அமைச்சர் விளக்கமாகத்தான் சொல்லியிருக்கிறார்.

(குறுக்கீடுகள்) போராட்டம் நடத்தியதற்குண்டான காரணத்தை அவர் சொல்லிவிட்டார், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. செந்தில்குமார், கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, சபையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழையுங்கள். நேரம் என்ன ஆகிறது? (குறுக்கீடுகள்) ஒரு மணி ஆகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன், நீங்கள் உட்காருங்கள். இன்று முக்கியமான மானியக் கோரிக்கைமீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆதி திராவிடர் நலத் துறை சம்பந்தமான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. 8 உறுப்பினர்கள் பேச வேண்டும். இப்பொழுதே மணி ஒன்று ஆகப்போகிறது. 8 உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரை தர வேண்டும். தினமும் 3 மணி, 4 மணி வரை சபையை நடத்த முடியாது. ஆகவே, இந்தப் பிரச்சினையையெல்லாம் மேற்கொண்டு விவாதிக்க நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) மேற்கொண்டு இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க நேரம் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. நீங்கள் எதிர்ப்பு தெரிவித்ததும் அவைக் குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கிறது. இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். (குறுக்கீடு) இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) அதுவும் இருக்கட்டும், இதுவும் இருக்கட்டும். நீங்கள் சொன்னதையும் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்லியிருப்பதும் பதிவாகியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதும் பதிவாகியிருக்கிறது. இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

பிற்பகல் 12—55

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் அச்சாரமாய், ஆதாரமாய், ஆதார சுருதியாய், ஆராதனைக்குரிய தெய்வமாய், அகிலமே போற்றும்வண்ணம் அற்புதமான ஆட்சியை நடத்திடும், (மேசையைத் தட்டும் ஒலி) அதிசயமே அசந்துபோகும் எங்கள் அதிசயமே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். நான் தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் வெளியே செல்வதானால் செல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் ஆகியோர் கூறிய இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். (குறுக்கீடு) அவை இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கும். (குறுக்கீடு) இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். (குறுக்கீடு)

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** மழைநீர் சேமிப்பால் பூமிக்கு ஆதாரம், வெயில் சேமிப்பால் சூரிய மின்சாரம், காடுகள் சேமிப்பால் உயிர்கள் வாழ்வாதாரம், மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கால் உயரும் ஆதி திராவிட மக்களின் பொருளாதாரம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டும் அவைக் குறிப்பில் இருக்கட்டும். (குறுக்கீடு)

(தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் பலர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு அருகில் வந்து பேச முயன்றனர்.)

[பின்னர், தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன் மற்றும் திருமதி ஆர். சாந்தி ஆகியோர் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

**திரு. இரா. தமிழ்ச்செல்வன்:** சிறு தொழில் வளர்ச்சி, நிதி நிலை தொடர் முயற்சி, ஆதி திராவிடர் நலனில் அபாரப் புரட்சி, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுக்கும் முடிவுகளால் தமிழர்கள் நெஞ்சமெல்லாம் மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிய காரியங்களிலெல்லாம் வெற்றி, எட்டுத் திக்கும் புகழ் பரப்பும் வெற்றி, எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, துணிந்து செயல்படுவோருக்கே வெற்றி, ஆம், கோழைகளுக்கு அல்ல.

அம்மா என்றால் மகிழ்ச்சி, அம்மா என்றால் தொடர்ச்சி, அம்மா என்றால் வளர்ச்சி. நாட்டு மக்களுக்கு 2ஜி, 3ஜி, கேஜி, வி.ஜி, ஏ.ஜி., என்றால் அலர்ஜி என்பதனை நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலரின் பெயரோ விலைபேசும் தரகெழுத்து, எங்கள் அம்மாவின் பெயரோ நம்பிக்கை தரும் நிலை எழுத்து. ஆறெழுத்து என்னும் அம்மாவின் பேரெழுத்து, அதுதான் ஏழரைக் கோடி மக்களின் உயிர் எழுத்து. *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சிக்கும், மலர்ச்சிக்கும், புன்னகைக்கும், பூமிக்கும், புதுமைக்கும் ஒரே அன்னை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சூரியனைச் சுட்டுப் பொசுக்கிய சுடர்வானம், வேட்டி கொடுத்து காப்பாற்றிய தமிழரின் மானம், இமயம்போல் பெருகிவரும் எதிர்ப்பையெல்லாம் அரசியல் அறிவு ஞானத்தால், தகர்த்தெறிந்த தங்கத் தாரகை, வெற்றிகளைப் படைக்கும் அம்மா, பகை வென்று முடிக்கும் அம்மா, வீரம் படைக்கும் அம்மா, புதிய விடியலைப் படைக்கும் அம்மா. மற்றவர்களெல்லாம் சும்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'காகிதத்தில் திட்டத்தைத் தீட்டி, காற்றிலே பறக்கவிட்டவர்கள் மத்தியில் தாழாமல் தாங்குவேன் தாழ்த்தப்பட்டோரின் வாழ்வை', எனக் கூறி, ஆதி திராவிட, பழங்குடியின மக்களின் இருண்ட வாழ்வை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட இன மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய வழிவகை செய்வதோடு, அவர்களுடைய சமூக உரிமைகளையும், நலன்களையும் என்றென்றும் பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி செயல்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள்தொகையில் 20.01 சதவிகித மக்கள் ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் உள்ளனர். ஆதி திராவிட பழங்குடியின மக்களின் வேகமான வளர்ச்சி மற்றும் நிலையான முன்னேற்றமே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முதன்மையான நோக்கமாக இருக்கிறது.

பொதுப் பிரிவினருக்குச் சமமாக ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் சமூகப் பொருளாதார வளர்ச்சி அடைவதற்கு 2014–2015 ஆம் நிதியாண்டில் மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.42,185



கோடியில் ஆதி திராவிட துணைத் திட்டம், துணைக் கணக்குத் தலைப்பு 789–ன்கீழ் ரூ.7,603 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் கல்வி மற்றும் கல்விசார்ந்த நலத் திட்டங்களுக்கு மட்டும் 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 1,998.36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெட்ரிக் கல்வி என்பது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்தது. கட்டாயக் கல்விச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவந்து, 25 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மாணவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்த சமூக நீதி காத்த வீராங்கனை, தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆதி திராவிட மாணவர்கள் உயர் கல்வி பெற்றிட, கல்விக் கட்டணத்தை அரசே ஏற்குமென அறிவித்தவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் பையை நிரப்ப, அடுத்தவர் பை குறைய ஆசைப்படும் குறுக்கு மனம் கொண்டவர்கள் மத்தியில், அள்ள, அள்ளக் குறையா அட்சய பாத்திரமாய், அமுத சுரபியாய், தான் அணிந்திருந்த பொன் நகையை புன்னகையோடு இந்திய–சீனப் போருக்கு கழற்றித் தந்த கார்மேகம் எங்கள் அம்மா! *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தொட்டில் குழந்தைத் திட்டம்' தொடர்ந்து வெற்றிபெறும் திட்டம். அநாதை என்ற சொல்லை அகராதியிலிருந்து அகற்றலாம். அடைக்கலம் என்ற சொல்லுக்கு அம்மா என்று பொருள் மாற்றலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, காவேரியில் வெற்றி! முல்லைப் பெரியாறுக்கு முற்று! ஆனால், சிலர் எழுதிய கடிதங்கள் டில்லியில் வடை மடிக்கவும், வாயைத் துடைக்கவும் பயன்பட்டதாம். பெட்டிக்

கடையில் தின்று பெருசான பெருச்சாளி, வட்டிக் கடையில் வாய் வைத்து மாட்டிக் கொண்டதாம் இந்தக் கதையும், இதுபோல் சிலரின் கதையும் கண்முன்னே நடப்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைத்ததுபோல் தாழ்ந்து கிடக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வாராது வந்த மாமணியாய், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வுரிமை கேள்விக்குறியானபோது, கொடுமைகளை இரும்புக்கரம் கொண்டு அடக்கி, பாராளுமன்றத் தேர்தலில் சாதிக் கட்சிகளையும், சப்தமே இல்லாமல் சப்த நாடியை ஒடுங்க வைத்து, சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் அம்பேத்கராக, தந்தை பெரியாராக, பேரறிஞர் அண்ணாவாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆக இவர்களின் மொத்த உருவமாக இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதி திராவிட மக்களுடைய பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. அரசினுடைய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக, அவர்களுடைய பொருளாதார உயர்வுக்காக சிறு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. 2006 முதல் 2011 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த தீய சக்தி கருணாநிதி, ஆதி திராவிட மக்களுடைய சமூகப்–பொருளாதார வளர்ச்சிக்கு, ஆதி திராவிட துணைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை, ஓசைப்படாமல் வேறு துறைகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்குத் துரோகம் இழைத்தவர் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமபந்தி – சம்மந்தி என்ற பெயரில் தனி chair போட்டு சாப்பிடும் குணம் கொண்டவர்கள் மத்தியில், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதி, மத, பேதம் எனக்கு இல்லை, சமத்துவம் தான் என் முதல் பிள்ளை எனக் கூறி ஆட்சியிலும், கட்சியிலும், இந்திய அரசியல் கட்சிகளினுடைய வரலாற்றில் எந்த இயக்கத்திலும் யாரும் தர முடியாத, யாரும் தந்திராத பிரதிநிதித்துவத்தை ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கழகம் ஒரு குடும்பம் என்பதனை



பேரறிஞர் அண்ணாவின் வழியில் நிரூபித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கிறேன்.

எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் ஆதி திராவிட மக்களின் அபாரமான கல்வி, சமூகப்–பொருளாதார வளர்ச்சிக்கு அடுக்கடுக்கான திட்டங்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தின் கருணாநிதியினுடைய ஆட்சியில், ஆதி திராவிட பள்ளி மற்றும் கல்லூரி மாணவ விடுதிகள் பாழடைந்து, சிதிலமடைந்து, சீர்கெட்டுக் கிடந்தன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், விடுதிகளைப் புதுப்பித்து, மின் விசிறி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சலவை இயந்திரம், இரண்டடுக்கு கொண்ட கட்டில், மெத்தை, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, வகை வகையான உணவு என நட்சத்திர விடுதிக்கு இணையாகச் செய்து, நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதி திராவிட மாணவர்களுக்கு அள்ளித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

மாணவர்களின் உணவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில், பள்ளி மாணவர்களின் விடுதி உணவுக் கட்டணத்தை 650 ரூபாயிலிருந்து 755 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களின் விடுதி உணவுக் கட்டணத்தை 750 ரூபாயிலிருந்து 875 ரூபாயாகவும் உயர்த்தி, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மாணவர்களின் கல்விக் கடவுளாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய குடிமைப் பணியின் முதன்மைத் தேர்வுக்கு நிதியுதவி, தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தினுடைய முதன்மைத் தேர்வுக்கு தலா ரூ.50,000/– நிதியுதவி என அள்ளித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களும் I.A.S., I.P.S., படித்து, உயர் நிலைக்கு வரவேண்டும் என்று உத்தரவிட்டு, அவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு தலைவரோ மஞ்சள் துண்டைப் போர்த்தி, கற்கண்டாய்ப் பேசுவார்! தாழ்த்தப்பட்ட மக்களை காலங்காலமாய் ஏமாற்றி, கவிதை சாமரம் வீசுவார்! கதை எழுதுவதில் கைதேர்ந்த அவர், பெரம்பலூர் கூஜாவிற்கு எழுதிய கதையின் உச்சகட்டம் சீ.சீ. 2G, 3G என்பதாகும்! தம்பி, இந்தக் கதையில் சில்லறையும் வரும், பிறகு சிறையும் வரும்; சில்லறையில் எனக்கும் பங்கு, சிறையில் நீ மட்டும் தங்கு; கனி உனக்கு, money எனக்கு என ஆயத்த ஒப்பந்தம் போட்டிருப்பார்போல! அது அப்படியே அம்பலத்துக்கு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிக்கொரு தனைனச் செய்துவிட்டு, சாதித்ததாக மேடைகளில் விவாதிப்பார்; மஞ்சள்மீது ஆதிக்கம் செலுத்தி, அதன் பாதிப்புகளை அமைதியாக இருந்து ரசிப்பார்; வஞ்சகம் அஞ்சாமல் செய்யும் நஞ்சவர், ஆதி திராவிடர் வளத்தை சுரண்டி வாழ்ந்த நெஞ்சவர்; காலில்லாமல் கரகாட்டம் ஆடுவார், காசு போடாதவரை வசைபாடி சாடுவார்; அவர்தான் மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி! தன்னையே தமிழ்த் தாயின் மூத்த குடிமகன் என்பார், தமிழன் சாகும்போது அதற்கும், எனக்கும் உடன்பாடில்லை என்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. அமைச்சரவையில் சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த சுரேஷ் ராஜன், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு மாவட்ட அதிகாரியை ஜாதியின் பெயரைச் சொல்லி இழிவுபடுத்தினார். அது இந்திய அரசிலமைப்புச் சட்டத்திற்கு எதிரான அநாகரிகக் கேவலம். அவர்மீது வன்கொடுமைச் சட்டத்தில் வழக்குப் பதிவு செய்தும், தன் தோள்மீது கிடக்கும் துண்டாக அமைச்சரவையில் தொடரவைத்தார்; ஆதி திராவிட மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்தார்! ஆனால், எங்கள் அம்மாவோ ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டார் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நலிந்து கிடந்த தாட்கோ நிறுவனத்திற்கு புத்துயிர் தந்து, ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட, பழங்குடி இளைஞர்களுக்கு பொருளாதாரக் கடனுதவி வழங்கி, தொழில் முனைவோர் ஆக்கியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்!



SC/ST மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு உடனடித் தீர்வு கிடைத்திட நான்கு சிறப்பு நீதிமன்றங்களை அமைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல், நல்லிணக்கத்துடன் வாழும் மாவட்டத்திற்கு ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து, அந்தக் கிராமத்தை ஊக்குவிக்கும் வகையிலே ரூ.10 இலட்சம் நிதி உதவி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன்.

எவ்விகிதம் பாராது, செவ்விகிதமாய், நல்லெண்ண பொதுவிகிதத்தோடு ஆதி திராவிட பழங்குடியின மக்கள் வாழ்வு உயர, ஆதி திராவிடர் நெஞ்சில் என்றென்றும் வாடாத புகழ்மாலை! ஆதி திராவிடர் நலனைச் சூழ்ந்த இருளை அகற்ற வந்த அதிகாலை எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்!

எறும்பின் பசியையும் உணரும் தாய்மை! அம்மா நீங்கள் இருக்கும்வரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இல்லை தீமை!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பந்தட்டை வட்டம், மலையாளப்பட்டியில், விவசாயிகள் பயன்பெறும் வகையிலே சின்னமுட்லு அணையைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணாபுரத்திலே போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் வட்டம், எளம்பலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பந்தட்டை வட்டம், வெள்ளுவாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் நகரில் ஆதி திராவிட, தாழ்த்தப்பட்ட மாணவிகள் பயன்பெறும் வகையில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத்தர வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–10

வெள்ளுவாடி–சோலை நகர் இடையே கல்லாற்றின் குறுக்கே ஓர் உயர்மட்ட மேம்பாலம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் நகர் தலைநகராக இருக்கிறது. அங்கே ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட கூலித் தொழிலாளர்களின் பெண் குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுடைய கனவை நிறைவேற்றுகின்ற வகையிலே, பெரம்பலூர் நகரிலே அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களுடைய, பழங்குடியின மக்களுடைய பாதுகாவலர், நம்பிக்கை நட்சத்திரம், இந்தியத் திருநாட்டிலே ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, அம்மா என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போது, ** அதிகாரிகள் சம்பந்தமாக குறுக்கீடு செய்து குறிப்பிட்ட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

## 6. அறிவிப்பு

### திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று தி.மு.க. உறுப்பினர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு, பேரவைத் தலைவரின் ஆணையையும் மீறி, பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து குழுவாக அமர்ந்துகொண்டு, மறியல் நடத்தும் நோக்குடன் பேரவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தனர். பேரவைத் தலைவர், பேரவை முன்னவர் அவர்களைப் பேச அழைத்தபோது அவரது பேச்சினையும் கேட்பதற்குப் பொறுமையின்றி, சட்டமன்ற விதிகளை, மரபுகளை துச்சமெனக் கருதி, பேரவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வதை நோக்கமாகக் கொண்டு, பேரவைத் தலைவரை கைநீட்டிப் பேசிக்கொண்டு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருந்தனர். எனவே, அவையை நடத்தவிடாமல், தொடர்ந்து திட்டமிட்டு அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்ததால், பேரவையிலிருந்து அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மேலும், இக்கூட்டத் தொடரில் நான்காவது முறையாக தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். பேரவை விதி 120–ன்கீழ் ஓர் உறுப்பினர் இரண்டு முறைகளுக்கு மேல் வெளியேற்றப்பட்டால், அவர் அந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இயலாது. எனவே, தி.மு.க. உறுப்பினர்கள் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டபோது, இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இயலாது என அறிவித்து இருக்கலாம். ஆனால், அவர்களும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே அடிப்படையில், பேரவை நடவடிக்கைகளில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டது. எனினும், தொடர்ந்து, வேண்டுமென்றே இவ்வாறு அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்துகொண்டு நான்காவது முறையும் வெளியேற்றப்பட்டுள்ளதால், தி.மு.க. உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இயலாது என அறிவிக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 1 கோடியே 44 இலட்சத்து 38 ஆயிரம் ஆதி திராவிட மக்களும், அதாவது 20.01 சதவிகிதமும், பழங்குடியின மக்கள் 7 இலட்சத்து 95 ஆயிரமும் அதாவது 1.10 சதவிகிதமும் உள்ளனர். இவ்வரசு தற்போது அமலாக்கிவரும் 18+1, 19 சதவிகித இடஒதுக்கீட்டினை, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி 20+1, 21 சதவிகிதமாக வழங்கிட வேண்டுகிறேன்.

'நமது போராட்டம் சொத்துகளுக்காகவோ, அதிகாரத்திற்காகவோ அல்ல, இது நமது சுதந்திரத்திற்கான போராட்டம், நமது மனித மாண்பை மீட்டெடுப்பதற்கான போராட்டம்' என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறியதை இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் வறுமையிலும், பொருளாதாரச் சுதந்திரம் அடையாமலும் பரிதவித்து வருகிற நிலைமை உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த மூன்று ஆண்டுகளில் மக்கள்தொகைக்கேற்ப, பட்டியல் இனத்தவர்களுக்கான துணைத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டுகூட 7,603 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியானது, ஆதி திராவிட மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு நேரடியாகச் சென்றடைவதில்லை. உதாரணமாக, Scheduled Caste sub-plan என்று சொல்லக்கூடிய சிறப்பு உட்கூறு திட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அதற்கு ஏதாவது ஆதாரம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

**திரு. ப. டில்லி பாபு:** ஆதாரம் என்னிடத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம் உங்களிடம் இருந்தால், முதலிலேயே என்னிடத்தில் கொடுக்கவேண்டுமல்லவா?

**திரு. ப. டில்லி பாபு:** Government of Tamil Nadu, M.A.W.S. Department மூலமாகப் போடப்பட்ட அரசாணை என்னுடைய கையிலே இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை முதலிலேயே என்னிடம் கொடுக்க வேண்டும்.

**திரு. ப. டில்லி பாபு:** அதை முதலிலேயே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் இன்று காலையில் காண்பித்தேன். இந்த மாதிரி நீங்கள் ஆதாரத்தைக் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரத்தை முதலில் என்னிடம் கொடுங்கள். இந்த ஆதாரத்தைக் காலையில் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) இதுகுறித்து பிறகு பேசுங்கள். தற்போது வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

பிற்பகல் 1–15

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, Municipal Administration and Water Supply Department, அரசாணை எண் 381 மற்றும் G.O. (Ms) No. 135–ஐ வெளியிட்டிருக்கிறது. இதுகுறித்த செய்தி Deccan Chronicle என்ற பத்திரிகையிலே வந்திருக்கிறது. செய்தியின் நகலையும், ஆணையின் நகலையும் உங்களிடத்தில் சமர்ப்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள், ஆதாரம் எதுவும் இல்லாமல் குறிப்பிடுகின்றார். பழங்குடியினர் துணைத் திட்டமானது, 15 செயலாக்கத் துறைகள் மூலமாக 27 தலைமைத் துறைகள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்படும் நிதி, 27 துறைகள் வாயிலாக முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 100 சதவிகிதத் தொகையும் செலவு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒதுக்கப்பட்ட அந்த நிதியை வேறு துறைக்கு மாற்றிச் செலவழிக்கிறார்கள் என்று ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசாணையைக் காட்டினாரே தவிர, இந்த நிதி வேறு எந்தத் துறைக்கு மாற்றி செலவழிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தைக் கொடுக்கவில்லை. அதைக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், வேறு சப்ஜெக்ட் குறித்து, குறுக்கீடு இல்லாமல் பேசுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான விளக்கத்திற்கு நன்றி. இந்த மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தை செலவு செய்வதற்காக ஆந்திர மாநிலத்தில் தனியாக ஒரு சட்டமே இயற்றப்பட்டிருக்கிறது. சிறப்பு உட்கூறுத் திட்டங்களை, Scheduled Caste Sub-plan–ஐ அரசாங்கத்தினுடைய சட்டதிட்டங்களின்படி செயலாக்கப்பட வேண்டும்; அந்த அமைச்சகம், அதற்குரிய அதிகாரிகள் மூலமாகத்தான் செயலாக்கப்பட வேண்டும் என்று ஆந்திராவில் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அதுபோன்று, தமிழகத்திலும் ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர் கல்விக்கான கட்டணத்தை அரசே செலுத்துகின்ற வகையில் போடப்பட்ட அரசாணை எண் 92–ஐ மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. இந்த அரசாணை மூலமாக, தமிழகத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்கள் என்பதை இந்தச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காஞ்சிபுரம் மாவட்டம், காலவாக்கத்தில் உள்ள எஸ்.எஸ்.என். பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களை கட்டாயப்படுத்தி, மிரட்டி கல்விக் கட்டணத்தை வசூல் செய்துள்ளார்கள் என்பதை இந்த சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல கல்லூரிகளில் அரசிடமிருந்து பணம் வருவதற்குக் காலதாமதம் ஏற்படுவதால், மாணவர்களிடம் முன்கூட்டியே பணத்தை செலுத்தச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையின் வாயிலாக செயல்படுத்தப்படும் முத்தான திட்டங்களில் முதன்மையானது Post-matric scholarship திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்குமேல் கல்வி பயிலும் தகுதியுடைய ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்கள்



பயனடைகின்றனர். கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் 5 ஆண்டு கால ஆட்சியில் இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடே ரூ.819.10 கோடி ஆகும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மூன்றாண்டு கால ஆட்சியில், இத்திட்டத்திற்காக ரூ.1,636.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக, 2011–2012 முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு காலத்தில் பொறியியல் கல்லூரியில் மட்டும், இத்திட்டத்தின்கீழ் பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களின் எண்ணிக்கை 71,259 ஆகும். அதேபோன்று, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளில் 2011 முதல் 2014 வரை, இத்திட்டத்தின்கீழ் 37,146 மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1 கோடியே 33 இலட்சம் மாணவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக பயில்கிறார்கள். அவர்களில் 18 சதவிகித மாணவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் ஆவர். மாண்புமிகு அம்மா அவர்கள் அரசினுடைய நலத் திட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 18 சதவிகித ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த Post-matric scholarship பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் கல்லூரியான எஸ்.எஸ்.என்.

கல்லூரியில் இந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெறுகிற ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது, அதை அரசு மனதில் கொள்ள வேண்டுமென்ற ஒரு கருத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் கொண்டுவந்த பின்பு, இதுபோன்ற நிலைமை அந்தக் கல்லூரியில் இருப்பதாக அரசின் கவனத்திற்குத் தெரிய வந்தது. அவ்வாறு தெரியவந்த பின்பு, அரசாங்கத்திடமிருந்து நிதி வருகிறவரை இதுபோன்ற திட்டத்தின்மூலம் பயன்பெறக்கூடிய மாணவ, மாணவியரிடமிருந்து கல்விக் கட்டணத்தை வசூலிக்கக்கூடாது என்று அரசு அந்தகைக் கல்லூரிகளுக்கு எல்லாம் ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக உத்தரவு வழங்கியுள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிதி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றி ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினைக்காக மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் ரூ.6,255.34 கோடியை ஒதுக்கி சரித்திரச் சாதனை புரிந்துள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில்தான் இந்த மாதிரியெல்லாம் நடந்தது. ஆதி திராவிடர் நலத் துறைக்கான நிதியை அவர்கள் எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று நீங்களே பேசியிருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தமாதிரி எந்த நிகழ்வும் கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபொழுது, 2014–2015 ஆம் நிதியாண்டில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் ரூ.7,603.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு தனது மகிழ்ச்சியை இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்மீது எந்த அளவிற்கு அன்பும், பற்றும், பாசமும் வைத்திருக்கின்றார்கள் என்பதனையும், எந்த அளவிற்கு அவர்களுடைய மேம்பாட்டிற்கு, நலத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதனையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2014–2015 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், வரையறுக்கப்பட்ட அளவான 21.11 விழுக்காட்டைக் காட்டிலும், உயர் அளவான 25.07 விழுக்காடு அளவிற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதனையும், (மேசையைத் தட்டும் ஒலி) 2014–2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், மொத்தமாக ரூ.42,185 கோடி மாநிலத் திட்ட ஒதுக்கீடாக செய்யப்பட்டது. மாநிலத்திலேயே திட்ட ஒதுக்கீடாக ரூ.42,185 கோடிதான் ஒதுக்கப்பட்டது. அதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக மொத்தம் ரூ.10,574.02 கோடி என்ற அளவில் (மேசையைத் தட்டும் ஒலி) அதிக நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நீங்கள் பேச ஆரம்பித்து இதுவரை 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய விரிவான விளக்கத்திற்கு நன்றி. கடந்த மூன்றாண்டு காலமாக, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்காக சிறப்பு உட்கூறு திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, உண்மையிலேயே முழுமையாகச்

செலவிடப்பட்டுள்ளது என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், இந்த ஒதுக்கீடு, இந்த மக்களுக்காகச் செலவிடுவதற்குப் பதிலாக வேறு சில துறைகளுக்கு வகை மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்ற ஒரு விஷயத்தை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூடுதலாக நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே மாற்றமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே அந்தக் குற்றச்சாட்டு இருந்தது. ஆனால், இப்பொழுது அந்தக் குற்றச்சாட்டு இல்லையென்பதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 23 ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் உள்ள 23,000 பின்னடைவு காலிப் பணியிடங்களை உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிய அடிப்படையில், 6 மாதங்களுக்குள் உடனடியாக நிரப்பிட வேண்டுகிறேன். குரூப்–I தேர்வில் தேர்ச்சி பெற்ற 387 பேருக்கான பணியிடங்கள் நிரப்பப்பட்டிருந்தால், எத்தனையோ ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கிடைக்கப்பெற்றிருப்பார்கள். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட SC/ST பிரிவினரின் வழக்குகளை மட்டும் விசாரணை செய்திட, தனியாக சிறப்பு நீதிமன்றங்களை அமைத்திட வேண்டுகிறேன். ஆசிரியர் தகுதித் தேர்வில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த பிப்ரவரி 3–ல் அறிவித்த 5 மதிப்பெண்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 4 சிறப்பு நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வன்கொடுமைக் குற்றங்களை விசாரிக்க தனியாக சிறப்பு நீதிமன்றங்களை அமைத்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், கடந்த பிப்ரவரி 3–ல் ஆசிரியர் தகுதித் தேர்வில் 5 மதிப்பெண்கள் அறிவித்ததை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். அதேநேரத்தில், சமூக நீதிக் கோட்பாட்டின்படி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின இனத்தவர்களுக்குக் கூடுதல் மதிப்பெண் வழங்கிட வேண்டுகிறேன்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியர் பணி நியமனத்தில், மதுரை கிளை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும், அருந்ததியினருக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படாததை, இவ்வரசின் பணிவான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது முறைப்படுத்தப்பட வேண்டும்.

தீண்டாமைக் கொடுமை என்பது இன்றைக்கும் பல கிராமங்களில், பல வடிவங்களில் தொடர்கிறது.

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியர் பணி நியமனத்தில், அருந்ததியர் சமுதாயத்தினருக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்தவில்லை; உத்தரவு இருந்தும் நியமனம் வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். 200 Point Post-based Roaster System அடிப்படையில் அந்த இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. குறைந்த அளவில் நாம் பணியிடங்களை நிரப்புகின்றபோது, அந்த இடங்களில் அருந்ததியர்களுக்கான வாய்ப்பு சற்று தள்ளியிருக்கும். அந்த வாய்ப்பு

வரும்போதுதான், அவர்களைக் கொண்டு அது நிரப்பப்படும். அதிகமான எண்ணிக்கையில் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றபோது, அதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும். ஒருசில நேரங்களில், ஒரு துறையில் ஓர் இடமோ அல்லது இரண்டு இடங்களோ வருகின்றபோது, அது எந்தப் பிரிவினருக்கான பணியிடம் என்பதைப் பொறுத்துதான் நியமனம் செய்யப்படுகிறது. சில நேரங்களில் மற்ற பிரிவினருக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அந்த வகையில்தான், அந்த நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தச் சமுதாயத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணியிடம், வேறு பிரிவினரைக் கொண்டு நிரப்பப்படுவதில்லை என்ற நிலைமையை இன்னும் மாற்றாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணியிடங்களை நிரப்பி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ***

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், ஆதாரமில்லாமல் நீங்கள் இப்படியெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் அதற்கான ஆதாரத்தைக் கொடுத்துவிட்டுத்தான் அவையில் பேசவேண்டும். ஆதாரமில்லாமல் இதை எப்படி எடுத்துக் கொள்ளமுடியும்?*

**திரு. ப. டில்லி பாபு:** ****

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *** என்று ஆதாரமில்லாமல் சொல்லக்கூடாது. அவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

**திரு. ப. டில்லி பாபு:** *** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருந்தாலும் அதை நான் மேலும் பேசாமல் விட்டுவிடுகிறேன்.*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. ஆதாரம் கொடுத்தால் அவைக் குறிப்பில் பதியப்படும். ஆதாரம் கொடுக்காத வரையில், அது அவைக் குறிப்பில் ஏறாது.*

**திரு. ப. டில்லி பாபு:** *நான் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடத்திலே ஆதாரத்தை சமர்ப்பிக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி.*

**திரு. ப. டில்லி பாபு:** *எனது அரூர் தொகுதியில் சேக்காந்தள்ளி அருகே இன்றைக்கும் தலித் குடும்பங்களுக்கு எதிராக ஒரு தீண்டாமைச் சுவர் உள்ளது என்பதை நான் இந்த அவையிலே ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன்.*

*வீடற்ற பல்லாயிரக்கணக்கான தலித் குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கிடவேண்டும்; கூடுதல் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும். கொள்கை விளக்கக் குறிப்பில்கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு 912 பயனாளிகளுக்கு 2 கோடியே 52 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதே சமயத்தில், இன்றைக்கும் தமிழகம் முழுவதும் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்களுடைய வீடுகளுக்கு அல்லது அவர்கள் குடியிருக்கக்கூடிய பகுதிகளுக்குப் பட்டா வழங்கிட விண்ணப்பித்திருக்கிறார்கள். அரூர், அம்பேத்கர் காலனியிலே உள்ளவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று நான்கூட 975 மனுக்களைக் கொடுத்து, இன்று வரையில் அந்தப் பட்டா வழங்கப்படாமல் நிலுவையில் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோன்று, மயானத்திற்கான கூடுதல் நிதியும், ஈமச்சடங்கிற்கு வழங்கக்கூடிய தொகையை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்திடவும் இவ்வரசு முன்வர வேண்டுகின்றேன்.*

*சென்னை, இராயபுரம் மாணவர் விடுதியைப் பொறுத்தவரை, ஒரே கட்டடத்தில் 7 விடுதிகள் இயங்கி வருகின்றன. அதிகாலை 4–30 மணிக்கே மாணவிகள் திறந்தவெளியிலே குளிக்கின்ற அவல நிலைமையைப் போக்கிட வேண்டுகின்றேன்.*

விலைவாசி உயர்விற்கேற்ப, அவர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்தித் தர வேண்டுகிறேன். தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற விடுதிகளை மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு கண்காணித்திட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே இடத்தில் ஏழு விடுதிகள் செயல்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் குறைபாட்டைப் போக்கிடும்வண்ணம், வேப்பேரியில் 4 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரத்தால் அந்த விடுதிகள் விரைவில் திறக்கப்பட்டவுடன், 4 விடுதிகள் அங்கு மாற்றம் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு அமைச்சர் நல்ல பதிலினைத் தெரிவித்திருக்கிறார்; உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006, வன உரிமைச் சட்டத்தை தமிழ்நாட்டில் அமல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அந்தத் துறையினுடைய உயரதிகாரிகளும் விரைவாக பணிகளை மேற்கொள்வதை வரவேற்கிறேன். ஆனால், உயர் நீதிமன்றத்தின் 22–4–2010 நாளைய வழிகாட்டுதலில், 3,729 பேர்களுக்கு பட்டாக்களை வழங்கப் போவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விரைவில் பட்டா வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையாக இருப்பதால்தான், தடையாணை இருக்கின்றது. அந்தத் தடையாணை நீக்கப்பெற்றவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நிச்சயமாக அனைவருக்கும் வன உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பட்டா வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு, வீடுகளுக்குப் பட்டா வழங்கிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1989–ல் கொண்டுவரப்பட்ட தடையாணை எண் 1168–ஐ, இந்த அரசு இவ்வாண்டிலாவது நீக்கிட வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–30

தருமபுரி மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாளன்று வாச்சாத்தி வழக்கில் தீர்ப்பு வெளியிடப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலுவையிலுள்ள பாதி தீர்வைத் தொகையை உடனடியாக வழங்குவதற்காக இந்தத் துறையிலுள்ள அதிகாரிகள், இயக்குநர்கள், செயலாளர்கள் கடுமையான முயற்சி எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீதத் தொகையான ரூ.1 கோடியே 47 இலட்சத்தை உடனடியாக வாச்சாத்தி மக்களுக்கு வழங்கிட முன்வர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம், வாச்சாத்தி கிராமத்தில் நடைபெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக தலா ரூ.10,000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு பெறப்பட்ட உயர் நீதிமன்ற ஆணையின்படி அமைக்கப்பட்ட 4 குழுக்களின்மூலம் மேற்கண்ட சம்பவம் தொடர்பான 475 வழக்குகளையும் ஆராய்ந்து, அவற்றில் 407 வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக ரூ.1 கோடியே 41 இலட்சம் தீர்வைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், தமிழ்நாடு பழங்குடியினர் கூட்டமைப்பின் தலைவர் அரசுக்கு அளித்த மனுவின் அடிப்படையில், மேற்கண்ட வழக்கு மற்றும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ஆகியவை ஆராயப்பட்டு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, அது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 7,96,676 பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் காட்டுநாய்க்கன், இருளர், கொண்டாரெட்டி, குருமன்ஸ், மலையாளி, மலைவேடன், மலைக்குறவன், பளியன், மலைமலசர் போன்றவர்களுக்கு இதுவரை சாதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, இன்னும் எவ்வளவு நேரத்தில் உரையை முடிப்பீர்கள் (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *இதுவரை 2 இலட்சம் சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி, ஒவ்வொரு சமுதாயத்தினுடைய உட்பிரிவுகளும் இத்தனை ஆயிரம் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி, ஏறக்குறைய 5 இலட்சம் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கு சாதிச் சான்று கிடைக்கப்பெறவில்லை. நான் அரசாங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால், அரசாங்கமே இன்னின்ன சாதிகளைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை இவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிறது. இருந்தும் சாதிச் சான்று கிடைக்கப்பெறாமல் இருக்கக்கூடிய நிலையில், உயர் கல்வி படிக்க முடியாத நிலையும், வேலைவாய்ப்பு பெற முடியாத அவல நிலையும் இன்றைக்கும் தொடர்கிறது. குறிப்பாக வேலூர், திருப்பத்தூர், ஆத்தூர், திருவள்ளூர் போன்ற இடங்களிலுள்ள வருவாய்க் கோட்டாட்சியர்கள், அரசு முதன்மைச் செயலாளர் கடிதம் எழுதியிருந்தும்கூட, அந்தக் கடிதத்தை அவமதிக்கிறார்கள். வட்டாட்சியர்கள்கூட அது என்ன என்று பார்க்கவே தயங்குகிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், உத்தரவுகள் பிறப்பித்தும், அரசாணைகள் வெளியிட்டும், அரசாணையை அமல்படுத்த உச்ச நீதிமன்ற ஆணை இருந்தும் அமல்படுத்தத் தயங்குகிறார்கள்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுவது கடந்த மைனாரிட்டி ஆட்சியிலே நிகழ்ந்த அவல நிலையாகும். தற்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசில் மாணவ, மாணவிகளுக்கு சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக 6 ஆம் வகுப்பிலேயே, அவர்கள் படிக்கின்ற பள்ளிக்கூடங்களிலேயே சாதிச் சான்றிதழ் வழங்குகின்ற புரட்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிகரமாக நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையிலே, இன்றைக்கு 6 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளிடமிருந்து 11,23,355 மனுக்கள் பெறப்பட்டு, வட்டாட்சியர்கள் ஆய்வு செய்து, அப்பள்ளித் தலைமையாசிரியர்கள் முன்னிலையில் உரிய சான்றிதழ்களை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாதிச் சான்றிதழ்கள் வழங்குவது குறித்து பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, தகுதி இருப்பவர்களுக்கு, குறிப்பாக, மலைவாழ் மக்களுக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு உடனடியாக, போர்க் கால அடிப்படையில், சாதிச் சான்று வழங்குகின்ற ஒரே அரசாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே எடுத்துக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசி முடித்ததும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கப்போகிறார்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெற்றோர்கள் சாதிச் சான்று பெற்றிருந்தால் அவரது பிள்ளைகளுக்கும் சாதிச் சான்று வழங்கப்பட வேண்டும், குடும்பத்தில்*

ஒருவருக்கு சாதிச் சான்று வழங்கப்பட்டிருந்தால் அக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று முன்னாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதே அவையில் அறிவித்திருப்பதையும், உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகள் இதற்காக இருப்பதையும் நடைமுறைப்படுத்த வேண்டுகிறேன். பழங்குடியினரின் மாவட்ட வரையறைகளை நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, திருப்பத்தூர் வட்டத்தில் சாதிச் சான்றிதழ் வழங்கப்படாதது குறித்து என்று நினைக்கின்றேன். ஒருவரது பெற்றோருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழே தவறு என்று உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த காரணத்தினால்தான் அந்தக் குடும்பத்திற்கு சாதிச் சான்றிதழ் வழங்க முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது காட்டுநாய்க்கன் இனத்தவரைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது உடன் பிறப்புகள் இருந்தால் மட்டும்தான், கோட்டாட்சியர் அவர்களால் சான்றிதழ் வழங்க முடியும். அவருக்கு இரத்த உறவேயில்லை எனும்போது எதை வைத்துக் கொடுப்பது? உடனேயே அவர் நீதிமன்றத்திற்குச் சென்று விடுகிறார். இது தவறு. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஸ்டேட் பேங்கில் அதிகாரியாக இருந்த ஒருவர் ஓய்வு பெறும் நேரத்தில் அவர் S.T. சான்றிதழ் தவறாகப் பெற்று விட்டார் என்று சொல்லி, அன்றையதினமே அவரை பணி நீக்கம் செய்திருக்கின்றார்கள். அதிகாரிகள் ஆராய்ந்து பார்த்துதான் சான்றிதழ்களைக் கொடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ ஆணை பெற்றுவிட்டார்கள், உடனே கொடுத்துவிடுங்கள்' என்று சொல்வதில் பல இடையூறுகள் இருக்கின்ற காரணத்தினால்தான் அது மறுக்கப்படுகிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்த திட்டங்கள் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, உரையை முடியுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடி ஆராய்ச்சி மையம் பரிந்துரை செய்துள்ள புலையர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் மீண்டும் சேர்க்க மத்திய அரசுக்கு பல்வேறு விவரங்களுடன் அனுப்பிடவும், குறும்பர் இனத்தின் உட்பிரிவுகளை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திடவும் இவ்வரசு பரிந்துரை செய்திட வேண்டுகிறேன். ஈரோடு மலையாளி இனத்தை S.T. பட்டியலில் இணைத்திட வேண்டுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புலையர் இனத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கின்றார். பழங்குடியினர் பட்டியலில் ஓர் இனத்தைச் சேர்ப்பது அல்லது நீக்குவது என்பது மத்திய அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்ட பொருளாகும். மேலும், மத்திய அரசின் 1976 ஆம் ஆண்டின் சட்டத் திருத்தத்தின்மூலம் வெளியிடப்பட்ட பழங்குடியினத்தவர் பட்டியலில் புலையர் இனம் இடம் பெறவில்லை. எனவே, பழங்குடியினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ள புலையர் இனத்தவரை மீண்டும் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்*

என்பது மத்திய அரசின் விதிகளுக்குட்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நீங்கள் இரண்டு நிமிடங்கள் கேட்டு, நான்கு நிமிடங்கள் பேசி விட்டீர்கள். சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினருக்கான தனி அமைச்சகத்தையும், தனி செயலகத்தையும் இவ்வரசு புதிதாக ஏற்படுத்திட வேண்டுகிறேன். தாட்கோ நிதியை கூடுதலாக்கி முழுமையாக செலவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் வைத்த இதே கேள்வியைத்தான் தே.மு.தி.க. உறுப்பினர் திரு. நல்லதம்பியும் குறிப்பிட்டார். 130 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டும், இன்னும் நிதி செலவிடப்படாமல் நிலுவையில் இருக்கின்றது என்று குறிப்பிட்டிருக்கிறார். பாராளுமன்றத் தேர்தல் நடந்த காரணத்தினால், கடந்த மூன்று மாதங்களில் அந்த நிதியை உபயோகிக்க முடியாமல் நிலுவையில் இருந்தது. அந்த நிதி இந்த ஆண்டு கொடுக்கப்பட்டுவிடும் என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினருக்கான நல வாரியத்தை மீண்டும் அமைத்து, பிரதான பழங்குடியினப் பிரிவுகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். இறுதியாக, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்காக மனித மாண்புகளை, உரிமைகளைப் பாதுகாத்திட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை கறாராக அமல்படுத்த வேண்டுகிறேன்.



தமிழகத்தில் சில சாதி அமைப்புகள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீக்கிட வேண்டுமென்று நீதிமன்றம் சென்றுள்ளன. மத்திய அரசுகூட இச்சட்டத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, நீங்கள் பேச ஆரம்பித்து 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** நீதிமன்றங்களில் அவ்வழக்கிற்கு எதிராக implead petition ஒன்றில் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தலைவர் திரு. சம்பத் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் மரியாதைக்குரிய திரு. ஆர்.எம். நல்லகண்ணு அவர்களும் வாதியாக அந்த வழக்கில் இணைந்திருக்கின்றார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களின் உரிமைகளைக் காத்திட, சட்டத்தை, நீர்த்துப் போகக்கூடிய அளவிற்கு வாதாடி, அந்தச் சட்டத்தை எடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய சில ஆதிக்க சக்திகள் மற்றும் பல்வேறு சாதிய அமைப்புகளுக்கு எதிராக தமிழக அரசு நீதிமன்றத்தில் வாதிட முன்வர வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்குரிய சிறந்த அடிகோலை இவ்வரசு முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 27 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக நடைபெறக்கூடிய கல்வி நிலையங்கள் அனைத்தும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே அறிவியல் பாடப் பிரிவிற்கு ஆசிரியர் இருக்கின்றார். அதேசமயத்தில் History, Economics, Commerce ஆகிய பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர் இல்லை. 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9 ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்தார்கள். ஆனால், இதுவரை

5 ஆசிரியர் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. ஆகவே, நிலுவையில் இருக்கும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிவதோடு, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை எல்லாம் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். மேலும், வரலாறு போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 760 ஆசிரியர் பணியிடங்கள் தேர்வு வாரியத்தின் மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது. அது ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் நிச்சயமாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள். இப்போது நேரம் 1–40 ஆகிவிட்டது. குறுக்கீடு இல்லாமல் பேசுங்கள்.

***திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக 2014–2015 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நல மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகிறேன். 2014–2015–ல் ஆதி திராவிடர் மேம்பாட்டிற்கு பட்ஜெட்டில் ரூபாய் 7,603 கோடியும், பழங்குடியினர் மேம்பாட்டிற்கு ரூபாய் 435.55 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது முறையே 18.02 சதவீதமும், 1.03 சதவீதமும் என அரசு, மொத்த நிதி ஒதுக்கீட்டில் சதவீத அடிப்படையில் ஒதுக்கீடு செய்தாலும், அது அந்த மக்களுக்குக் கிடைப்பதில் மிகப் பெரிய சிரமங்கள் உள்ளன. தமிழக அரசின் ஆதி திராவிடர் நல விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொடர்ந்து தடையின்றி கல்வி பயிலவும், தொழில் தொடங்கவும் விடுதி அளவில் வழிகாட்டுதல் மையங்களைத் தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும். தற்போது ஆரம்பக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது என்பது, இதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த பெருமளவு மாணவர்கள் பயன்பெறுகிறார்கள் என்பதும் மறுக்க முடியாதது.



அதேநேரத்தில், ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாட்டிற்குச் சென்று இலவசமாகப் படிப்பதற்கு தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். பி.இ. பயிலும் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கிறது. இதுபோல, அனைத்துப் படிப்புகளுக்கும் கல்விக் கட்டணத்தை அரசே ஏற்க வேண்டும். Matriculation, C.B.S.E. பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகையை வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் அவர்கள் அனைத்துப் படிப்புகளுக்குமே கல்வித் தொகையை அரசே ஏற்க வேண்டுமென்று கூறியுள்ளார். ஆதி திராவிடர் நல மக்களுடைய பாதுகாவலராகத் திகழ்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இளங்கலையைப் பொறுத்தவரையில், மாணாக்கர்கள் அனைவருக்கும், முதுநிலை படிக்கின்ற வரையில் மாணவிகள் அனைவருக்கும் அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்கும்விதமாக இலவசமாக வழங்குகின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டும். அதேபோல, ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் தனியார் பள்ளிகளுக்கு நிகராக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக இப்போதுதான் Certificate verification முடிந்திருக்கிறது. இன்னும் 10, 15 தினங்களுக்குள்ளாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆதி திராவிடர்களுக்கென ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்பதோடு மட்டும் நில்லாமல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், மகளிர் கல்லூரிகள் போன்றவற்றை படிப்படியாக ஆதி திராவிடர் நலத் துறைமூலம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற உழைக்கும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களைப்



பாராட்டும்விதமாக டாக்டர் அம்பேத்கர் விருதும், இரட்டை மலை சீனிவாசன் போன்ற தலைவர்களின் பெயரால் விருதும் கொடுத்து, பாராட்டி, சான்றிதழ்களும் வழங்கி சிறப்பிக்க வேண்டும். ஆதி திராவிடர் நலத் துறை அலுவலகங்களில் மாணவர்கள், இளைஞர்கள், மகளிர் போன்றவர்களுக்கு வழிகாட்டும் விதமாகவும், கல்வி, தொழில், சுய தொழில் தொடங்கவும், வேலைவாய்ப்பு பெறவும், அரசுத் தேர்வுகளை எதிர்கொள்ளவும் வழிகாட்டுதல் மையங்களை ஏற்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 1–45*

அரசுத் தேர்வுகள் எழுதச் செல்லும் ஆதி திராவிட இன மாணவர்கள் பேருந்துகளில் இலவசமாக சென்று வர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். B.E. counselling–ல் கலந்து கொள்ள வரும் மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களிடம் அனுமதிச் சீட்டு நகலைப் பெற்று, சலுகைக் கட்டணத்தில் சென்னைக்கு பயணம் மேற்கொள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் அனுமதி வழங்குவதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து பாராட்டுகிறேன். மேலும், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மத்திய அரசு நடத்தும் பொதுத் தேர்வுகளை எழுதச் செல்லும்போது இலவசமாகவும், கட்டணச் சலுகையுடனும் பயணம் செய்ய இரயில்வே நிருவாகம் அனுமதி அளித்து வருவது பல ஆண்டுகளாக நடைமுறையிலுள்ளதை இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக முன்னாள் முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பழுதுபார்த்து, பராமரிப்பதற்கு அரசு நிதி ஒதுக்கிட வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பஞ்சமர்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 12 இலட்சம் ஏக்கர் நிலங்கள் வேறு சாதியினரின் ஆக்கிரமிப்பில் பெருமளவு உள்ளன. ஆக்கிரமிப்பின் பிடியில் உள்ள பஞ்சமி நிலங்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக பஞ்சமி நிலங்கள் வழங்கப்பட்டதோ, அந்த நோக்கத்தினை நிறைவேற்ற இவ்வரசு முழு முயற்சி எடுக்கவேண்டும். இதற்காக அரசின்மூலம் குழு ஒன்றை அமைத்து, ஆய்வு செய்து, பஞ்சமி நிலங்களைக் கையகப்படுத்தி தலித் மக்களுக்குக் கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை 10 ஆண்டுகளுக்குள் விற்பனை செய்யக் கூடாது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு விற்பனை செய்வதாயின், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அல்லாத வேறு ஒருவருக்கு விற்பனை செய்யக் கூடாது என்ற நிலையில்தான் வருவாய்த் துறையின் மூலமாக தெளிவான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 17,912.4 ஏக்கர் நிலம் மீளப்பெற்று, ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், 1,027.29 ஏக்கர் நிலம் மட்டுமே 715 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நிலத்தினை வருவாய்த் துறையின்மூலம் மீட்டு, ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

**திரு. கு. லிங்கமுத்து:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அமெரிக்காவின் தலையீட்டால் உலக வங்கியிடம் கடன் பெறுவது நெருக்கடிக்குள்ளாகி வருவதைத் தவிர்க்க, சீனா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் சேர்ந்து பிரிக்ஸ் வங்கி உருவாக்கியுள்ளதைப் போன்று, ஆதி திராவிட மாணவ, மாணவியர் கல்வி பயில தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் தருவதற்கு முன்வராததைப் போக்க, கல்விக் கடன் வழங்குவதற்கென்று ஒரு வங்கியை அரசு ஏற்படுத்த வேண்டும். அனுப்பப்பட்ட அனைத்துப் பரிந்துரைக் கடிதங்களுக்கும் வங்கிகள் கடன் வழங்கியதா என்பதை உறுதி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஆய்வு செய்யும் பணியை மேற்கொள்ள வேண்டும். வங்கிக் கடன் வழங்காத மேலாளர்கள்மீதும், சொத்து உத்தரவாதம் கேட்டு அலைக்கழிக்கும் வங்கி அதிகாரிகள்மீதும், கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள*



*ரிசர்வ் வங்கிக்கும், சம்பந்தப்பட்ட வங்கித் தலைமைக்கும் தமிழக அரசோ அல்லது மாவட்ட நிருவாகமோ பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டும். தனியார் துறையில் S.C., S.T., பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டு முறையைக் கட்டாயப்படுத்த வேண்டும். இதற்காக மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் அடங்கிய குழுவை மாநிலம், மாவட்டங்கள் வாரியாக அமைத்து ஆய்வு செய்ய வேண்டும்.*

*சென்னையைச் சேர்ந்த சரவணன் என்ற மாணவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அனுமதியோடு பிரிட்டனில் உள்ள Manchester மருத்துவ ஆராய்ச்சிப் படிப்பு படிக்க கடந்த ஆண்டு அனுப்பிவைக்கப்பட்டார். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவருக்கு அனுப்ப வேண்டிய கல்லூரிக் கட்டணத்தை இதுவரை அனுப்பாததால் மிகவும் சிரமப்படுகிறார். அதோடு, வெளிநாட்டில் அரசு மூலம் உதவி பெற்று படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு பணவீக்கத்தின் காரணமாக இந்திய பண மதிப்பு குறைவால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதைப் போக்க வேண்டும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் படிக்கின்ற மாணவர் சரவணனுக்கு பணம் கொடுக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர், உண்மைக்குப் புறம்பாகக் கூறுகிறார் என்று நினைக்கின்றேன். (குறுக்கீடு) அங்கிருந்து வருடா, வருடம் எவ்வளவு பணம் என்று indent வந்தபிறகுதான் அனுப்ப இயலும். (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அனுமதியோடு வெளிநாட்டிற்கு படிப்பதற்காக அனுப்பப்பட்ட ஆதி திராவிட மாணவர் சரவணன் என்பவருக்கு முதல் ஆண்டில் அனுப்ப வேண்டிய ஒரு பகுதி பணம் இதுவரை அனுப்பப்படாமல் நிலுவையில் உள்ளது. இரண்டாவது, பொதுவாக வெளிநாட்டில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், கல்விக் கட்டணத்தை ஆண்டுதோறும் உயர்த்துகிறார்கள். பணவீக்கம் அடிப்படையில் அங்கு இருக்கக்கூடிய டாலருக்கும், இங்கு இருக்கக்கூடிய பணத்திற்கும் மதிப்பில் வித்தியாசம் இருக்கிறது. அதுவும் அவர்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்கின்றது. எனவே, இதுகுறித்து விண்ணப்பித்திருக்கிறார்கள். அதையும் தாங்கள் கனிவோடு பரிசீலனை செய்து, அந்தக் கட்டண விகிதத்தில் இருக்கக்கூடிய மதிப்பின் வித்தியாசத்திற்கான பணத்தினை அனுப்புவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். சரவணன் விஷயத்தில் பணம் அனுப்பப்படவில்லை. அந்தப் பணத்தினை நீங்கள் உடனடியாக அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன், சுருக்கமாகக் கேளுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஏற்கெனவே சரவணன் என்கின்ற அந்த மாணவனை மேல் ஆராய்ச்சிப் படிப்பிற்காக வெளிநாட்டிற்கு அனுப்பியிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுருக்கமாகக் கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் விளக்கமாகப் பேச முடியாது.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** அரசு அந்த மாணவனுக்குத் தேவையான முதல் தவணையை ஏற்கெனவே அனுப்பியிருக்கிறது. இரண்டாவது தவணை அனுப்பப்படவில்லை. பணவீக்கத்தின் காரணமாக. . . (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதை ஏற்கெனவே திரு. குணசேகரன் பேசிவிட்டார்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** அந்த மாணவன் பணத்தைக் கட்டாததனால் அவர் படிப்பினைத் தொடரமுடியாமல் அவதியில் இருக்கின்றார். ஆகவே, அதனை உடனடியாகப் பரிசீலித்து பணத்தினை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** அண்மைக்காலமாக தலித் மக்கள் மீது சாதியரீதியான வன்கொடுமைகள், தாக்குதல்கள், வன்முறைகள் போன்ற அத்துமீறல்கள் அரங்கேறி வருகின்றன. தலித் மக்கள்மீதான இந்த. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையெல்லாம் ஆதாரம் இல்லாமல் பொத்தாம் பொதுவாகப் பேசக்கூடாது. இதுபோன்ற விவரங்களைச் சொல்லும்போது ஆதாரங்களை முன்பே கொடுத்துவிட்டுப் பேசவேண்டும். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கு. லிங்கமுத்து:** சாதி மோதல்களில் தமிழக அரசின் உறுதியான நடவடிக்கைகளை வரவேற்கிறோம். இவர்களுக்கென தனியாக வீடு கட்டும் திட்டத்தினை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும். கான்கிரீட் வீட்டில் வசிக்க வேண்டும் என்ற ஏக்கத்தில் இருக்கும் ஏழை தலித் குடும்பங்களுக்கு உதவும் வகையில், ஒவ்வொரு நகரங்களிலும், வட்டங்களிலும் ஆதி திராவிடர்களுக்கென்று தனியாக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி வங்கிக் கடன் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவர் திரு. சரவணன் என்பவருக்கு முதல் தவணை ரூ.25,72,989/– வழங்கப்பட்டுவிட்டது. இரண்டாவது தவணை கோரி இன்னும்

விண்ணப்பம் பெறப்படவில்லை. எவ்வளவு பணம் வேண்டும் என்று அந்த மாணவன் படிக்கும் கல்லூரியிலிருந்து இன்னும் கடிதம் வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இந்தப் பதில் ஆதாரபூர்வமாக எங்களது துறைச் செயலாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே கடிதம் வந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்யத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கிறார்கள். (குறுக்கீடு) கடிதம் இன்னும் வரவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுகுறித்து பரிசீலிப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, பேசி முடியுங்கள். (குறுக்கீடு) இதில் மேலும் discussion செய்ய முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் தற்போது discussion–க்குப் போகிறீர்களா அல்லது கருத்து சொல்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொன்னதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டில் படிக்கின்ற மாணவன் சரவணன் சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து இன்று மாலைக்குள்ளாக துறை அலுவலர்களிடம் விரிவாக ஆய்வு செய்து, கோரிக்கை பெற்றிருப்பின், நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் உத்தரவினைப் பெற்று, உடனடியாக அந்தத் தொகை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சியில் தமிழகத்தில் சில அரசியல் மற்றும் சாதிய அமைப்புகள் நீதிமன்றம்மூலம் முயற்சி செய்கின்றன. தற்போதைய மத்திய அரசும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை அமல்படுத்துவதில் தவறான அணுகுமுறையைக் கையாள்கிறது. எனவே, இச்சூழலில் தமிழக அரசு உறுதியாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வழக்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் தங்களை இணைத்துக்கொண்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மத்திய அரசு தலித் மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டங்களுக்கான நிதியைக் குறைத்துக் கொண்டுள்ளதாகவும், சில திட்டங்களைக் கைவிட்டுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன. இந்நிலை ஏற்படாமல் தமிழக அரசு கண்காணிக்க வேண்டும். அந்த நிலை ஏற்படுமானால், நாடாளுமன்றத்தில் 37 உறுப்பினர்களைக் கொண்டுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு மனை, அடிமனை இல்லாத ஆதி திராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து, வீட்டு மனைகள் வழங்க வேண்டும். அரசின் வழிகாட்டுதல் விலைக்கும், வெளி மார்க்கெட் விலைக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதால், நில ஆர்ஜிதம் அடிப்படையில் மனைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா, இல்லையா என்று தெரியவில்லை. இறந்தோருக்கு சுடுகாடும், சுடுகாட்டுப் பாதையும் இல்லாத நிலை இப்போதும் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** இந்த நிலை தொடர்ந்து நீடிக்காமல், சுடுகாடு இல்லாத பகுதிகளில் சுடுகாட்டிற்கான இடமும், பாதையும் அமைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் வீட்டுமனை வேண்டுமென்று கோரியுள்ளார். 2014–2015 ஆம் நிதியாண்டில் மட்டும் ரூ.512.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.298.51 இலட்சம் செலவில் 1,903 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 2013–2014 ஆம் நிதியாண்டில் ரூ.252.51 இலட்சம் செலவில் 912 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** ஆதி திராவிடப் பெண்களை மட்டுமே கொண்டு செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தொழில் தொடங்க அதிகபட்சம் ரூ.10 இலட்சம் சுழல் நிதி வழங்க வேண்டும். ஆதி திராவிட இளைஞர்கள் சுய உதவிக் குழுக்களை அதிக எண்ணிக்கையில் தொடங்கவும், சிறு தொழில் தொடங்கவும் தொழிற்பயிற்சி வழங்க தமிழக அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண்கள் விடுதிகளில் வார்டன்களாகவும், சமையலர்களாகவும் பெண்களை நியமிக்க வேண்டும். சமையலர்கள், ரிக்கார்டு கிளார்க், அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவி உயர்வு அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.



**திரு. கு. லிங்கமுத்து:** சமீபத்தில் பணி வழங்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள், இரவுக் காவலர்களுக்கு மிகவும் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கி, காலமுறை ஊதியம் வழங்கவேண்டும். ஆதி திராவிட நலப் பள்ளிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அந்தக் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கல்வி கற்பதற்கான நிதியுதவி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். SC, ST மக்களுக்கு தாட்கோமூலம் தொழில் தொடங்க கடன் வழங்கும்போது, மற்ற மாநிலங்களில் 10 சதவீதம், 20 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு 30 சதவீதம் மானியம் வழங்குவது வரவேற்கத்தக்கது. அந்தக் கடன்களை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிணையமில்லாக் கடன் நிதியிலிருந்து Credit Guarantee Fund–லிருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒரே ஒரு கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டு கட்டப்படத் தொடங்கிய பத்திரபல்லி அணை, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது, இது மீண்டும் கட்டி முடிக்கப்பட்டால் பேரணாம்பட்டு நகர ஒன்றியப் பகுதிகளுக்கு நல்ல குடிநீர் கிடைக்குமென்பதைத் தெரிவித்து, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாட்கோ லோன் பற்றிச் சொன்னார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபின் தாட்கோமூலம் பெறும் கடன்களுக்கான மானியத்தை ரூ.25,000/–லிருந்து ரூ.2,25,000/– இலட்சம் வரை, திட்டத்தொகையில் 30 சதவீதமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுக் காலத்தில் 1,29,175 பயனாளிகளுக்கு 262.53 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

***திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செந்தமிழும், செங்கரும்பும், இஞ்சியும், மஞ்சளும் கொஞ்சி விளையாடி செழித்திருந்த செந்தமிழ்நாட்டில், கடந்த கால தி.மு.க. ஆட்சியாளர்களால் வஞ்சமும். நஞ்சமும் பஞ்சத்தை உண்டுபண்ணிய தமிழகத்தில், கொஞ்சமும் அஞ்சா நெஞ்சத்தோடு வஞ்சத்தை வென்று, பஞ்சமின்றி மக்கள் வாழ, கண் துஞ்சாது உழைத்து வரும் கலியுகக் கடவுளே, அசைக்க முடியாத மன உறுதிகொண்ட எங்கள் தாயே, மனித நேய சீரிய சிந்தனை கொண்ட எங்கள் அம்மாவே, (மேசையைத் தட்டும் ஒலி) இரக்கம் காட்டும் உயர்ந்த குணமும், தெய்வீகச் சிந்தனையும் கொண்ட எங்கள் தாய், வாழும் வள்ளல், மனித தெய்வம், உலகத் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

தமிழர்களே, தமிழர்களே நீங்கள் என்னைக் கடலில் தூக்கி எறிந்தாலும், கட்டுமரமாக மிதப்பேன் என வாய் வசனம் பேசி, தமிழக மீனவர்களையே கடலில் தத்தளிக்க விட்ட கயவர்களிடமிருந்து தமிழகத்தை மீட்ட தாயை வணங்குகிறேன். அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே, உச்சி மீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே என்ற வீர வரிகளுக்கு இலக்கணமான எங்கள் வீரத் தாயை வணங்குகிறேன்.

வீரத்தின் விளைநிலமாக, விவேகத்தின் இருப்பிடமாக, ஆற்றலின் உறைவிடமாக, அறிவின் இருப்பிடமாக, அன்பின் பிறப்பிடமாக இருந்து, தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழகத்தை வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற எங்கள் முத்தமிழ் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இன மக்களின் பாதுகாவலராக, ஒப்பற்ற தலைவராக விளங்கிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். இன்றைக்கும் தமிழகத்தில் ஆதி திராவிட ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்றால், அது மிகையாகாது. ஆதி திராவிட இன மக்களின் முக்கியத் தொழிலான விவசாயம், ஆடு மாடுகள் வளர்ப்பது போன்ற தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து தொலைநோக்குச் சிந்தனையுடன்கூடிய எண்ணத்தைக்கொண்ட அம்மா அவர்கள் ஆதி திராவிட மக்களின் வாழ்க்கையை, வாழ்வாதாரத்தை, பொருளாதாரத்தை உயர்த்த இப்போது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது தேர்தல் வாக்குறுதிக்கிணங்க ஆதி திராவிட ஏழையெளிய மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அந்த மக்களின் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்தில் ஆதி திராவிட மக்களில் 30 சதவிகிதப் பயனாளிகளைத் தேர்வு செய்து வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அந்த மக்களுடைய எண்ணத்தை, அந்த மக்களுடைய வாழ்வாதாரத்தைப் புரிந்துகொண்டு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்றால், அது மிகையாகாது.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதி திராவிட தாய்மார்களின் நலனைக் கருத்தில்கொண்டு, இன்றைக்கு ஏழையெளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்திருக்கின்ற மக்கள், ஒவ்வொரு நாளும் பகல் நேரங்களில் வயல்காடுகளில் வேலைகளைச் செய்துவிட்டு, வீட்டில் வந்து மீண்டும் வேலையைப் பார்க்க முடியாது, களைப்பாக இருப்பார்கள் என்பதற்காக, அந்த மக்களுக்கு கிரைண்டர், மிக்சி, மின் விசிறி போன்ற விலையில்லா பொருட்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், ஆதி திராவிட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட, உருவாக்கப்பட்டதுதான் 'தாட்கோ' வங்கி. ஆனால், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியான கருணாநிதியினுடைய ஆட்சியானது, தாட்கோ வங்கியையே மூடிவிட்டது. அந்த அளவிற்கு கடந்த கால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, தாட்கோ வங்கியைச் சீரழித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, இரண்டு ஏக்கர் நிலம் தருகிறோம் என்று சொல்லி, பல்வேறு இடங்களில் 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று அவர்கள் சொல்லிக்கொண்டே இருந்தார்களேயொழிய எந்த ஒரு நலத் திட்டத்தையும் அன்றைக்குச் செயல்படுத்தவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றபோது, ஆதி திராவிட மக்களினுடைய பெண்கள் பெயரில் தாட்கோ மூலம் கடன் வாங்கி 2 ஏக்கர் நிலத்தை வாங்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவைப் போட்டார்கள்.

பிற்பகல் 2–05

அதோடுமட்டுமல்லாமல், அந்த நிலத்தில் இலவசமாக பம்பு செட் வைத்துக்கொள்ளலாம், bore போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லி, இலவசமாக மின்சாரத்தையும் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் தாட்கோ வங்கிமூலம் வண்டி மாட்டுக் கடன், கரிமூட்டம் போடுவதற்கான கடன், கறவை மாட்டுக் கடன், ஆடுகள் வளர்க்கும் கடன், டிராக்டர், லாரிகள் போன்ற வாகனங்கள் வாங்குவதற்கான கடன் போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தந்தார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், அறிக்கையில் சொன்னதுபோல, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் சுய தொழில் தொடங்க வழங்கப்படும் நிதி உதவியின் அளவை உச்சவரம்பு ஏதுமின்றி 30 சதவிகித மானியத்துடன் 7.5 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



ஆதி திராவிட தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களை வாழ்வில் உயர்த்துவதற்காக ஆதி திராவிட நல ஆணையத்தில் கலந்தாலோசனை மையம் ஒன்றை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இன்றைக்கு அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு, அந்த இன மக்கள் வணங்குகின்ற கிராமக் கோயில்களைச் சீரமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்தகால பொற்கால ஆட்சியில் ரூ.25,000/– வழங்கினார்கள். ஆனால், கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி அந்தத் திட்டத்தையே சீர்குலைத்து, அவர்களுக்கு ஒரு ரூபாய்கூட உயர்த்தாமல், அந்தத் திட்டத்தை கிடப்பிலே போட்டது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தான் அறிவித்த ரூ.25,000/–ஐ ரூ.50,000/– ஆக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு கடந்தகால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் உணவுப் படியாக ரூ.50/– தான் உயர்த்தினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உணவுப் படியை, ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆக உயர்த்தி வழங்கினார்கள். கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ரூ.550/–லிருந்து ரூ.750/– ஆகவும் உயர்த்தி வழங்கியுள்ளார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், உலகத்திலேயே +1, +2 படிக்கின்ற ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகளில் 50 பேர்தான் தங்க

அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு 50 பேர் என்பதை 100 பேராக இருந்தாலும் சேர்த்துக்கொள்ளலாம் என்ற சுற்றறிக்கையை அறிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இன மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கினார்கள். ஆனால், கருணாநிதியோ, நான் ஆதி திராவிட இனத்தினுடைய சம்பந்தி என்று சொல்லிக்கொண்டு, இந்த நாட்டு மக்களிடம், பேசுகின்ற போதெல்லாம் தம்பட்டம் அடித்தார். உதாரணமாக, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. கருணாநிதி அரசு, ஆதி திராவிட இன மக்கள் மேம்பாட்டிற்காக நிதி ஒதுக்குவது போல் ஒதுக்கிவிட்டு, அதை சமத்துவபுரம் கட்டவும், இலவச தொலைக்காட்சிப் பெட்டி வழங்கவும், பயன்படுத்தியது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை அன்றைக்கு சென்னையிலே நடத்தினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சாவூரில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். அதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாத மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அவர்கள், செம்மொழி மாநாடு நடத்தப்படும் என்று சொல்லி, ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தையெல்லாம் செம்மொழி மாநாட்டிற்கு செலவழித்து, தன்னுடைய குடும்ப மாநாடாக நடத்தினார் என்று சொன்னால், அது மிகையாகாது. அது செம்மொழி மாநாடா அல்லது கனிமொழி மாநாடா என்று நினைக்கின்ற அளவிற்கு அன்றைக்கு அந்த மாநாட்டை நடத்திக் காட்டினார்கள். இந்த நாட்டிலே ஆதி திராவிட மக்களுடைய பொருளாதாரத்தை வீணடித்தவர் கருணாநிதி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, ஆதி திராவிட மக்களுடைய துரோகியாக செயல்பட்டார் கருணாநிதி என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த தலித் எழில்மலை என்பவரை பொதுத் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தி, அழகுபார்த்தவர் மாண்புமிகு



அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. நிறைகுளத்தான் என்பவரை மாநிலங்களவை உறுப்பினராக்கி அழகு பார்த்தவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதோடுமட்டுமல்லாமல், முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்றபோது 10–11–1995 ஆம் நாளன்று திண்டுக்கல், சிவகங்கை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த, ஆதி திராவிட இன சகோதரர்களை, மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய தலைவர்களாக்கி அழகுபார்த்தவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைப் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், திரு. ப. தன்சிங் என்ற ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த அன்புச் சகோதரரை பல்லாவரம் பொதுத் தொகுதியில் நிறுத்தி வெற்றிபெறச் செய்து, அழகு பார்த்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் ஆதி திராவிட இனத்தைச் சார்ந்தவரை மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, அழகுபார்த்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2006 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணிக்கு அவருடைய இயலாமையைக் கருத்திற்கொண்டு, அவருக்கு 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி, அவருடைய குடும்பத்தைக் காப்பாற்றியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டபோது, தரையிலே படுத்து மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் திரு. கக்கன்ஜி அவர்களை எவரும் அன்றைக்குக் கண்டுகொள்ளாமல் இருந்த நேரத்தில், தானே

நேரடியாகச் சென்று, அவருக்கு உதவித் தொகை அளித்து, மருத்துவ உதவி செய்து வாழவைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதைப்போல, சட்டமன்றத் தேர்தலில் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், சங்கரன்கோவில் தொகுதியிலிருந்து வெற்றிபெற்ற, நம்முடைய அருமைச் சகோதரர் முன்னாள் அமைச்சர் திரு. கருப்பசாமி அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் கால்நடைத் துறை அமைச்சராகப் பணியாற்றியபோது, அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டவுடன், தன்னுடைய சொந்தச் செலவிலே தனியார் மருத்துவமனையான அப்பல்லோ மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறுவதற்காக அனுப்பினார். அவருடைய உடல் நலத்தைப் பாதுகாக்க முயன்றபோதும், உடல் நலம் தேறாமல் மரணமடைந்தார் என்ற செய்தியைக் கேட்டு, துயரமுற்று அவரது குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்து, இன்றைக்கும் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. இதுபோன்று பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் ஆதி திராவிட மக்களுக்காக இன்றைக்குச் செயல்படுத்திக்கொண்டிருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொண்டு, அவைக்குறிப்பில் எனது தொகுதிக் கோரிக்கைகளைச் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொகுதிக் கோரிக்கைகள்**

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றும், மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் பல ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருந்து வரும் ஏழையெளிய மக்களுக்கு பட்டா வழங்கவேண்டுமென்றும், திருப்புவனத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதியும், பிற்படுத்தப்பட்ட மாணவிகள் விடுதியும் அமைக்க வேண்டுமென்றும், திருப்புவனத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்றும்,



திருப்புவனத்தில் ஒரு கருவூல அலுவலகம் தொடங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பூவந்தி பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கி, நல்ல, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டுமென்றும், திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சேத்தியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்றும் தொடங்க வேண்டுமென்றும், பழையனூர் அருகில் ஓடும் கிருதுமால் நதியில் சிறு பாலம் அமைக்கவேண்டுமென்றும், திருப்புவனம் ஒன்றியம், அல்லிநகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கலியாந்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்றும், மானாமதுரையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ அல்லது மாலைநேர கலைக் கல்லூரியோ அல்லது பலவகை தொழில்நுட்பக் கல்லூரியோ தொடங்க வேண்டுமென்றும், மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனையை விரிவுபடுத்தி, முறையான அரசு போக்குவரத்துக் கழக பணிமனையாகச் செயல்படுத்த வேண்டுமென்றும், மானாமதுரை காவல் நிலையத்திற்கும், கிருஷ்ணராஜபுரம் தெருவிற்கும் இடையில் வைகையாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டுமென்றும், மானாமதுரையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய விரைவுப் பேருந்து இயக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலிருந்து மதுரை பெரியார் நிலையம் வரை பேருந்து இயக்க வேண்டுமென்றும், மானாமதுரை பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவிகள் விடுதி ஒன்று தொடங்க வேண்டுமென்றும், மானாமதுரை பேரூராட்சியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு இடநெருக்கடி இருப்பதால் பள்ளியின் அருகில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பயணியர் விடுதியை அகற்றி, அந்த இடத்தை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்றும், மானாமதுரை ஒன்றியம், மாங்குளம் ஊராட்சி, மூங்கில் ஊராட்சிப் பகுதிகளில் ஆதி திராவிட நல உண்டி, உறைவிட தொடக்கப் பள்ளி தொடங்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன் மானாமதுரை தொகுதி,

இளையான்குடி தாலுகா, இளையான்குடி ஒன்றியத்தில் 55 ஊராட்சிகளும், ஒரு பேரூராட்சியும் உள்ளன. எனவே, நிருவாக நலன் கருதி, இளையான்குடி ஒன்றியத்தைப் பிரித்து சாலைக் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒன்றியம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதி, இளையான்குடி தாலுகா, சாலைக் கிராமத்திலிருந்து இளையான்குடி, தாயமங்கலம், மானாமதுரை வழியாக மதுரைக்கு புறநகர் பேருந்து இயக்க வேண்டுமென்றும், இளையான்குடி தாலுகா, சூராணத்தில் காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்றும், இளையான்குடி பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்றும், இளையான்குடி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்றும், இளையான்குடி பேரூராட்சியில் நெடுஞ்சாலைத் துறை சார்பாகக் கட்டப்பட்டுவரும் பயணியர் விடுதிக்கான கட்டடப் பணியை விரைந்து முடித்து உடனடியாக செயல்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதி, இளையான்குடி தாலுகா, விசுவனூர் கிராமத்தில் ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்றும், இளையான்குடி தாலுகாவில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்டுள்ள கிராமங்கள் அனைத்தையும் சேர்த்து அனைத்துக் கிராமங்களுக்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கிடவேண்டுமென்றும், மதுரை, விரகனூர் மதகு அணையிலிருந்து பார்த்திபனூர் மதகு அணைவரை உள்ள வைகை ஆற்றின் கரையில் உள்ள நாணல் மற்றும் கருவேல மரங்களை அகற்றி வைகை நதியைச் சீரமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நல்ல முறையில் பேசுங்கள். இப்போது மணி 2.09 ஆகிறது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.



பிற்பகல் 2–10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒட்டுமொத்த மக்கள்தொகையில் 20 சதவிகிதத்திற்கு மேற்பட்டு, தமிழகத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலும் பரவி இருக்கக்கூடிய பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களை சமூகம், பொருளாதாரம், அரசியல், கல்வி ஆகிய துறைகளிலே பிற சமுதாய மக்களுக்குச் சமமாக வலுவடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்த மக்களுக்கு குடிநீர், இணைப்புச் சாலைகள், வீட்டுமனைகள், வீட்டு வசதி, பள்ளிகள், சுகாதார மையங்கள் போன்ற அடிப்படை வசதிகளையும், கல்வி வசதியையும் செய்து கொடுப்பதற்காக தமிழ்நாடு அரசால் 1,998.36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதன் மூலமாக, இந்தச் சமுதாயத்தை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வளர்ச்சி அடைய வைக்க வேண்டுமென்ற நோக்கத்தை இந்த அரசு நிறைவேற்ற, என்னுடைய ஆலோசனைகளை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எந்தவொரு சமுதாயமும் உணவாலும், உடையாலும் மட்டுமே வளர்ந்து விடுவது கிடையாது. தங்களுடைய அடையாளங்களை மீட்டெடுப்பதிலேயும் அந்தச் சமுதாயத்தினுடைய வளர்ச்சி இருக்கிறது. அதாவது கடந்த 20, 25 ஆண்டுக் காலமாக, தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய அளவிலேயும், identity politics என்பதும் ஓர் அரசியலாக இருக்கிறது. அந்த வகையிலேதான், தென் தமிழகத்திலே வாழ்கின்ற பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்களிலே நூற்றுக்கு எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்டிருக்கக்கூடிய மக்கள், தங்களை தேவேந்திரகுல வேளாளர்கள் என்று அழைத்திட வேண்டும் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். அதற்காகத்தான், கடந்த ஆட்சியில் 2011 ஆம் ஆண்டு, ஒரு நபர் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, 2012–2013, 2013–2014, மற்றும் 2014–2015–ல்கூட ரூ.14.13 இலட்சம் அந்தக் குழுவின் விசாரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 4 ஆண்டுக் காலம் ஆகிறது. ஒரு நபர் விசாரணைக் குழு எப்பொழுது அதனுடைய விசாரணையை முடிக்கும்? எப்பொழுது இந்த அவைக்கு அறிக்கையைத் தாக்கல் செய்யும். அதன்மூலமாக அந்த மக்களுக்கு நீதி எப்போது கிடைக்கும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஆதி திராவிடர் இனத்தவரின் பட்டியலில் இடம்பெற்றுள்ள குரும்பன், பன்னாடி, காளாடி, கடையன், தேவேந்திரகுலத்தான், பள்ளன், வாதிரியார் ஆகிய ஏழு உட்பிரிவு இனத்தவர்களையும் ஒருங்கிணைத்து தேவேந்திரகுல வேளாளர் என்று பெயர் மாற்றம் செய்வது தொடர்பான கோரிக்கை அரசால் ஏற்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், 16–5–2011 அன்று ஒரு நபர் கமிஷனிலிருந்து நீதியரசர் திரு. ஜனார்த்தனன் அவர்கள் விலகிவிட்டார்கள். மேலும், தேவேந்திரகுல வேளாளர் பட்டியலில் இவர்கள் குறிப்பிட்டுள்ள 7 பிரிவுகளில் வாதிரியார் என்னும் பிரிவு சார்பில் தமிழ்நாடு வாதிரியார் மகாஜனச் சங்கம், தங்கள் வாதிரியார் இனத்தை தேவேந்திரகுல வேளாளர் என்ற புதிய பெயர் மாற்றத்தில் இணைக்க வேண்டாம் என்றும், வாதிரியார் இனத்தைத் தவிர்த்து, மற்ற 6 இனங்களோடு ஒன்றுபடுத்தி தேவேந்திரகுல வேளாளர் என்று அறிவித்தால் எங்கள் இனம் அடையாளம் காணாமல் போய்விடும் என்றும் தெரிவித்து, அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** யார் அதிலே சேர வேண்டாம் என்று நினைக்கிறார்களோ, அவர்களை விட்டு விட்டு மீதி இருக்கக்கூடிய 6 பிரிவுகளையும் ஒருங்கிணைத்து அறிவிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இந்தியாவில் 29 மாநிலங்கள் இருக்கின்றன. இந்தியா முழுவதற்கும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக அண்ணல் அம்பேத்கர் அவர்கள், சமூகத்திலும், கல்வியிலும் மிக மிகப் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட, தீண்டாமைக் கொடுமைகளுக்கு ஆளான மக்களை பட்டியல்படுத்தி, Scheduled Castes என்று வகைப்படுத்தினார்கள்.



பிற்பகல் 2–15

அதேபோல, மலைப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களை Scheduled Tribes என்று அழைத்தார்கள். ஆனால், தமிழகத்தில் மட்டும் அந்த மக்களை ஆதி திராவிடர்கள் என்ற பெயரில் அழைக்கக்கூடிய ஒரு தவறான முறை, ஆளுநர் ஆட்சியில் 1989 ஆம் ஆண்டுவாக்கில் செயல்படுத்தப்பட்டது. எனவே, அதனைத் தொடர்ந்து அந்தப் பெயரைப் பொதுவாகச் சொன்னாலும், இங்கு இருக்கக்கூடிய பட்டியல் இன வகுப்புகளில் 76 உட்பிரிவுகள் இருக்கின்றன. 76 உட்பிரிவுகளையும் உள்ளடக்கி அவர்களுக்கு ஆதி திராவிடர் என்று பெயரிடுவது பொருந்தாது என்று மத்திய அரசினுடைய Scheduled Castes Commission ஏற்கெனவே தமிழ்நாடு அரசுக்கு அரசாணையாகவும், உத்தரவாகவும் பிறப்பித்துள்ளது. அதாவது, Scheduled Castes என்பதற்கு என்ன பொருளோ அதைத்தான் நேரடியாக மொழி பெயர்க்க வேண்டுமே தவிர, உங்களுடைய விருப்பம்போல் ஆதி திராவிடர் என்றோ வேறு பெயரிட்டோ அழைக்கக்கூடாது என்று சொல்லிய பிறகும்கூட தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஆதி திராவிடர்கள் என்று அழைக்கின்ற காரணத்தினாலே தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்த 76 உட்பிரிவு மக்களிடத்திலே தேவையில்லாத மனக் கசப்புகள் உருவாகின்றன. எனவே, நீங்கள் Scheduled Caste என்றே பெயரிடுங்கள், அதனால் தவறொன்றும் இல்லை; அதனால் இழிவும் இல்லை. B.C. என்றும் M.B.C. என்றும் அழைக்கிறார்கள் இதில் என்ன குறை வந்துவிடப்போகிறது? S.C. என்று அழைப்பதால் என்ன தவறு வந்துவிடப்போகிறது? எனவே, ஆதி திராவிடர்கள் என்று தேவையில்லாமல் சொல்லப்படுகிறது. அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இதுபோல் இல்லை. இன்னும் சொல்லப்போனால், உத்தரப்பிரதேச மாநிலத்தில் மூன்று முறை முதலமைச்சராக இருந்தவர் மாயாவதி அவர்கள். அவருடைய மாநிலத்திலும் தனியாக எந்தப் பெயரும் இல்லை. Scheduled Castes என்றுதான் இருக்கிறது. இந்தக் கோரிக்கை தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக தமிழ்நாடு அரசுக்குத் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாடு அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கைமீது இன்னும் பேச ஆரம்பிக்கவில்லை. இதே கோரிக்கையை கடந்த வருடமும் முன்வைத்தார். கடந்த வருடமே இதுகுறித்து விரிவாகப் பதில் சொல்லியிருக்கிறேன். இருப்பினும் 76 உட்பிரிவுகள் அடங்கிய பட்டியல் இனத் துறைக்கு புதுப் பெயர் வைக்கலாமா என்று கேட்டது தொடர்பாக, Scheduled Caste என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ்நாட்டில் அரிஜன், தலித், தலித் மக்கள், தலித்துகள், தாழ்த்தப்பட்டோர் போன்ற பெயர்களால் அழைக்கப்படுவதினை மாற்றி 1982 முதல் ஆதி திராவிடர்கள் என்று தமிழிலும், ஆங்கிலத்திலும் அழைக்கப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் என்று தற்போது அழைக்கப்படுவதை மாற்றக் கோரி பல்வேறு தரப்பிலிருந்து மனுக்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து ஆதி திராவிடர் என்று தற்போது அழைக்கப்படுவதை மாற்றி வேறு பெயரில் அழைக்கலாமா என்பது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அனுமதியுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, இக்குழு பல்வேறு இனப் பிரதிநிதிகளோடு ஆலோசனை நடத்தி, தனது அறிக்கையினை அரசுக்கு அளித்துள்ளது. இக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமியைத் தொடர்ந்து நான் பேசவிருப்பதால், நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனாலும், உண்மைக்கு மாறான ஒரு செய்தியை இந்தப் பேரவையில் பதிவு செய்யக்கூடாது என்பதற்காக நான் குறுக்கிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில்



ஆதி திராவிடர் என்று இருப்பதுபோல ஆந்திராவில் ஆதி ஆந்திரர் என்றும், கர்நாடகாவில் ஆதி கர்நாடகர் என்றும் இருப்பதை நாம் அறிவோம். ஆகவே, அங்கேயெல்லாம் இல்லை, இங்கே மட்டும்தான் இருக்கிறது என்பது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஆதி ஆந்திரர் இருக்கிறார்கள், ஆதி கர்நாடகர் இருக்கிறார்கள். அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தில்லை. இந்தத் துறைக்கு என்ன பெயர் இருக்கிறது என்பதுதான் முக்கியம். அதை ஏன் அவர் மறைக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், நீங்கள் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கிறது, அவர் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கிறது. அடுத்த சப்ஜெக்ட்டுக்கு செல்லுங்கள். உங்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் 7 நிமிடங்கள் முடிந்துவிட்டன.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Right to Education Act கல்வி உரிமைச் சட்டம் வந்ததற்குப் பிறகு இந்தியா முழுமைக்கும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, நேரத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்தபோது நேரம் 2–10. தற்போது 9 நிமிடங்கள் ஆகிவிட்டன.

பிற்பகல் 2–20

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் இப்போது தமிழகத்தில் 99.9 சதவிகிதம் மாணவர்களுக்குக் கல்வி கொடுக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்திலே ஏறக்குறைய 1,100–க்கும் மேற்பட்ட பள்ளிகள் ஆதி திராவிடர் பள்ளிகள் என்ற பெயரிலே செயல்படுகின்றன.

அந்தப் பெயரில் அந்தப் பள்ளிகள் செயல்படுவதனால், அங்கு வழங்கப்படும் கல்வியின் தரம், அரசினுடைய பிற பள்ளிகளினுடைய கல்வித் தரத்திற்குச் சமமாக இல்லை. காரணம் என்னவென்றால், அந்தப் பள்ளிகளை மேற்பார்வையிடுவது, கல்வித் துறை அதிகாரிகளாக இருக்க வாய்ப்பு இல்லை. வருவாய்த் துறை

அதிகாரிகளாக இருக்கின்றார்கள். மேலும், அந்தப் பள்ளிகளில் சில நேரங்களில் ஆசிரியர்களே வார்டனாகவும், வார்டன்கள் ஆசிரியர்களாகவும் செயல்படுகிறார்கள். இந்த ஆதி திராவிடர் பள்ளிகளைக் கல்வித் துறையோடு இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை என்னுடைய முதல் வேண்டுகோளாக இந்த நேரத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், வடக்கு மாவட்டங்களில் ஆதி திராவிடர் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களின் தேர்ச்சி விகிதாச்சாரம் குறைந்துவிடுகிறது. அதற்குக் காரணம், ஆதி திராவிடருக்கென தோற்றுவிக்கப்பட்ட தனி துறையால் இந்தப் பள்ளிகள் முறையாகக் கவனிக்கப்படவில்லை. இந்தப் பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையினுடைய நேரடிக் கண்காணிப்பில் இருக்கவேண்டுமென்பதை நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடக்கு மாவட்டத்தில் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்திருக்கிறது என்றார். 10–வது மற்றும் 12–வது வகுப்புத் தேர்வுகளில் இவ்வாண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், 82 சதவிகிதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதி திராவிடர் பள்ளிகளில் தேர்ச்சி விகிதம் குறைந்திருக்கின்றது என்று சொன்னேன்; பொதுவாகச் சொல்லவில்லை. நான் அரசுப் பள்ளிகளை எல்லாம் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படும், 1,343 பள்ளிகளிலும், 10 ஆம் வகுப்பில் 82 சதவிகிதமும், 12 ஆம் வகுப்பில் 82 சதவிகிதமும் இவ்வாண்டு மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்படும் பள்ளிகளோடு ஒப்பிடுகின்றபோது, இந்தத் தேர்ச்சி விகிதம் குறைவு. இது நேரடியாக கல்வித் துறையின் கண்காணிப்பில் இருந்தால், தேர்ச்சி விகிதம் இன்னும் கூடும் என்பதுதான் என்னுடைய ஆலோசனை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு ஒவ்வோர் ஆண்டும், ஆதி திராவிட மாணவ, மாணவிகளின் கல்விக்காக நிதியை அதிகமாக ஒதுக்குவதனால் தேர்ச்சி விகிதம் வருடா வருடம் கூடிக்கொண்டே போகிறது என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் 82 சதவிகிதம் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உரையை முடியுங்கள். அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள், டாக்டர். உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்

நியமனங்களைப் பொறுத்தவரை, ஒன்றில்கூட S.C–ஐ நியமிக்கவில்லை. தமிழ்நாட்டில் அரசினுடைய கட்டுப்பாட்டில் ஏறக்குறைய 20 பல்கலைக்கழகங்கள் உள்ளன. T.N.P.S.C. உறுப்பினர்களிலும் இல்லை, T.N.P.S.C. சேர்மனாகவும் இல்லை, A.P.R.O. நியமனத்திலும் கிடையாது. ஏன் இந்தப் பாகுபாடு?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றவர். கல்லூரிகளில் இனசுழற்சி அடிப்படையிலே பேராசிரியர்களை நியமிப்பதுதான் நடைமுறையில் இருக்கின்றது. ஆனால், பல்கலைக்கழகங்களில் நியமிக்கப்படும் துணை வேந்தர் பதவிக்கு இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. காரணம், அதற்கென்று ஒரு Search Committee—தேடுதல் குழு இருக்கின்றது. பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கு அந்தக் குழு தகுதி உடையவர்களைத் தேர்வு செய்யும். ஆகவே, ஒரு பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் நியமனத்தில் இட ஒதுக்கீடு என்பது மாநில அளவில் இட ஒதுக்கீடு செய்வது போன்றது, அது ஒரு நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகிறது. ஆகவே, அந்தத் தேர்வுக் குழு சுயமாக, சிறந்த கல்வியாளர்களை, அனுபவம் பெற்றவர்களை, நன்கு விவரம் தெரிந்தவர்களை, ஆராய்ச்சிப் படிப்புகள் முடித்தவர்களை, பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாகப் பணிபுரிந்தவர்களை, அவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும் அவர்களைத் தேர்வு செய்து அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தராக நியமிப்பதுதான் வழக்கமேயொழிய அதிலே இட ஒதுக்கீடு என்பது பின்பற்றப்படுவது இல்லை. ஆதி திராவிடர் சமுதாயத்திலிருந்து விண்ணப்பித்தவர்கள் யாராவது அந்தத் தகுதியைப் பெற்றிருந்தால், அவர்களைக் கொண்டு நிரப்பிக்கொள்வதற்கு அந்தக் குழுவிற்கு உரிமை உண்டு என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் 14 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடிப்பதாக இருந்தால் மட்டும் உங்களை அனுமதிக்கின்றேன். வேறு சப்ஜெக்ட்டுக்கு போனால், முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களை பேசச் சொல்லிவிடுவேன். (குறுக்கீடு) நீங்கள் 14 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 2—25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது, கல்லூரிகளிலும், A.P.R.O. நியமனத்திலும் பாகுபாடு பார்க்கப்படுவதாக இங்கே சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்த நிலையிலேயும் பாகுபாடு பார்ப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மக்களையும் ஒருசேரத்தான் பார்த்து, மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல பல காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குழந்தைக்குக்கூட மருத்துவ மேற்படிப்பில் மாண்புமிகு அம்மா அவர்கள் இடம் வழங்கியிருக்கின்றார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்வதாக இருந்தால், நான் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்களா, இல்லையா, என்பதைச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் உங்களுடைய பெண்ணுக்கு சீட்டு வழங்கியிருக்கிறார்களா, இல்லையா, அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னதால்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் அனுமதிக்கவில்லை. அவர் பேசட்டும், விடுங்கள். (குறுக்கீடு) முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டிற்கான. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *முனைவர் செ.கு. தமிழரசன், கொஞ்சம் இருங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பேசுவதற்கு அனுமதித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக உள் ஒதுக்கீடு பிரச்சினையிலே* S.C.—*யினுடைய 200* Point Roster-*ல் தொடர்ந்து பிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு* first priority *போடுவதால் பெரிய அளவிற்கு அருந்ததியினர் அல்லாத சமுதாய மக்கள் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். அதனால் 100* Point Roster *கொண்டு வர வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதேபோல, தொகுப்பு வீடுகளுக்கு தனி நிதி ஒதுக்கி பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*



***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருந்ததியர் உள் ஒதுக்கீடு என்பது, எல்லா விஷயங்களையும் ஆய்ந்து, பட்டியல் இனத்து மக்கள் மத்தியிலேயே, மிக அடித்தட்டில் இருக்கின்ற மக்களுக்கு இந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு சலுகை. அந்த உள் ஒதுக்கீட்டை அகற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இந்த மன்றத்திலே பேசியிருப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். என்னுடைய கருத்தைப் பதிவு செய்கிறேன்.*

*பட்டியல் இனத்து மக்கள் மத்தியிலேயே புதிரை வண்ணான் என்கிற பிரிவைச் சார்ந்தவர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். பட்டியல் இனத்து மக்களே, எங்களுக்கு சான்று அளித்தால்தான் நாங்கள் புதிரை வண்ணான் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள் என்ற இழிநிலைகூட இருக்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்கின்ற அந்த நோக்கத்தைத் தவிர உள் ஒதுக்கீட்டிலே வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள் ஒதுக்கீடு சம்பந்தமாக, ஆதி திராவிட மக்களும், அருந்ததியின மக்களும் சமூக, பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகை அளிப்பது அவசியம் எனக் கருதி, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 18 விழுக்காட்டில், 3 விழுக்காடு அருந்ததியினர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்குவதற்காக 2009 ஆம் ஆண்டிலே சட்டம் இயற்றப்பட்டது. அருந்ததியினர் உள் ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்து திரு. பி. ராஜசேகரன், சுப்பையா மற்றும் பலரால் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் வெளியிடப்பட்ட தீர்ப்பில், இதே மாதிரியான நிகழ்வு தொடர்பாக பஞ்சாப், ஹரியானா உயர் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து*

உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும், அதில் எடுக்கும் முடிவே இதற்கும் பொருந்தும் எனவும் தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதே கருத்தைத்தான் அவர் சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலும் வலியுறுத்தினார். இந்த ஆண்டும் அதே பதிலை நான் மீண்டும் கூறுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது A.P.R.O.–வை நியமிப்பதில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் யாரும் இல்லை என்று சொன்னார்கள். நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. துரைசாமி என்ற அருந்ததியினர் சமுதாயத்தைச் சார்ந்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் A.P.R.O.-ஆக நியமித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது தவறு என்பதை சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

*பிற்பகல் 2–30*

**முனைவர் செ.கு. தமிழசரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெறும் விவாதத்தில் பங்கேற்பதற்கு வாய்ப்பு தந்திருக்கிற தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கங்களை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*



***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. பெருமாள் அவர்களுடைய மகனுக்குக்கூட A.P.R.O. பதவியை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'A.P.R.O. பதவியில் இல்லை' என்று சொன்னீர்கள், இல்லையா? அதற்காகச் சொல்கிறேன். மலைவாழ் மக்களுக்கு அப்பதவிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, எஸ்.டி., மக்களுக்கு அப்பதவிகள் கொடுக்கப்படவில்லை' என்று சொன்னீர்கள், இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது, 'இப்பதவிகளை தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்களுக்குக் கொடுக்கவில்லை' என்றும், 'அப்பதவிகள் பாகுபாட்டின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன' என்றும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அவ்வாறு இல்லை என்பதற்காக இந்தப் பதிலைச் சொல்கிறேன்.*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பு தந்திருக்கிற தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றம் 1952 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு, அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இன்றைக்கு மக்களாட்சித் தத்துவத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு முன்னாலும் இந்த மாமன்றம் இயங்கியிருக்கிறது. சுதந்திர இந்தியாவிலே, நம்முடைய தமிழக சட்டமன்றப் பேரவையிலே, இந்தக் குறிப்பிட்ட மானியக் கோரிக்கையிலே, மிக அதிகமாகப் பேசியவன் என்கிற அந்தச் சிறப்பு எனக்கு இருக்கிறது என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறப்பிற்குப் பெருமை சேர்த்த, அந்தச் சிறப்பை உருவாக்கிய, அந்தச் சிறப்புக்கு முழு முதல் காரணமான போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளை இந்த மாமன்றத்திலே நான் பதிவு செய்துகொள்வது என்னுடைய நன்றிக் கடன் என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலன்களிலும், ஒடுக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளிலும், அவர்களுடைய வளர்ச்சியிலும், எந்தளவிற்கு முழு முனைப்போடு செயல்படுகிறார்கள் என்றால், அம்மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தாலும், வராவிட்டாலும், அவர்களுடைய பிரச்சினைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு வருகிறது என்று சொன்னால், அவற்றிற்கு விரைந்தும், உறுதியாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை பல சந்தர்ப்பங்களிலே, பல நிகழ்வுகளிலே அவர்கள் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

இன்றைக்கு பாரதப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதமர் திரு. மோடி அவர்களை, தமிழகத்தின் முதலமைச்சராக மரியாதை நிமித்தம் முதல் முறை சந்திக்கிற வேளையிலேகூட அவர் தந்திருக்கிற கோரிக்கை மனுவிலே குறிப்பிட்டிருக்கிற பல்வேறு பிரச்சினைகளில், காவேரி நீர் பிரச்சினை, கச்சத் தீவு பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை உள்ளிட்ட முக்கியப் பிரச்சினைகள் குறித்து மனுவைக் கொடுக்கின்றபோது, அவற்றுடன் ஒரு முக்கிய பிரச்சினையையும் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் கொடுத்திருக்கிற அந்த மனுவில் வலுப்படுத்தி, உறுதியான ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது என்ன கோரிக்கை என்றால், தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 35 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்திருந்தாலே அவர்கள் பொறியியல் கல்லூரிகளிலே சேர்ந்துகொள்வதற்கு தகுதிபடைத்தவர்கள் என்று தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், AICTE என்று சொல்லப்படுகிற மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிற அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமம் அதற்குத் தடை விதித்தது. இந்தத் தடையை மத்திய அரசு உடைக்க வேண்டும். முன்பு, ஒரு ஆண்டிலே மட்டும் 12,000 மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டார்கள். ஆக மொத்தத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில் 25,000–க்கும் அதிகமான மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் மத்திய அரசு தலையிட்டு, 35 சதவிகிதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சிபெற்றாலே போதும் என்கிற நிலையை உருவாக்கவேண்டும். A.I.C.T.E.–னுடைய ஆணையைத் தடை செய்யவேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை, அவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையிலே, இட ஒதுக்கீடு முறையிலே நடைபெற்று வருகிறது. இதற்கு முன்பு ஆதி திராவிட மாணவர்கள் 35 மதிப்பெண்கள் எடுத்திருந்தால் போதும் என்ற ஓர் ஆணையை A.I.C.T.E. வெளியிட்டு, அதன்படி, நாம் மாணவர்களைப் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்து வந்தோம். அதன் பிறகு அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் குழுமத்தை இரண்டு வகைகளாகப் பிரித்தார்கள். அதாவது இட ஒதுக்கீடு இருக்கக்கூடிய, B.C., M.B.C., S.C., போன்ற பிரிவினர் 45 சதவிகிதம் மதிப்பெண்ணும், மற்ற பிரிவினர் 50 சதவிகிதம் மதிப்பெண்ணும் பெற்றிருக்கவேண்டும் என்றும், இது அகில இந்திய அளவில் பின்பற்றப்படவேண்டும் என்றும் ஒரு சுற்றறிக்கை ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இப்படி ஒரு முறை இருக்கக்கூடாது, ஆதி திராவிடர் மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டும், அவர்கள் பொறியியல் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமீபத்திலே மத்தியில் புதிய அரசு அமைந்த உடனேயே டெல்லி சென்று, பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, அவரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் இந்தக் கோரிக்கையையும் முன் வைத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், அந்த மாணவர்களுக்கு இருக்கக்கூடிய

இடஒதுக்கீட்டின் அடிப்படையில், 35 சதவிகிதம் மதிப்பெண் பெற்றால்கூட போதும் என்ற நிலையை வலியுறுத்தி மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு ஒரு Memorandum கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மத்திய அரசாங்கம் எடுக்க வேண்டிய முடிவு. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம்தான் இந்த முடிவை எடுக்கவேண்டும். அதை மீறி நாம் பொறியியல் சேர்க்கை செய்தால், அது சட்டத்திற்குப் புறம்பான ஒரு செயலாகும். ஆகவே, அவர்கள் நீதியைப் பெறுகிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:* *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது, மேலோட்டமாக, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களுக்கு A.P.R.O., பதவி வழங்கப்படவில்லை என்ற கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், அருந்ததியின வகுப்பைச் சார்ந்தவர்கள், மலைஜாதி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் A.P.R.O. பதவிக்கு வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டுச் சொன்னார்கள்.*

*2001–2006 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, திருவாரூர் மாவட்டம், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த திரு. செந்தில்குமார் என்கிற ஒரு சாதாரண ஏழை மாணவனை A.P.R.O.–வாக நியமித்து, இப்போது தஞ்சாவூர் P.R.O.–வாக இருக்கிறார் என்பதனை பெருமையோடு இந்த அவையில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைத்தான், நானும் இங்கே வலியுறுத்துகிறேன். யாரும் கேளாமலேயே, கோரிக்கை வைக்காமலேயே பிரதமரைச் சந்தித்த முதல் சந்திப்பிலேகூட இந்தக் கோரிக்கையை எடுத்து வைக்கிற அளவிற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுடைய வளர்ச்சியிலும், நலனிலும், அதிலும் குறிப்பாக, கல்வி வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை படைத்தவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்டவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த விவாதத்திலே சொன்னதைப்போல, செங்கல்பட்டைச் சேர்ந்த திரு. சரவணன் என்கின்ற ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவன் உயர் கல்வி பெறுவதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில், தமிழக வரலாற்றில், இவ்வளவு பெரிய தொகையை ஒரு தனி மாணவனுக்கு, அதுவும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவனுக்கு வழங்கியதாக இதுவரை இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் அவ்வளவு பெரிய தொகையை மனமுவந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த மாணவன் இலண்டனிலிருந்து தொலைபேசிமூலம் அழைத்து, இதற்கெல்லாம் காரணமாக இருந்தவர்களுக்கு நன்றி என்று சொல்கிறபோது, அந்தக் குரலைக் கேட்கிறபோதே அப்படிப்பட்ட ஒரு உணர்வு ஏற்படுகிறது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மக்களுடைய நலனுக்காக பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள் என்கிறபோது அதையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*இந்தத் துறை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இருக்கிற துறை. தமிழகத்தைப் பொறுத்தவரையில், கடைசி கணக்கெடுப்பின்படி, 20.1 சதவிகிதம் இருப்பதாக நம்முடைய அரசே குறிப்பிடுகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், இந்திய மக்கள் தொகையில், சற்றேறக்குறைய 25 சதவிகிதத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் நான்கில் ஒருவராக இருக்கின்றார்கள். தமிழகத்தைப்*

பொறுத்தவரையில், அதிகாரபூர்வமான அறிவிப்பின்படி, ஐந்தில் ஒருவராக இருக்கின்றார்கள். இது கடைசி சில ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு. இப்போது இன்னும் அதிகப்படியாக வளர்ந்திருக்க வேண்டுமே தவிர, குறைந்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே, மத்திய அரசினுடைய அந்த மரபின்படி, நெறியின்படி, தமிழகத்தில் ஏற்கெனவே இருக்கின்ற 18+1, 18 சதவிகித தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 1 சதவிகித மலைவாழ் மக்களுக்கும் என்றிருக்கின்ற அந்த 18 சதவிகிதத்தை, மரபின்படி, இப்போது 20 சதவிகிதம் என நாமே உறுதிப்படுத்தியிருப்பதனால், அதனை உயர்த்திட வேண்டும். அதை நம்முடைய அமைச்சரவைக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கும் நம்முடைய துறை கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில்கூட 20.1 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். 20.1 சதவிகிதம் என்றால், மரபின்படி, விகிதாச்சாரப்படி 20 சதவிகிதம் வழங்கிட வேண்டும். ஆகவே, அந்த 18 சதவிகித இட ஒதுக்கீட்டை வருங்காலத்திலே உயர்த்துவதற்குப் பரிசீலிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 2–40

இந்தத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே, இன்று காலையிலே நீங்களே குறிப்பிட்டதைப்போல, ஐந்தில் ஒரு பங்கு மக்கள் அதுவும் உழைக்கும் மக்கள்—எப்படிப்பட்ட உழைப்பு என்றால், அது இழிதொழிலாக இருந்தாலும், மலம் அள்ளுவதாக இருந்தாலும், சாக்கடையிலே இறங்கிப் பணியாற்றுவதாக இருந்தாலும், செருப்பு தைப்பதாக இருந்தாலும், சுடுகாடு காப்பதாக இருந்தாலும், பிணம் சுட்டெரிப்பதாக இருந்தாலும், துப்புரவுப் பணியாக இருந்தாலும் அப்படிப்பட்ட பணிகளிலெல்லாம்—எது இழிதொழில் என்று கருதப்படுகிறதோ, அந்தத் தொழில்களிலெல்லாம் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் பேசுகிறோம். சட்டமன்றப் பேரவையிலே எதிர்க்கட்சி இல்லை. ஆனால், நாங்கள்தான் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி என்று சொல்கிறவர்கள், தேவையற்ற வகையிலே, வேண்டுமென்றே, பொறுப்பற்ற வகையிலே, அவை நடவடிக்கைகளிலே



பங்கேற்கக்கூட முடியாமல் வெளியேறியிருக்கிறார்கள் என்கிறபோது, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளை, ஒரு வாக்கு வங்கியாகப் பெற்று, ஓர் அசைக்க முடியாத மக்கள் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு, இன்றைக்கு போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலேகூட தாழ்த்தப்பட்டவர்கள் பதிவு செய்த வாக்குகளிலே 70 சதவீதம் வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள் என்கிறபோது, இந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறவரை, (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி உதாசீனப்படுத்துகிற போக்கிலே இருப்பீர்களேயானால், வருங்காலத்திலே நீங்கள் சட்டமன்றத்திலேகூட நுழைய முடியாது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்தத் துறை 1952–ல் சட்டமன்றங்கள் உருவான பிறகோ, சுதந்திரம் பெற்ற பிறகோ உருவான துறை அல்ல. 1921–லேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலேயே உருவான துறை. 1921–லேயே இதற்காக ஒரு I.C.S., அதிகாரியைப் போட்டு, Protector of Depressed Classes—Depressed Classes–ன் பாதுகாவலர் – Protector of Depressed Classes என்கிற பதவியை, ஒரு பிரிட்டிஷ்காரரை, ஆங்கிலேய I.C.S., அதிகாரியைப் போட்டு, 1921–லேயே தொடங்கப்பட்ட துறை. இதற்கான உரிமைகளும், கொள்கை விதிகளும் சுதந்திரம் கிடைப்பதற்கு 15 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே, 1932–லேயே உருவாக்கப்பட்டவை. இந்த மாமன்றத்திலே படங்களாக இருந்து கொண்டிருக்கிற மகாத்மா காந்தி, டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கர், மூதறிஞர் இராஜாஜி இவர்களைக் கொண்டு போடப்பட்ட பூனா ஒப்பந்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட கொள்கைகள். அந்தக் கொள்கைகளை எவ்வளவு குறுகிய காலத்திலே நிறைவேற்ற வேண்டும், ஓர் ஆட்சி அமைப்பிலே முக்கியக் கோட்பாடுகளாக அவை இருக்க வேண்டும் என்று 1932–லேயே வலியுறுத்தி, இதுநாள் வரையிலே இந்த மாமன்றத்திலே பேசப்படக்கூடிய, ஆதி திராவிடர் நலத் துறை என்கிற ஒரு தனித்துவத்தோடு விவாதிக்கக்கூடிய, திட்டங்களை நிறைவேற்றக்கூடிய துறையாக இத்துறை இருந்து கொண்டிருக்கிறது.

500 ஆண்டு காலத்திற்கு முன்பு வாழ்வு பெற்றிருந்தவர்கள், இந்த 500 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலே வாழ்விழந்து, உரிமையிழந்து, இன்றைக்கு சிதறுண்டு போய் ஒதுக்குப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களை கைதூக்கி விடுவதற்கு, அவர்களை உயர்த்துவதற்குத் தேவையான விவாதங்களை நாம் நடைமுறைப்படுத்தி செய்கிறபோது, நிச்சயமாக இதிலே எடுத்து வைக்கிற கருத்துகள், நாமெல்லாம் கவனத்தோடு, முனைப்போடு செயல்படுத்தக்கூடிய திட்டங்களாக இருக்க வேண்டும் என்பதனாலே, சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வொரு சம்பவங்களுக்குள்ளும் போகாமல், மேலெழுந்தவாரியாக நான் சொல்வதற்குக் காரணம், மேலெழுந்தவாரியான அந்தக் கோரிக்கைகள் நிறைவேறினாலே இந்த மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பும், ஒரு வழியும் கிடைத்திடும் என்கிற உணர்விலே இவற்றை நான் முன்வைக்க விரும்புகிறேன். தேசிய அளவிலே 1990–லே தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம் உருவாக்கப்பட்டது. 1990–லிருந்து இன்றைக்குவரை சற்றேறக்குறைய 24 ஆண்டுகள் என கால் நூற்றாண்டுக் காலமாக அந்த ஆணையம் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிற 29–வது மாநிலத்தையும் சேர்த்து, 12 மாநிலங்களிலே மட்டும்தான் அந்த மாநில தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம் இருக்கிறது. இதர மாநிலங்கள் அந்த ஆணையத்தை அமைப்பதற்கு முன்வரவில்லை.

ஆனால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுத்துக்கொண்டால், உத்தரப் பிரதேசத்தைப்போல, மகாராஷ்டிராவைப்போல, குறிப்பிட்ட சில மாநிலங்களைப்போல, ஐந்திலே ஒரு பங்கு மக்கள் அதிகமான மக்கள் ஆதி திராவிடர் இன மக்களாக இருக்கிற மாநிலத்திலே, முன் வரிசையிலேயே, நான்காவது அல்லது ஐந்தாவது இடத்தைப் பிடிக்கிற வகையிலே, தாழ்த்தப்பட்ட மக்கள்தொகையிலே, அதிகம் பெற்றிருக்கிற ஒரு மாநிலமாக நம்முடைய மாநிலம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, குழந்தைகள் நல ஆணையம், பெண்கள் நல ஆணையம், மனித உரிமை ஆணையம் போன்ற பல ஆணையங்களுக்கு மாநில ஆணையம் இருப்பதைப்போல, தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்திற்கும் ஒரு மாநில ஆணையம் உருவாக வேண்டும் என்கிற உணர்வை நான் இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன்.



பிற்பகல் 2–45

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே உள் ஒதுக்கீடு குறித்த கருத்தையும், அதனால் ஏற்படுகின்ற குழப்பங்களையும், அதனால் ஏற்படுகின்ற வளர்ச்சித் தடைகளையும், சில பிரிவுகளுக்கு இல்லாத அந்த ஒதுக்கீடுகளைப் பற்றியெல்லாம் அவர்கள் இங்கே பேசினார்கள். நான் தங்கள் மூலமாகவே அவருக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். தற்போது யாரிடம் அவர் கூட்டணியில் சேர்ந்து இருக்கிறாரோ அவர்தான் இதைக் கொண்டு வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு காலமாக இல்லாத, அரசியல் சட்ட நெறிகளுக்கு மாறாக, அரசியல் சட்டத்தினுடைய மரபுகளுக்கு மாறாக, தேசிய ஆணையத்தையும் கலந்தாலோசிக்காமல், மத்தியிலே இருக்கின்ற சமூக நலத் துறையையும் கலந்தாலோசிக்காமல், யாரையும் கலந்தாலோசிக்காமல், அவராகவே ஒரு கவிதையைப் பாடி, அந்தக் கவிதையையும்கூட இந்த மன்றத்திலே வந்து சொல்லமுடியாமல், வேறு ஒருவரிடம் கொடுத்து அனுப்பி, அந்தக் கவிதையைப் படிக்க வைத்து, இந்த உள் ஒதுக்கீட்டை அவர்கள் கொண்டுவந்தார்கள். சட்டப்படி இது தவறு என பலரும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்ததியர் இட ஒதுக்கீடு மசோதா இதே அவையிலே விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டுதான், பின்னர் அது சட்டமாக்கப்பட்டது. அ.தி.மு.க. உட்பட அனைத்து அரசியல் கட்சியின் உறுப்பினர்களும் அந்த விவாதத்தில் பங்கெடுத்துத்தான் அது சட்டமாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நேரமாகிவிட்டது, விரைவில் உங்கள் உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசுகின்றபோது, அ.தி.மு.க.வும் அந்த விவாதத்தின்போது இருந்தது

எனத் தெரிவித்தார். ஆனால், அ.தி.மு.க. நடுநிலை வகித்தது, அந்த விவாதத்திற்குள் போகவில்லை. அதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எந்தவிதமான அதிகார முகாந்திரமும் இல்லாமல் அதைச் செய்யக்கூடாது; மாநில அரசுக்கு அதிலே எந்தவிதமான அதிகார முகாந்திரமும் கிடையாது. ஆகவே, உள் ஒதுக்கீட்டிற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது, சட்ட ரீதியாகவே அந்தச் சட்டம் பொருந்தாது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எடுத்தேன், கவிழ்த்தேன் என்று இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே தவிர, அதற்கென ஒரு சட்டப் பாதுகாப்பு கிடையாது. அதற்கென்று ஒரு சட்ட அங்கீகாரம் கிடையாது. அதைத்தான் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இங்கே எடுத்துச் சொன்னால், அதற்கு விடியல் கிடைக்கும் என்கிற உணர்வோடு நான் சிலவற்றைச் சொல்கிறேன். T.N.P.S.C.-ல் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஓர் உறுப்பினர்கூட இல்லை என்கின்ற அந்த உணர்வை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலைமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே, A.D.G.P. ஆக இருந்த திரு. ராஜா அவர்களை T.N.P.S.C.–ல் உறுப்பினராக நியமித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். திரு. ராஜா அவர்களின் பதவிக்காலம் கடந்த மாதம்தான் முடிந்தது. அவர் ஓய்வுபெற்று ஒரு மாத காலம் கூட ஆகவில்லை. T.N.P.S.C.–ல் உறுப்பினருக்கான வயது வரம்பு 62 வயது அல்லது 5 ஆண்டுகள் பணி. அவருக்கு 62 வயது முடிந்ததனாலே, அவருக்கு வயது முதிர்வு ஏற்பட்டதன் காரணமாக, அவர் ஒரு மாதத்திற்கு முன்பு ஓய்வுபெற்றார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக அந்த இடத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரையே நியமிப்பார்கள்.

சுதந்திர இந்தியாவின், முதல் தமிழக சட்டப் பேரவைத் தலைவராக இருந்த பெரியவர் திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்குப் பிறகு, அரை நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகு, ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்து ஒருவர் சட்டமன்றப்



பேரவையின் தலைவராக வந்திருக்கிறார் என்றால், இந்தச் சாதனையைச் செய்தவர் போற்றுதலுக்குரிய நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நிலையிலும் பாரபட்சம் இல்லாமல், எந்தச் சிந்தனைக்கும் இடம் தராமல் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலராக, இரட்சகராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கோ ஒரு மூலையிலே, ஒரு கலவரம் வெடித்தால், அந்தக் கலவரம் ஒரு நொடியிலே எப்படிக் கட்டுப்படுத்தப்பட்டது என்பதை இன்றைக்கு ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் உணர்வார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக எப்படிப்பட்ட சக்தி எழுந்தாலும், அதே வேகத்திலே அது அழிக்கப்படும் என்கிற வகையிலே, இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் அரணாக, பாதுகாவலராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–50

T.N.P.S.C.–பற்றிப் பேசுகின்றபோது, நான் இங்கே ஒரு கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். Group-I முதல் நிலைத் தேர்வில், ஏற்கெனவே இருந்த பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்காக, கடந்த கால தி.மு.க. ஆட்சியில் ஒரு சட்டம் போடப்பட்டது. ஆனால், அதை நடைமுறைப்படுத்தவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சிறப்புத் தேர்வுகள் நடத்தப்பட்டு, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 23 பேர் முதல் நிலைப் பணியாளர்களாக, துணை ஆட்சியர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி பெற்று வருகின்றனர். T.N.P.S.C–ன் ஆணையின்படி, அவர்களுடைய seniority, அதாவது, மூப்புநிலை, முதலில் வைக்கப்பட வேண்டும். அவர்களுடைய seniority முதலில் வைக்கப்பட வேண்டும் என்பது T.N.P.S.C–யினுடைய ஆணை. ஆனால், பின்னடைவுப் பணியிடங்களை நிரப்புவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களின் seniority, பின்னால் வந்துவிடுகிற ஒரு சூழல் இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களுக்கு அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

துப்புரவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் எவ்வளவு மோசமான சூழ்நிலையிலும், உறுதியோடு துப்புரவுப் பணியில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாமெல்லாம் அறிவோம். செய்தித்தாளைப் படித்துவிட்டு மனித மலத்தை மனிதனே சுமக்கிற அந்தத் தொழில் இனி இருந்துவிடக் கூடாது என்று இந்தச் சட்டமன்றப் பேரவையில்கூட ஒரு தனித் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கொண்டு வந்தார்கள். அதற்காக ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்து நாம் இங்கே நிறைவேற்றியிருக்கிறோம். இனிமேல், துப்புரவுத் தொழிலில், ஒப்பந்த அடிப்படையில், தொழிலாளர்களை நியமிக்கக் கூடாது, அவர்களை நிரந்தப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும். ஏன், அந்தப் பணிக்கு அரசு அங்கீகாரத்தைக் கொடுக்கக் கூடாது? அந்தப் பணிக்கு அரசு அங்கீகாரம் என்ற பெருமையையும், சிறப்பையும் கூடவா நாம் தந்திட முடியாது? எங்கெல்லாம் 50–க்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளிகள், அரசு அலுவலகங்களிலோ, அரசு சார்ந்த அலுவலகங்களிலோ பணி நியமனம் செய்யப்படுகிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர் நல விதியில் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, அவர்கள்தான் முதன்முதலாக சென்னை மாநகராட்சிக்காக மட்டும் இதில் ஒரு விதிவிலக்கைக் கொண்டு வந்தார்கள். அந்த விதியை மாற்றி, "சென்னை மாநகராட்சி நீங்கலாக" என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டம் இன்றைக்கு பரவலாகிவிட்டது. ஆகவே, அந்தச் சட்டத் திருத்தத்தை மாற்ற வேண்டும். எங்கெல்லாம் 50–க்கும் மேற்பட்டவர்கள் துப்புரவுத் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகிறார்களோ அவர்கள் ஒப்பந்த அடிப்படையிலே இல்லாமல், நிரந்தர ஊழியர்களாக, அரசு ஊழியர்கள் என்கின்ற அங்கீகாரத்தோடு நியமிக்கப்பட வேண்டும் என்கின்ற திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு குறைந்தபட்ச தகுதியையும், உரிமையையுமாவது துப்புரவுப் பணியிலே ஈடுபடுகின்றவர்களுக்கு வழங்கிட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த அவையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றி, மிகப் பெரிய சமுதாயப் புரட்சிக்கான மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள். கிராமங்களில் பரம்பரை மணியக்காரர்,



பரம்பரை கர்ணம் என்று இருந்ததை, ஓர் அவசரச் சட்டம் கொண்டு வந்து ஒழித்து, அதற்குத் தேர்வுமுறையைக் கொண்டு வந்து, கிராமப்புற சமுதாய அமைப்பில் ஒரு மாபெரும் மாறுதலை, புரட்சியை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கினார்கள். அப்போதுதான், தலையாரி, தோட்டி என்றிருந்த அந்தப் பெயர்களையெல்லாம் "கடைநிலை ஊழியர்கள்" என்று பெயர் மாற்றம் செய்யும் ஆணையை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வழியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைக் காப்பதில், "தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்" என்பதைப்போல் இன்றைக்கு பல்வேறு நலத் திட்டங்களை அந்த மக்களுக்காக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகள் இருக்கிற பகுதிகளில் புது Revenue Village உருவாக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் முன்வைக்க விரும்புகின்றேன். ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மக்கள் குடியிருக்கிற பகுதிகளில் புது Revenue Village உருவாக்குவோமேயானால், தமிழகத்தில் ஏற்படும் சாதிய மோதல்களோ, கிராமப்புறங்களிலே நடக்கின்ற சாதிய சச்சரவுகளோ, சண்டைகளோ பெருமளவிற்குத் தவிர்க்கப்படும்; ஒரு புதிய சமுதாயக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அது பயன்படும்; வளர்ந்து வரும் மாநிலமாகிய நம்முடைய மாநிலத்திற்கு தேசிய அளவில் கிடைக்கிற பல திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் அதிகரிக்கும். எனவே, இதனை அடிப்படையாகக் கொண்டு, ஆயிரம் ஆதி திராவிடக் குடியிருப்புகள் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கு, அந்த மக்களுக்குத் தனியாகவே ஒரு Revenue Village உருவாக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கருத்தை அன்புகூர்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள்தொகையின் அடிப்படையில், பரப்பளவின் அடிப்படையில், வருவாய்க் கிராமங்களின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இருக்கிற மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள், குறு வட்டங்கள், வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றைப் பிரிப்பதற்கு விதிமுறைகளை அறிவித்து இருக்கின்றார்கள். அந்தப் பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்மட்டக் குழுவை அமைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, தற்போது ஜாதி அடிப்படையிலே வருவாய்க் கிராமங்களைப் பிரிப்பது என்பதை பரிசீலிக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 2—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், உரையை முடியுங்கள். நேரம் 2—55 ஆகிவிட்டது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி அடிப்படையிலே கேட்கவில்லை, மக்கள்தொகை அடிப்படையிலே கேட்கிறேன். நாம் அதை சாதிய உணர்வோடு பார்க்க வேண்டிய அவசியமில்லை. மக்கள்தொகை அடிப்படையிலேயே 1,000 குடியிருப்புகள் இருக்கிற ஒரு கிராமம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய அடிப்படையிலே வருவாய்க் கிராமங்களைப் பிரிப்பது என்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கே எதிராக அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கையை வருங்காலத்தில் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதிப் பெயர்களை எல்லாம் நாம் சட்டபூர்வமாகவே ஒழித்துவிட்டோம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, இதே மாமன்றத்திலே அதைக் கொண்டுவந்து, நிறைவேற்றினார்கள். எப்படிப்பட்ட நிலையிலும் தெருக்களுக்கோ, கிராமங்களுக்கோ, அரசாங்கம் வைக்கிற எந்தப் பெயரானாலும், எதிலுமே சாதிப் பெயர் இருந்துவிடக் கூடாது என்று நாம் அதற்குத் தடை செய்தோம். இன்னும்கூட எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது, இதே அவையிலே, அன்றைக்கு எதிர்க்கட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள், என்னுடைய தெருவினுடைய பெயர் 'குட்டி மேஸ்திரி தெரு'. அதில் மேஸ்திரி என்பதை எடுத்துவிட்டீர்கள். குட்டித் தெரு, குட்டித் தெரு என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆக, அவ்வளவு கடுமையாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே சாதிப் பெயர்களை, சட்ட ரீதியாக இனி பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. எந்தக் கல்வி சாதி ஒழிப்புக்குப் பயன்படும், எந்த கல்வி சாதி ஒழிப்பிற்குக் காரணமாக இருக்கும், எந்தக் கல்வி சாதி ஒழிப்பிற்குத் துணை நிற்கும் என்றெல்லாம் நாம் கருதுகிறோமோ, அந்தக் கல்வி நிலையங்களினுடைய பெயர்களே சாதிப் பெயரால் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட சாதியை அடைமொழியாக வைத்துக்கொண்டு அது இயங்குகிறது என்கிறபோது, நம்முடைய நோக்கத்திற்கு, நம்முடைய கொள்கைக்கு, நம்முடைய வருங்காலத்திற்கு, ஏற்கெனவே இருக்கிற நம்முடைய சட்டத்திற்கு அது மாறாக, எதிராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அவற்றையெல்லாம் நாம் கடுமையாகப் பரிசீலித்து, அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு நாம் ஒரு தாக்கீது அனுப்பி, பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்தை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

வன்கொடுமை தடுப்புச் சட்டம். இன்றைக்கு அந்தச் சட்டத்தை அகற்றிவிடலாமா என்று சில சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த

விவாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. அதை நாம் சட்டமன்றப் பேரவையிலே விவாதிக்க முடியாது. வன்கொடுமை தடுப்புச் சட்டம், மாநில அரசோ அல்லது உயர் நீதிமன்றமோ அல்லது வேறு எந்த மன்றமோ விவாதிக்கக்கூடிய ஒரு பொருளாக இருக்கிறது என்பது பிரச்சினைக்குரிய கருத்து. அது பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்படக்கூடிய ஒரு சட்டம். அது அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படைச் சட்டங்களிலேயே வழங்கப்பட்டிருக்கிற ஓர் உரிமை. 17-வது பிரிவை முழுக்க, முழுக்க மாற்ற முடியாது. அப்படி அதை மாற்றுவதானால் நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பங்கும், இருக்கிற 29 மாநிலங்களில், 15 மாநிலங்களுக்கும் மேற்பட்டவையின் ஒப்புதலும் பெற்று, மக்கள் கருத்தாக்கத்தோடு நிறைவேற்ற வேண்டிய ஒரு சட்டம். இந்தச் சட்டத்தை அகற்றுவதற்கு, இங்கே வேண்டுமென்றே சிலர் சமூகச் சச்சரவை, சண்டையை உருவாக்க வேண்டுமென்று, இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறபொழுது, நம்முடைய அரசும் அந்தத் தாக்கீதிற்கு மிகக் கடுமையான ஒரு பதில் தாக்குதலைச் சட்டமன்றத்திலே பதிவு செய்ய வேண்டும். உயர் நீதிமன்றப் பதிவுகளிலும், நம்முடைய மாநில அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிற அந்த நோட்டீசுக்கு மிகக் கடுமையான பதிலை நாம் பதிவு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு ஒரு மாணவனுக்கு மட்டுமல்ல, மொத்த மதிப்பீட்டிலே, மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப, Special Component Plan–என்று சொல்லப்படுகிற சிறப்பு உட்கூறுத் திட்டம் அல்லது ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு ரூ.7,000 கோடிக்கும் மேலே நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்து ஆதி திராவிட மக்களையும் கல்வியிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் உயர்த்திப் பிடிப்பதற்கு பாபாசாகிப் அம்பேத்கருடைய வழியிலே, அந்த எண்ணங்களை, இலட்சியங்களை (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றுகின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் இந்தத் திட்டங்களுக்கு, ஒரு கோடியே 50 இலட்சம் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் என்றைக்கும் துணை நிற்பார்கள்; நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்கிற அந்த உணர்வோடு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 3–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, ஆதி திராவிடர்களுக்கு வாய்ப்புகள் குறைவாகக் கொடுக்கப்படுகின்றன என்று தெரிவித்தார். இந்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், மாநிலத் தகவல் ஆணையத்திலே, ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த டாக்டர் சரோஜா மற்றும் திரு. தமிழ்ச்செல்வன் ஆகியோரை உறுப்பினர்களாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நியமனம் செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழர்களின் காவல் தெய்வம்! இந்தியர்களின் இதய தெய்வம்! உலகத் தமிழர்களின் வழிகாட்டி! தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்! வாக்களித்த மக்களுக்கு வாரி வழங்கும் அட்சய பாத்திரம்! மும்முனைப் போட்டியில் ஒருமுனையாய் வெற்றி கண்டு, கூட்டு வைத்துப் போட்டியிட்டவர்களை, ஓட்டு என்னும் வேட்டு வைத்து, தகர்த்தெறிந்த தங்கத் தலைவியே! தங்கத் தாரகையே, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன் தாயே!

தாங்கள் தொட்டது துலங்கும்; பொற்கரம் பட்டது துளிர்க்கும். இதற்குத் தமிழ் மக்களே சாட்சி அம்மா! காவேரியின் உரிமை காத்து, தமிழர்களின் தாகம் போக்கி, தண்ணீருக்குக் கண்ணீர் சிந்திய மக்களின் கண்ணீரைத் துடைத்த தர்மத் தாயே! அன்னையருக்கு இலவச அரிசி! ஆலயங்களில் அன்னதானம்! ஆரோக்கியத்திற்கு அம்மாவின் அயோடின் உப்பு! உலகம் போற்றும்

அம்மா உணவகம் வழங்கிய அன்னபூரணியே! 'அம்மா' என்ற மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்; அது முடிந்த பின்னாலும், எங்கள் குடும்பத்தில் அம்மாவின் பேச்சு இருக்கும் அம்மா! எளியவனுக்கும் எளியவனாக ஏழைக் குடும்பத்தில் பிறந்து, தொண்டனுக்கும் தொண்டனாக, ஊருக்கு மட்டுமே தெரிந்த என்னை அமைச்சராக்கி, பாரம்பரியம் மிக்க இந்தப் பேரவையில் நான்காவது முறையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்ற வாய்ப்பளித்த, நான் என்றும் வணங்கும் எங்கள் குல தெய்வமே! அம்மா, நானும், எனது குடும்பமும், என் சந்ததிகளும், இப்பிறவியில் மட்டுமல்ல; ஈரேழு பிறவிகளிலும் நன்றிக் கடன்பட்டவர்களாய் தங்கள் பொன்னடிகளில் இருப்போம் அம்மா என்று பணிந்து வணங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையைத் தொடங்குகிறேன்.

தாழ்த்தப்பட்ட இன மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரச் சுதந்திரத்தை அடைய வழிவகை செய்வதோடு, அவர்களுடைய சமூக உரிமைகளும், நலன்களும் என்றென்றும் பாதுகாக்கப்படும்வண்ணம், இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் கூறியவண்ணம், திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வறுமையை அறவே நீக்கி, வளம் பெறச் செய்து தமிழ்நாட்டை பல வகைகளிலும் முன்னேற்றம் அடையச் செய்திடவும், எட்டவேண்டிய இலக்குகளை நிர்ணயித்து, திட்டங்களை வரையறுத்து, சிறப்பாகச் செயல்பட நிருவாகத்தை முடுக்கிவிட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் போர் வேகப் பணிகளால், தமிழ்நாடு அதிவேக வளர்ச்சி அடையப் போவது உறுதியான ஒன்றாகும் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் ஆதி திராவிட மக்கள் 20.01 சதவிகிதமும், பழங்குடியின மக்கள் 1.10 சதவிகிதமும் ஆக மொத்தம் 21.11 சதவிகித மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, அவர்களுக்கு நிலையான முன்னேற்றத்தை அளித்திடுவது என்பதே



மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முதன்மையான நோக்கமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில்தான், பல்வேறு துறைகளின் பயன்பாட்டினை உள்ளடக்கிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் புதுப் பொலிவு பெற்றுள்ளது.

Service to People; Service to God – அதாவது, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற பொன்மொழிக்கேற்ப, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தினை பாரதமே போற்றிடும் வண்ணம் சிறப்பாக வடிவமைத்து, தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் துணைத் திட்டம் என்பது 17 செயலாக்கத் துறைகளை உள்ளடக்கிய 30 தலைமைத் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களில், ஆதி திராவிட மக்களுக்கென உள்ள பங்கினைத் தொகுத்து, அம்மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வதாகும். கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ், ரூ.19,496.46 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மூன்று ஆண்டு கால பொற்கால ஆட்சியில் ரூ.18,158.10 கோடி நிதி ஒதுக்கி சாதனை படைத்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். மேலும், இந்தத் துணைத் திட்டத்திற்கு 2014–2015 ஆம் ஆண்டுக்கு ரூ.7,603 கோடி நிதியினை உயர்த்தி வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 3–05

இதேபோன்று, பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு கடந்த மைனாரிட்டி தி.மு.க.–வின் ஐந்தாண்டு கால ஆட்சியில் ரூ.1,591.79 கோடி நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மூன்றாண்டு கால பொற்கால ஆட்சியில் ரூ.1,085.09 கோடி நிதி ஒதுக்கி சாதனை படைத்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2014–2015 ஆம் நிதியாண்டிற்கு இத்துணைத் திட்டத்திற்கு ரூ.435.55 கோடி நிதியினை உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் என்பதே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் மக்கள், தமிழக மக்கள் நலனே என் நலன் என்ற இலக்கணத்திற்கு வடிவம் கொடுத்த கருணைத் தாயே, தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தினை சிறப்பாகச் செயல்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் ஏற்றம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். முந்தைய மைனாரிட்டி தி.மு.க.—வின் ஐந்தாண்டு கால ஆட்சியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.3,376.30 கோடி ஆகும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது அரசின் மூன்றாண்டு கால ஆட்சியில் இத்துறைக்கென ரூ.3,483.31 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தத் துறைக்கு 2014—2015 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.1,998.36 கோடி நிதியினை அள்ளிக் கொடுத்த அட்சய பாத்திரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் மொத்த நிதி ஒதுக்கீட்டில் சுமார் 80% நிதி கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக செலவிடப்படுகிறது. இதற்காக, இவ்வின மக்கள் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன் தாயே!

“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து.”

அதாவது, ஒருவர் ஒரு பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறவிகளிலும் சென்று உதவிடும். ‘கல்வி கண் போன்றது’, ‘காலத்தால் அழியாதது கல்வி’ என்ற கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அடித்தள மக்கள் கல்வி அறிவு பெற்றிட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி வளர்ச்சிக்காக அதிகப்படியான நிதியை வாரி வழங்கியுள்ளார்கள். பொருளாதார வசதியற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி அளித்தால் மட்டுமே இவ்வின மக்கள் மாற்றமும், ஏற்றமும் பெறுவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா



அவர்கள், தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக சுய நிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச மற்றும் கட்டண இருக்கைகள் அனுமதிக்கப்பட்ட ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவியருக்கு, சுய நிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு நிர்ணயித்த கற்பிப்புக் கட்டணம் உட்பட கட்டாயக் கல்விக் கட்டணம் அனைத்தையும் வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கால அளவினை கி.மு., கி.பி., என்று குறிப்பிடுவதுபோல், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மக்களின் கல்வி நிலையை ‘அம்மாவின் பொற்கால ஆட்சிக்கு முன்’, ‘அம்மாவின் பொற்கால ஆட்சிக்குப் பின்’ என்று குறிப்பிடும் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இவ்வின மக்கள் உயர் கல்வியில் அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளனர் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், யாருமே எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு கல்விச் சலுகையை வாரி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் ஏழேழு பிறவிகளிலும் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் அம்மா என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் பெருமையோடு பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையால் செயல்படுத்தப்படும் முத்தான திட்டங்களில் முதன்மையானது Post Matric கல்வி உதவித் தொகைத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்குமேல் கல்வி பயிலும் தகுதியுடைய ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்கள் பயனடைகின்றனர். கடந்த மைனாரிட்டி தி.மு.க.—வின் ஐந்தாண்டு கால ஆட்சியில் இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.819.10 கோடியாகும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மூன்றாண்டு கால ஆட்சியில் இத்திட்டத்திற்கு ரூ.1,636.04 கோடி நிதி ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) கல்விச் சலுகை வழங்கப்பட்டு, ஆதி திராவிடர், பழங்குடியினர்

மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரியில் பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்களின் எண்ணிக்கை 17,689 ஆகும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இந்தத் திட்டத்தின்கீழ் பயின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை 71,259 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2013–2014 ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரியில் பயின்ற 30,319 மாணாக்கர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, பொறியியல் கல்லூரி சேர்க்கையில் இந்த மாணாக்கர்களின் பங்கு 58 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பெருமையோடுபதிவு செய்கிறேன்.

பிற்பகல் 3–10

இதேபோன்று மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளில் 2010–2011 ஆம் ஆண்டில் பயின்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கர்கள் 6,019 மட்டுமேயாகும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மூன்றாண்டு கால ஆட்சிக்காலத்தில் இத்திட்டத்தின்கீழ் பயின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை 37,146 ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2013–2014 ஆம் ஆண்டில் 15,669 பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்பினைப் படிக்கும் மாணாக்கர்களின் பங்கு 260 சதவிகிதமாக உயர்ந்துள்ளது என்பதை இம்மான்றத்தில் மிக்க மகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் மாணவ, மாணவியர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், மாணாக்கர்கள் தாங்கள் விரும்பும் சிறந்த கல்லூரியில் கல்வி பயில ஓர் அரிய வாய்ப்பு ஏற்பட்டு, அம்மாணாக்கர்களுக்கு சமுதாயத்தில், பிற மாணவர்களுக்கு சமமான மதிப்பும் கிடைப்பதுடன், நல்ல ஊதியத்துடன் கல்லூரி வளாக நேர்காணலில் வேலைவாய்ப்பும் கிடைக்க வழிவகை ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் இந்தக் கல்விப் புரட்சியினால் அடித்தட்டு மக்களான



ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிட மக்களின் சமூகப் பொருளாதாரம் உயர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம், 2023–க்கு மிகுந்த பங்களிக்கும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டணியில் யார் சேர்ந்தாலும் பரவாயில்லை, பதவிதான் வேண்டுமென்று ஏமாற்ற நினைத்தவருக்கு மக்கள் கொடுத்தார்கள் மரண அடி. எங்களால்தான் வெற்றி பெற்றீர்கள் என்று இறுமாப்பு பேசியவர்கள் எல்லாம், எழுந்திருக்க முடியாமல், இடுப்பொடிந்து போய்க் கிடக்கிறார்கள். அன்று நாக்கை மடித்துப் பேசியவர்கள், இன்று அம்மாவின் சாதனையைப் பார்த்து, வாலைச் சுருட்டிக்கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு போதையும் தெளியாது, நல்ல பாதையும் தெரியாது.

[தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் (திரு. க. பாண்டியராஜன் மற்றும் திருமதி ஆர். சாந்தி தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின்மீது, அளவில்லாப் பற்றும், பாசமும் கொண்டவர். இதை ஏன் கூறுகிறேன் என்றால், தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட நலத் திட்டங்களான, பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம், கல்வி உதவித் தொகை, பள்ளி மாணாக்கருக்கு விலையில்லா சீருடைகள், விலையில்லா மிதிவண்டிகள், நீராவிக் கொதிகலன்கள், மாணவிகளுக்கு சுகாதாரக் குட்டை தகளி, மகளிர் நிலம் வாங்கும் திட்டம் போன்ற அனைத்துத் திட்டங்களுமே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு முதன்முதலில் வழங்கப்பட்டு, அதன் பின்னர் பிற துறைகளுக்கு விரிவுபடுத்தப்படுகிறது. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முதற்கருணைப் பார்வை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கே கிடைக்கிறது என்பதை இம்மான்றத்தில் நன்றியுடன் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், பாராளுமன்றத்தில் பேசும்பொழுது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில், தமிழகத்தில் நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகப் பாராட்டினார்கள். எடுத்துக்காட்டாக, தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மழை நீர் சேகரிப்புத் திட்டம், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டிய முன்னோடித் திட்டம் என்று புகழ்ந்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையில் ஒரு பாதியாக இருக்கும் பெண்களை அடிமையாக நடத்தும் எந்த ஒரு நாடும் உரிமை பெற்றதில்லை. எனவே, பெண்களுக்கு சம உரிமையும், மதிப்பும் கொடுக்கவேண்டுமென்றும் இதற்கு பெண் கல்வியே முக்கியமென்றும் மகாகவி பாரதியார் கூறியுள்ளார்.

“பட்டங்க ளாள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறி வினிலாணுக் கிங்கேபெண்
இளைப்பில் லைகாண் என்று கும்மியடி.”

என்பதற்கேற்ப, தமிழ்நாட்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்த்துவ மதம் மாறிய ஆதி திராவிட பெண்களின் கல்வி சிறப்பாக ஊக்குவிக்கப்படுகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள் பள்ளியில் சேர்வதை ஊக்குவிக்கவும், சேர்ந்த பின்பு இடைநிற்றலின்றி, தொடர்ந்து கல்வி பயிலவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் 1994–1995 ஆம் ஆண்டில், கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களில் மாணவிகளுக்காக ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இத்திட்டத்தினை சரிவர செயல்படுத்தாமல் வருடத்திற்கு 90,000 மாணவிகளுக்கு ரூ.8 கோடியினை மட்டுமே கல்வி உதவித் தொகையாக வழங்கி வந்தது. ஆனால், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்



இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகையினை 7 மற்றும் 8 ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தினார்கள். தற்போது, இத்திட்டத்தின்மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் மட்டும் 4,83,473 மாணவிகளுக்கு ரூ.42.75 கோடி உதவித் தொகை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினை 2014–2015 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.45.11 கோடி நிதியொதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ஓர் ஆண் மகன் கல்வி கற்றால், அது அவனுக்கு மட்டுமே நன்மை பயக்கும். ஆனால், குடும்பத்தில் உள்ள ஒரு பெண் கல்வி கற்றால் முழுக் குடும்பமும் நன்மை அடையும் என்று தேசப் பிதா காந்தியடிகள் கூறியதற்கேற்ப, தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைசசர் அம்மா அவர்கள் இவ்வினப் பெண்களுக்கு கல்வி அறிவு முழுமையாகக் கிடைத்திடவேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு செயல்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,096 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் 1,27,966 மாணவ, மாணவியரும், 301 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 31,594 மாணவ, மாணவியர்களும் மொத்தம் 1,397 பள்ளிகளில் 1,59,560 மாணாக்கர் பயின்று வருகிறார்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளில் மொத்தம் 11,412 ஆசிரியர் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் தற்போது 10,004 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளின் நலனுக்காக துரித முடிவெடுத்து, காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை எல்லாம் உடனுக்குடன் நிரப்பிட உத்தரவிட்டதன்மூலம் தற்போது 1,408 ஆசிரியர் பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. அதனையும் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் விரைவில் நிரப்பிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

2013–2014 ஆம் கல்வி ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 10 ஆம் வகுப்பில் 82 சதவிகிதமும், 12 ஆம் வகுப்பில் 82 சதவிகிதமும் ஆகும். வருங்காலங்களில் 100 சதவிகிதம் தேர்ச்சியினை அடைவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய கல்வி ஊக்குவிப்புத் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தியதன் விளைவாக 1991 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு முறையே 46.74 சதவிகிதமாகவும், 27.89 சதவிகிதமாகவும் இருந்தது. படிப்படியாக உயர்ந்து 2011 ஆம் ஆண்டில் முறையே 73.26 சதவிகிதமாகவும், 54.34 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும், தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தர வேண்டும், மேலும் கல்வி பயில அவர்களை ஊக்குவிக்க வேண்டும், கல்வியின்மேல் ஆர்வத்தினை அதிகரிக்கச் செய்ய வேண்டும், இடைநிற்றலைத் தவிர்க்க வேண்டும், இதனைத் தூண்டுவதற்கு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை முதற்பாடமாக எடுத்து முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியருக்கும், ஒவ்வொரு பாடத்திலும் மாநில அளவில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பரிசுகள் தோற்றுவிக்கப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரத்தால் வழங்கப்படுகின்றது. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் விலையில்லா நான்கு இணைச் சீருடைகள், பாட நூல்கள், சிறப்பு வழிகாட்டிகள், குறிப்பேடுகள், புத்தகப் பைகள், காலணிகள், வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடப் புத்தகங்கள் மற்றும் கணித உபகரணப் பெட்டிகள் என 14 வகை உதவிகள் வழங்கப்படுகின்றன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசியால் குழந்தை அழுவதற்கு முன்பே குறிப்பறிந்து அன்னம் தரும் தாயினைப்போல, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் குறைகளை அறிந்து, அன்புள்ளத்தோடும், கருணையோடும் காத்து வருபவர் எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மட்டுமே என்பதை நாடே நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,304 ஆதி திராவிடர் நல விடுதிகளில் 97 ஆயிரத்து 539 மாணவ, மாணவிகளும், 42 பழங்குடியினர் நல விடுதிகளில் 2,782 மாணவ, மாணவிகளும், 301 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் 31,594 மாணவ, மாணவிகளும், தொண்டு நிறுவனங்கள் நடத்தும் 36 விடுதிகளில் 5,754 மாணவ, மாணவியரும் மொத்தம் 1,683 விடுதிகளில் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 669 மாணவ, மாணவிகள் தங்கி கல்வி பயின்று வருகிறார்கள்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் உள்ள விடுதிகளில், தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கான உணவுக் கட்டணத்தினை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நபர் ஒருவருக்கு ரூபாய் 650/– லிருந்து ரூபாய் 755/– ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூபாய் 750/–லிருந்து 875/– ஆகவும் உயர்த்தி வழங்கியதால், விடுதி மாணாக்கருக்கு, நல்ல தரமான, சுவையான உணவு வழங்கப்படுகிறது. மேலும், சோப்பு மற்றும் எண்ணெய் வாங்குவதற்காக, பள்ளி விடுதி மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ரூ.50/–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவி ஒருவருக்கு மாதம் ரூ.75/–ம் அம்மாணாக்கர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

மேலும், 126 கல்லூரி விடுதிகளுக்கு, இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள், 582 மாணவியர் விடுதிகளுக்கு, சுகாதாரக் குட்டை தகளி, அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்புக் கருவி, அனைத்து விடுதிகளுக்கும் ஈர மாவு அரைக்கும் இயந்திரங்கள், 100 மாணவிகளுக்கு மேல் தங்கியிருக்கும் 79 ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு மாணவியர்கள் தங்கள் துணிகளைத் துவைக்கும் நேரத்தை மிச்சப்படுத்தி கல்வியில் முழுக்கவனத்தைச் செலுத்திட சலவை இயந்திரம், 150 மாணவர்களுக்கு மேல் தங்கியுள்ள 70 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு சுகாதாரமான முறையில் சமைத்திட நீராவி

கொதிகலன்கள், அனைத்து விடுதிகளுக்கும் மின்னனு எடைக் கருவிகள், அனைத்து விடுதிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், அனைத்து விடுதிகளுக்கும் நூலக வசதி, பள்ளி விடுதி மாணவ, மாணவிகளுக்கு பாய் மற்றும் போர்வை போன்றவை வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகனே போனாலும் பரவாயில்லை, மானம் போனாலும் பரவாயில்லை, மகுடந்தான் வேண்டுமென்று எண்ணும், காசுக்குக் கட்டி அழுத கபட வித்தைக்காரனே, கலகக்காரனே, வீட்டிலும் நிம்மதி இல்லை, பாட்டிலும் நிம்மதி இல்லை, எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி என்ற பிதற்றலா, நிம்மதி வேண்டுமா உனக்கு, அமர்ந்த நிலையிலேயே பார், எங்களின் அருந்தவப் புதல்வியாம், ஏழைகளின் காவல் தெய்வமாம் அம்மா அவர்களின் நல்லாட்சியினைப் பார், (மேசையைத் தட்டும் ஒலி) பார் போற்றும் ஆட்சியினைப் பார், நிம்மதி கிடைக்கும். நல்லவரைப் பார்த்தால் உனக்கு மோட்சம் கிட்டும். பார்த்துக் கொண்டே இரு, உன் உயிருள்ள வரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் முந்தைய அரசால் கண்டுகொள்ளப்படாமல், சேட்பாரற்றுப் பராமரிப்பின்றி பழுதடைந்த விடுதிகள் எல்லாம் தற்போது புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவுடனும், சுகாதாரத்துடனும் புதிய விடுதிகள்போல் காட்சியளிக்கின்றன என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் பதிவுசெய்கிறேன். கடந்த மைனாரிட்டி தி.மு.கவின் ஐந்தாண்டுகாலத்தில் 133 விடுதிகள் கட்டிட ரூபாய் 70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, ஒரு விடுதியினைக்கூட கட்டி முடித்திடாமல் ஏனோ விட்டுவிட்டுச் சென்று விட்டனர். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதி திராவிட மாணாக்கர்கள் தங்கி கல்வி பயிலும் சூழல் சிறப்பாக அமைந்திட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தில் நிருவாகத் திறமையால் முந்தைய அரசால் கட்டாமல் விடப்பட்ட இடத்தில், தற்போது 86 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தற்போதைய முத்தான மூன்றாண்டு ஆட்சியில், ரூ.121.66 கோடி நிதி ஒதுக்கீட்டில், 147 புதிய விடுதிக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அவற்றுள் 31 விடுதிகள் கட்டி



முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 169 (53 + 116) விடுதிகள் கட்டும் பணிகள் பல்வேறு நிலையிலுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவரின் சமூக முன்னேற்றம் என்பது தனி நபரின் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. ஏழை அடித்தட்டு மக்களான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்ட இடம் என்பது ஒரு கனவாக இருந்த நிலையை மாற்றி, அம்மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, விதிகளுக்குட்பட்டு, தனி நபர் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 2011–2012 முதல் 2013–2014 வரை 7,099 நபர்களுக்கும், வருவாய்த் துறைமூலம் 1,18,573 நபர்களுக்கும் இதுவரை எந்த அரசாலும் வழங்கப்படாத அளவிற்கு வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சாதிக் கொடுமைகள் வேண்டாம்–அன்பு
தன்னில் செலுத்திடும் வையம்.”

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதி. எனவே, அவர் விரும்பிய சாதி மதபேதமற்ற சமுதாயத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழகத்தில் அமைத்துள்ளார்கள். தமிழகத்தை சாதிய இருளில் மூழ்கச் செய்த கயவர்கள், தனது குடும்பத்தில் எல்லாச் சாதியினரும் உள்ளதாக, சாதி மத பேதமில்லை எனக் கூறிக் கொண்டு, சாதிக் கூட்டணி அமைத்த சந்தர்ப்பவாதிதான். முதற்பிள்ளை, கைகளில் அடிக்க, இரண்டாம் பிள்ளை, பதவியைப் பிடிக்க, மற்ற பிள்ளைகளோ அவரை முற்றுகையிட, வீட்டிற்குள்ளேயே நிம்மதி இல்லை, எதிர்காலம் இனி இல்லை. தனக்குத் தானே பிதற்றும் பித்தனின் பகல் கனவு, இனி ஏட்டிலும் இல்லை, அந்தோ பரிதாபம், அந்தோ பரிதாபம்.

சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதன்மூலம், சமுதாய நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி காண முடியும் என்ற மாண்புமிகு

முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் அனைத்துப் பிரிவினரையும், சுதந்திரமாகவும் சமத்துவமாகவும், சகோதரத்துவமாகவும் வாழ்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, இங்கு சுதந்திர மணம் கமழும் தென்றலை வீசச் செய்து கொண்டிருக்கிறார், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். மேலும், தருமபுரி மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு இராஜதந்திர முறையில் தீர்வுகண்டதை இந்தியாவே வியப்புடன் பார்த்ததென்பதை மிகப் பெருமையுடன் மாமன்றத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றியின் விலாசம் எங்கள் அம்மா, வீரத்தின் சுவாசம் எங்கள் அம்மா, மக்களின் ஒளிவிளக்கு எங்கள் அம்மா, சாதனையின் தொகுப்பே எங்கள் அம்மா, சரித்திர மறுபதிப்பே எங்கள் அம்மா, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவியே எங்கள் அம்மா, திராவிட வரலாற்றின் நிரந்தர அத்தியாயமே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கும் கைகள் விலகிடும் முன்பே வரம் தருபவரே எங்கள் அம்மா. பழங்காலத்து மலைப் பகுதியை ஆண்ட கடையேழு வள்ளல்களான பாரி, ஓரி, காரி, ஆய், அதிகன், பேகன், நள்ளி போன்றோர் அங்குள்ள மலைப் பகுதிகளில் வசிப்போர் நலனையே தன்னலமாகக் கொண்டு ஆட்சி நடத்தினர். அவர்தம் செயல்பாட்டினாலும், வள்ளல்தன்மையினாலும்தான் அவர்களை கடையேழு வள்ளல்கள் என மக்கள் அழைத்தனர். தற்போது பழங்குடியினர் நலனை முன்னேற்றுவதில் தொலைநோக்குச் சிந்தனை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல வளர்ச்சித் திட்டத்திற்காக முதன்முதலாக ஒவ்வோராண்டும், ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் 8–வது வள்ளலாகக் காட்சியளிக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

2012–2013 இல் வழங்கப்பட்ட நிதியில் கருமந்துறை, கொல்லிமலை, ஜமுனாமரத்தூர், ஆனைக்கட்டி மற்றும் கூடலூர் ஆகிய 5 இடங்களில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தொடங்கி செயல்பட்டு வருகின்றன. 2013–2014 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலை பகுதி, வேலூர் மாவட்டத்தில் இணைப்புச் சாலைகள், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை,



இங்குள்ள 600 பழங்குடியினர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், கோழிக் குஞ்சு பொறிப்பக மையம், மண்வளப் பாதுகாப்பு, தனிநபர் வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சித்தேரி மலையில் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கான மாதிரி விடுதிகள் கட்டுவதற்கு ரூ.434.00 இலட்சம், சேலம் மாவட்டம் பொலப்பாடி, வாளுத்து மற்றும் தாளு ஆகிய பழங்குடியினர் குடியிருப்புகளில் மின் வசதி ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த, 2014–2015 ஆம் ஆண்டிற்கு ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 36 வகையான பழங்குடியினரில், 6 வகை பழங்குடியினரான, தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயக்கன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களின் மேம்பாட்டிற்காக 2013–2014 ஆம் ஆண்டில் ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பழங்குடியினருக்கான பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் அமைத்துத் தருதல் போன்ற நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மலைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இடையூறு இல்லாமல் விநியோகம் செய்யும் வகையிலும், எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காகவும், அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு ஒரு நாள் முழுவதும் தேவைப்படுகிறது என்பதையறிந்த கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தாட்கோ நிதி உதவியுடன் 100 நகரும் நியாய விலைக் கடைகள் அமைத்து, பொருட்களை அவர்கள் குடியிருக்கும் இடத்திலேயே வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 3–25

பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006–ஐ நடைமுறைப்படுத்துவதற்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் தடையாணை வழங்கப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. இப்பொருள் குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக்

கொண்டு சென்று விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ளிக் கொடுப்பதில் வான் மழை மேகமே! அன்பின் விளக்கமே! ஆற்றலின் முழக்கமே! வீர வரலாறு படைத்திடும் சாதனைத் தாயே! நல்லவர்கள் எல்லோரும் வாழ்த்தும் மாதரசியே! ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த இவ்வின மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், கலங்கரை விளக்கமாய் வழி நடத்தும் எங்களின் தாயே! தமிழே! தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்பதை நிரூபித்துக்காட்டிய சரித்திர நாயகியே! தர்மத் தாயே! தங்கத் தலைவியே! ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் ஒட்டுமொத்த சமுதாயத்தின் உயிர் மூச்சே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்களின் கருணைப் பார்வையால் ஆதி திராவிடர்களுக்கெல்லாம் வாழ்வில் வசந்தத்தை அள்ளித் தந்த தெய்வத் திருமகளே!

சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இணையாக ஆதி திராவிடர்கள் வாழ வேண்டும், வளம் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கில் தாட்கோ திட்டத்தின்கீழ் பயன்பெற குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ஒரு இலட்சமாக உயர்த்தித் தந்த வள்ளலே! கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தாட்கோமூலம் பெறும் கடன்களுக்கான மானியமாக ரூபாய் 25 ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் தாட்கோ மானியத்தை, செய்யும் தொழிலுக்கேற்ப திட்டத் தொகையில் 30 சதவிகிதம், அதிகபட்சமாக ரூபாய் 2.25 இலட்சமாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் தாட்கோ பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின்கீழ் 3,73,761 பயனாளிகளுக்கு அதிகபட்ச மானியமாக, நபருக்கு ரூ.25,000/– வீதம் 196.10 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் 3 ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஒளிவு மறைவற்ற முறையில் 1,29,175 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒருவருக்கு அதிகபட்சமாக 2.25 இலட்சம் ரூபாய் வீதம் 262.53 ரூபாய் கோடி நிதியினை மானியமாக வழங்கி, முழுமையான பொருளாதார முன்னேற்றத்தை



ஏற்படுத்தித் தந்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்ற மேல்குடி மக்களின் தொழிலாக மட்டுமே இருந்த பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லரை விற்பனை நிலையத்தினை நடத்தும் அரிய வாய்ப்பு தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவின் கருணையால், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, அடித்தட்டு மக்களாம் ஆதி திராவிடர் மக்களுக்கும், கிடைத்திடும் வகையில், 2013–2014 ஆம் ஆண்டில் 22.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டு, 3 நபர்கள் விற்பனை நிலையத்தினை அமைத்துள்ளனர் என்பதையும் இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காடு, மலைகளில் வாழ்ந்து வந்த பழங்குடியினரையும் தொழில் செய்திட உதவும்வண்ணம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக 43 பழங்குடியினருக்கு ரூ.2.28 கோடி செலவில் இலகு ரக வாகனங்கள் வாங்கிட வழிவகை செய்துள்ளார்கள். இவர்களுக்கு திட்டத் தொகை மானியமாக 50 சதவிகிதம், அதிகபட்சமாக ரூபாய் 3.75 இலட்சம் வரை மானியத்தை வாரி வழங்கிய வள்ளலாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

குடும்பச் சொத்துகளைப் பாதுகாப்பதில் பெண்கள் அதிக கவனமாகவும், பொறுப்புடையவர்களாகவும் உள்ள காரணத்தால், மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயனாளிகள் 2.50 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் வாங்கலாம். தற்போது 2011 முதல் 2014 வரை 3 ஆண்டுகளில் 291 ஆதி திராவிட மகளிர் நிலம் வாங்கிட ரூ.180.52 இலட்சம் மானியமாக வழங்கி, ஆதி திராவிடர் பெண்களை நில உரிமையாளராக்கிய பெண்களின் பாதுகாவலராகவும், பூமித் தாயாகவும் திகழ்கிறார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூட்டாக தொழில் செய்திட 2011–2014 ஆகிய 3 ஆண்டுகளில் 63,204 உறுப்பினர்களுக்கு தலா ரூபாய் 2.50 இலட்சம் வரை மானியமாக மொத்தமாக ரூ.92.45 கோடி அளித்தும், 44,387 சுய உதவிக் குழு

உறுப்பினர்களுக்கு ரூ.5.96 கோடி சுழல் நிதி வழங்கியும் ஆதி திராவிட மகளிர் வாழ்வில் பொருளாதார முன்னேற்றத்தினைக் காண வழிவகை செய்த கற்பகத் தருவாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

ஆதி திராவிட இளைஞர்கள் போட்டித் தேர்வில் வெற்றிபெற்று, அகில இந்திய அளவில் குடிமைப் பணி முதன்மைத் தேர்விற்கு தயார் செய்துகொள்ள அவர்களுக்கு ரூபாய் 50 ஆயிரம் வீதம் 2013–2014 ஆம் ஆண்டில் 62 நபர்களுக்கு ரூ.31 இலட்சம் வழங்கப்பட்டு, அவர்களில் 10 நபர்கள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், Group—I–ல் முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெற்று, முதன்மைத் தேர்விற்கு தயார் செய்துகொள்ள 2013–2014 ஆம் ஆண்டில் ஆதி திராவிட விண்ணப்பதாரர் ஒருவருக்கு ரூ.50 ஆயிரம் வீதம் 32 நபர்களுக்கு ரூ.16 இலட்சம் நிதி உதவியும் வழங்கிய வள்ளலே! தமிழக வரலாற்றில் முதன்முறையாக சட்டம் பயின்ற ஆதி திராவிட வழக்கறிஞர்கள் சொந்தமாக தமது அலுவலகம் அமைத்திட மானியமாக ரூபாய் 50 ஆயிரம் வீதம் 2012–2013 மற்றும் 2013–2014 ஆம் ஆண்டில் 1,187 சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு ரூ.5.94 கோடி வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மருத்துவம் பயின்ற ஆதி திராவிட மாணாக்கர்கள் சொந்தமாக மருத்துவ மையம் அமைப்பதற்கு 2012–2014 வரை 38 மருத்துவர்களுக்கு ரூ.45.64 இலட்சம் திட்டத்தினைப் பொறுத்து மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–30

தாட்கோவின் திட்டச் செயல்பாடுகளை முழுமையாக மக்களுக்குக் கொண்டு செல்லவும், இடைத்தரகர்கள் இன்றி, பயனாளிகளுக்கு நேரடியாக பயன்கள் சென்றடைவதை உறுதி செய்யவும், இணையதளம்மூலம் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் திட்டம், 2012–2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டத்தினால், விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பத்தின் நிலையினை அனைத்து நிலைகளிலும் தெரிந்துகொள்ள வடிவமைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்கும் முறையினை எளிதாக்கும்வண்ணம் பல மாற்றங்கள் இவ்வாண்டில் ஏற்படுத்தப்படவுள்ளன.



தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், சமூக நலக் கூடங்கள் மற்றும் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் போன்ற பணிகளை மேற்கொள்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த மூன்றாண்டு ஆட்சியில், தாட்கோவிற்கு ரூ.235.20 கோடி, 2,159 கட்டுமானப் பணிகளுக்காக வழங்கப்பட்டன. அவற்றில் ரூ.142.15 கோடி மதிப்பிலான 1,975 கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டும், ரூ.75.61 கோடி மதிப்பிலான கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் முன்னேற்றத்தையே கருத்தில்கொண்டு நல்ல பல திட்டங்களை வகுத்துவரும் தமிழகத்தின் வாழும் அம்பேத்கர் அவர்களே! ஏற்றமிகு திட்டங்களினால் இன்று ஆதி திராவிடர் மக்களின் வாழ்வில் மாற்றத்தினைத் தந்தீர்கள் அம்மா. ஒட்டுமொத்தத் தமிழகமே உங்கள் பக்கம் என்பதை நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலும் நிரூபித்துக் காட்டிய தைரிய லட்சுமியே! (மேசையைத் தட்டும் ஒலி) வரும் சட்டமன்றத் தேர்தலிலும் 100 சதவிகித வெற்றியும் அம்மா அவர்களின் பக்கமே என உறுதி செய்யப்பட்டுள்ளது அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என பணிவுடன் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மக்களின் மேல் பற்றும், பாசமும் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் இவ்வின மக்களுக்கு, எண்ணிப் பார்க்க முடியாத சிறப்பான திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்படுகின்றன. சாதிப் பெயரைச் சொல்லி கட்சி நடத்துபவர்கள் தங்களை முன்னிறுத்தி கட்சிப் பிழைப்பு நடத்தியும், காணாமல் போனவர்களுடன் கூட்டணி அமைத்தும், ஆதி திராவிடர் மக்களுக்கு இதுவரை ஏதும் செய்யவும் இல்லை;

கூட்டணிக் கட்சிக்காரர்களிடமிருந்து ஆதி திராவிடர் மக்களுக்காக ஏதும் கேட்டுப் பெற்றதாகவும் சரித்திரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார், தம் மக்கள் நலம் ஒன்றே தான் மனதில் கொள்ளுவார் என்னும் வகையில் சிலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களோ, தன்னலம் கருதாமல் தமிழ் மக்கள் நலன் ஒன்றே என்று நொடிப் பொழுதும் எண்ணிச் செயல்படும் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தட்டு மக்களாம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை எல்லாவிதத்திலும் முன்னேற்றமடையச் செய்வதை தன்னுடைய அடிப்படை கடமையாகக் கொண்டுள்ளார். இதற்கு இவ்வின மக்கள் எப்பொழுதுமே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மட்டுமே நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் அம்மா என்று மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) Be a Hero, Always say, "I have no fear", என்று சுவாமி விவேகானந்தர் கூறியதற்கேற்ப ஆட்சி, அன்பு, மனிதநேயம் ஆகியவற்றிற்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் சாரணர் சாரணியர் இயக்கம் செயல்படுத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாரணர் சாரணியர் இயக்கத்தினை சீரிய முறையில் செயல்படுத்திட ஒரு பள்ளிக்கு ரூ.55,000/– வீதம், 207 பள்ளிகளுக்கு ரூ.113.85 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**2. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை பராமரிக்கும்பொருட்டு ரூ.10,000/– செலவினத் தொகை வழங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 1,096 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் உள்ள குழல் விளக்கு, மின் விசிறி மற்றும் தண்ணீர்க் குழாய் ஆகியவற்றினைப் பராமரிக்க ஒரு பள்ளிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் ரூ.109.60 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. மலைப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ/மாணவியருக்கு (6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை) சூரிய எரிசக்தியுடன்கூடிய விளக்கு (Solar Lamp) வழங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் மலைப் பகுதிகளில் இயங்கிவரும் 216 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று வரும் 13,154 மாணவ/மாணவியருக்கு முதற்கட்டமாக ஒரு மாணவருக்கு ஒரு சூரிய எரிசக்தியுடன்கூடிய விளக்கு (Solar Lamp) ரூ.550/– மதிப்பில் ரூ.73.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4.. பள்ளி மாணவ/மாணவியரை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியரை கல்விச் சுற்றுலா அழைத்துச்செல்ல ஒரு பள்ளிக்கு ரூ.25,000/வீதம், 207 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.51.75 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–35

**5. ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு பொது நுழைவுத் தேர்வுக்கான (CAT) பயிற்சி அளித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தொழிற்கல்வி பயிற்றுவிக்கும் பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பு படித்து தேர்ச்சி பெற்ற ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவ, மாணவியர்கள் IIM போன்ற மைய அரசின் கல்வி நிறுவனங்களில் MBA போன்ற மேற்படிப்பு படிக்க Common Admission Test (CAT)–ல் தேர்ச்சி பெற வேண்டியுள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 100 பொறியியல் பட்டதாரிகளைத் தேர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் CAT தேர்வு எழுதுவதற்கான ஆயத்த பயிற்சி அளிக்க ஒரு மாணவருக்கு ரூ.50,000/– வீதம் ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

**6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கும் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் முதலுதவிப் பெட்டி வழங்குதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு சிறு, சிறு விபத்துகள் நேரிடும்போது அவர்களுக்கு முதலுதவி அளித்திடும்பொருட்டு, முதலுதவிப் பெட்டி தேவைப்படுகிறது. எனவே, 1,346 விடுதிகளுக்கும், 100 அரசு பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் தலா ஒரு முதலுதவிப் பெட்டி ரூ.3,400/– விலையில் மொத்தம் ரூ.49.16 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. ஆதி திராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுகாதார குட்டை தகளி (Napkin Burner) வழங்குதல்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 110 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 75 மேல்நிலைப் பள்ளிகளில் 32,112 மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளி மாணவியரின் சுகாதார நலனைப் பாதுகாக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒரு பள்ளிக்கு ஒரு சுகாதார குட்டை தகளி ரூ.25,000/– மதிப்பில் 185 ஆதி திராவிட நலப் பள்ளிகளுக்கு ரூ.46.25 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**8. குன்னூர் மற்றும் கூடலூர் கோட்டங்களில் சிறப்பு தனி வட்டாட்சியர் அலுவலகம் தோற்றுவித்தல்**

நீலகிரி மாவட்டத்தில் 32,813 பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். மாவட்ட தலைமையகமான உதகமண்டலத்திலிருந்து குன்னூர் மற்றும் கூடலூர் பகுதிகள் 40 கி.மீ. தொலைவில் உள்ளதால் மக்கள் நல அரசுத் திட்டங்கள் பழங்குடியின மக்களை எளிதில் சென்றடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, குன்னூர் மற்றும் கூடலூர் பகுதிகளுக்கு தனி வட்டாட்சியர் அலுவலகம் புதியதாக தோற்றுவிக்கப்படும். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.40.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**9. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 207 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கிடையே மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, பின்னர் மாநில அளவில் போட்டிகள் நடத்தி சான்றிதழுடன் பரிசுகள் வழங்கப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.26.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**10. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு யோகா வகுப்பு நடத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் 1,397 பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு யோகா பயிற்சி அளிக்க

முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்பொருட்டு, முதலில் ஆசிரியர்களுக்கு யோகா பயிற்சி அளித்து, பின்னர் அவர்கள் மாணாக்கர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கும் வகையில், முதற்கட்டமாக 100 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 107 உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கு ஒரு பள்ளிக்கு 2 ஆசிரியர்கள் வீதம் 414 ஆசிரியர்களுக்கு அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம் வாயிலாக ரூ.16.80 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**11. மனிதநேய வார விழாவை சிறப்பாக நடத்துவதற்கான தொகையினை உயர்த்துதல்**

தீண்டாமையை ஒழிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதி வரையில் அனைத்து மாவட்டங்களில் மனித நேய வார விழா நடத்தப்படுகிறது. இவ்விழாவினை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு ஏதுவாக ஒரு மாவட்டத்திற்கு தற்போது வழங்கப்படும் ரூ.15,000/–ஐ ரூ.50,000/– ஆக உயர்த்தியும், மாநில அளவில் இவ்விழாவினை நடத்துவதற்கு தற்போது வழங்கப்படும் ரூ.65,000/–ஐ ரூ.1.00 இலட்சமாக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**12. சமபந்தி போஜனத் தொகையினை உயர்த்துதல்**

தீண்டாமையை ஒழிப்பதற்காகவும், மத நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காகவும், மாவட்டங்களில் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. இவ்விருந்தினை மேலும் சிறப்பாக நடத்திடும் வகையில் சென்னை மாவட்டம் நீங்கலாக ஒரு மாவட்டத்திற்கு 1,000 நபர்களுக்கு உணவளிக்க மாநில அரசின் பங்குத் தொகையினை ரூ.2,500/–லிருந்து ரூ5,000/– ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டம் ரூ.1.55 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்படும்.

**13. இந்திய குடிமைப் பணி மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (தொகுதி–1) முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் பழங்குடியின தேர்வர்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

இந்திய குடிமைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (தொகுதி–1) முதனிலைத் தேர்வில் தேர்ச்சிபெறும்



பழங்குடியின தேர்வர்களுக்கு முதன்மைத் தேர்வினை எழுத ஆகும் இடைநிகழ் செலவினை மேற்கொள்ள ஏதுவாக ஒரு தேர்வருக்கு ரூ.50,000/– வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்கான செலவினம் மைய அரசின் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியது செய்வது அம்மா, காவேரித் தாய் ஈன்றெடுத்த காவியத் தாய் அம்மா, இருவிரலால் தமிழ்நாட்டை அளந்த அளவுகோல், அனைவருக்கும் அன்பு காட்டும் தனிப்பெருங்கருணை, அனைவரின் பசிப் பிணி போக்கிய அருட்பெரும் ஜோதி, அறியாமை என்னும் இருளைப் போக்கி மக்கள் நெஞ்சில் நீங்காமல் வாழ்ந்துவரும் ஒளி விளக்கு, புன்னகை என்னும் மந்திரத்தால் பூமியைப் புதுப்பித்த புண்ணியத் தலைவி, கொள்கையாலும், செயலாலும் மக்களின் வாழ்வில் ஏற்றம் தந்த எங்கள் தலைவியே, அம்மா, இவ்வுலகம் உள்ளளவும் அம்மா அவர்களின் புகழ் ஓங்கி நிற்க வேண்டுமென்று என்றென்றும் வணங்கி நிற்கும் கோடானுகோடி தொண்டர்களில் கடைக்கோடி தொண்டனாய் என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த இம்மானியக் கோரிக்கை மீதான வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தின்போது அரிய கருத்துகளையெல்லாம் தெரிவித்துள்ளார்கள். இவற்றிற்கெல்லாம் எனது பதிலுரையில் போதுமான விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன எனக் கருதுகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்களால் கூறப்பட்ட அரிய கருத்துகளை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று அனைத்தையும் நிறைவேற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 3–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. க. பாலகிருஷ்ணன், என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆசிரியர்கள், ஊழியர்கள் பணி மாறுதல் செய்கின்றபோது, கவுன்சலிங்மூலமாக கலந்துரையாடல் நடத்தி செய்கின்ற நடைமுறையை நம்முடைய அரசு பின்பற்றி வருகிறது. ஆதி திராவிடர் நலத் துறையில் இந்த ஆண்டு அப்படி கலந்துரையாடல்மூலமாக பணிமாறுதல் செய்யப்படவில்லை என்கின்ற அந்த முறையை மாற்றி கவுன்சலிங் மூலம் பணி மாறுதல் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பி.வி. கதிரவன், என்னவென்று சொல்லுங்கள்.*

****திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையில், உசிலம்பட்டியில், காந்திஜி மற்றும் ராஜன்பாபு விடுதி என்கின்ற ஆண்கள் பள்ளி விடுதிகள் இருந்து வருகின்றன. அந்த விடுதிகளிலே தலா 50 மாணவர்கள் படித்து வருகிறார்கள். இந்த விடுதிக் கட்டடம் கட்டி கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தக் கட்டடம் பழமையானதாகவும், பழுதடைந்ததாகவும் இருக்கின்றது. அதற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதையும், ஏற்கெனவே தலா 50 மாணவர்கள் படித்து வருவதை, 100 மாணவர்களாக உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ப. டில்லி பாபு, என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் பகுதி, பாலவாக்கத்தில் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. 10 ஆண்டு காலமாக இடமே இல்லாமல், 4,000 சதுர அடியில். . .*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள்தான் மானியக் கோரிக்கைமீது பேசினீர்களே, பிறகு திரும்பவும் எதற்குப் பேசுகின்றீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு, உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் ஆதி திராவிடர் நலத் துறையிலே ஆசிரியர்களுடைய பணி மாறுதல் கலந்தாய்வு மூலமாக நடைபெறுவது கடைப்பிடிக்கப்படுகிறதா என்று கேட்டுள்ளார். கலந்தாய்வு மூலமாகத்தான் இந்த ஆண்டு பணிமாறுதல் நடைபெறுகிறது. குறிப்பாக ஒரு சில விடுதிகளில் காப்பாளர்களாக இருப்பவர்கள் ஏதேனும் தவறு செய்திருந்தால் நிருவாகக் காரணங்களுக்காக உடனடியாக மாற்றப்பட்டிருப்பார்கள். இந்தத் துறையிலே ஏதோ தவறு நடப்பதுபோன்று அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார். ஏதாவது ஒரு விடுதியில், காப்பாளர் தவறு செய்திருந்தால், நிருவாக காரணத்தினால் அவர்களை உடனே மாற்றியிருப்பார்கள். மற்றபடி கவுன்சலிங் மூலமாகத்தான் பணி மாறுதல் நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

*மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*“ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,795,00,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.199,14,99,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர்*

மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–7–2014) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

139. மானியக் கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014–2015. (தமிழ், ஆங்கிலம்)

140. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2014–2015. (தமிழ், ஆங்கிலம்)

141. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2014–2015. (தமிழ், ஆங்கிலம்)

142. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014–2015. (தமிழ்)



143. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை. (2013–2014)

144. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினேழாவது அறிக்கை. (2013–2014)

145. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினெட்டாவது அறிக்கை. (2013–2014)

146. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை. (2013–2014)

147. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2013–2014)

148. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தொன்றாவது அறிக்கை. (2013–2014)

149. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்திரண்டாவது அறிக்கை. (2013–2014)

150. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2013–2014)

151. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2013–2014)

152. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தைந்தாவது அறிக்கை. (2013–2014)

153. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தாறாவது அறிக்கை. (2013–2014)

154. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தேழாவது அறிக்கை. (2013–2014)

155. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தெட்டாவது அறிக்கை. (2013–2014)

156. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்தொன்பதாவது அறிக்கை. (2013–2014)

157. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2013–2014)

*****